உதயன்

ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 02 புதன்கிழமை (18.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 265

# வடக்கு மக்கள் மீது அரசுக்கு சந்தேகம் அதிகபட்சம் உண்டு

## தமது நிலைப்பாடும் அதுவே என்கிறார் கோத்தபாய



ஆணைக்குழு முன் கோத்தபாய சாட்சியமளிக்கும் போது...

கொழும்பு, ஓகஸ்ட் 18

வடபகுதி வாழ் மக்கள் மீது அரசாங்கத்துக்கு அதிகபட்சமான சந்தேகம் உண்டு. எனது நிலைப்பாடும் அதுவே. அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த மக்களின் மனங்களில் விடு தலைப் புலிகள் தொடர்பில் இன்னமும் அனு தாபம் உள்ளது.

வடபகுதியைச் சேர்ந்த மக்கள் மத்தியில் சரண் அடையாத விடுதலைப் புலிகள் இன் னும் எத்தனை பேர் உள்ளனர் என்றோ, அடையாளம் காணப்படாதவர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்றோ எமக்குத் தெரியாது. அவர்களில் பலர் பல ஆண்டுகளாக விடுதலைப் புலிகளின் கொள்கைகளுக்கு ஆதரவாக மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள். அவர்களே மிக மோசமானவர்கள். அவர்கள் தொடர்ந்தும் புலிகளுக்கு ஆதரவளிப் பார் கள் என்பது சர்வ நிச்சயம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன்னால் நேற்று சாட்சியம் அளிக்கையிலேயே பாதுகாப்புச் செயலாளர் இதனைத் தெரிவித்தார். இந்த ஆணைக்குழுவின் விசாரணை நேற்று ஆறாவது நாளாக நடைபெற்றது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசார ணைகளின் போது கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புலிகளின் கொள்கைக்கு ஆதரவாக மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள் இன் னும் வடக்கில் உள்ளனர். அவர்களின் மன தில் புலிகள் தொடர்பில் அனுதாபம் இன் னும் உள்ளது. இவர்கள் தான் நாட்டுக்கு அச்சுறுத்தலானவர்கள். எனவே தான் வடக்கு மக்கள் மீது அரசு சந்தேசம் கொண் டுள்ளது.

போரின் இறுதிக் கட்டத்தில் 6,000 இரா ணுவத்தினர் கொல்லப்பட்டனர். 30,000 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்

(24ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வின் இப்போது பின்வரிசையில்...

கொழும்பு, ஓக. 18

பிரதி அமைச்சர் பதவியில் இருந்து நீக் கப்பட்ட மேர்வின் சில்வாவுக்கு நாடா ளுமன்றில் பின் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி அதிகாரி ஒருவரை மரத்தில் கட்டிவைத்தமைக்காக மேர்வின் சில்வா

(24ஆம் பக்கம் பார்க்க)

## நாங்கள் தீவிரவாதிகள் அல்லர் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள்

### 'சன் சீ' கப்பல் தமிழ் அகதிகள் கனேடியப் பத்திரிகைக்குக் கடிதம்

கொழும்பு, ஓக.18

'சன் சீ' கப்பல் மூலம் கனடாவைச் சென்ற டைந்துள்ள ஈழத் தமிழ் அகதிகள், ''நாங் கள் தீவிரவாதிகள் அல்லர், போரினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள்'' என்று கனடா வில் இருந்து வெளிவரும் 'நஷனல் போஸ்ட்' என்ற பத்திரிகைக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:- (24ஆம் பக்கம் பார்க்க)

## கே.பியின் மனதை மாற்றுவதில் இராணுவம் வெற்றி கண்டுள்ளதாம்

கொழும்பு, ஓக. 18

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான கே.பி. என்று அழைக்கப் படும் செல்வராசா பத்மநாதனின் மனதை மாற்றுவதில் இராணுவம் வெற்றி கண் டுள்ளது.

- இவ்வாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுச் சாட்சியமளித்த போதே மேற்கண்டவாறு கூறினார். அவர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா மீதான தீர்ப்பை எதிர்த்து சபையில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஓக. 18

சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் நேற்று நாடாளு மன்றில் ஆர்ப்பாட்டம் நடத்தின.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் சபாபீடத்துக்கு முன்னால் வந்து நின்று கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தியமையால் சகல நடவடிக்கைகளும் 5 நிமிடங்கள் ஒத் திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற

(24ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

### அனுமதி பெறாமல் பேரணி நடத்தினராம்

கொழும்பு, ஓக. 18

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்களான பா.அரியநேத்திரன், பொன். செல்வராசா, எஸ்.யோகேஸ்வரன் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரட்ணம் மற்றும் கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் கே.ஜெயராஜா ஆகியோரை எதிர் வரும் 7ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகு மாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரி கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று இடம்பெற் றது. இதுதொடர்பாக பொலிஸார் நீதிமன் றத்தில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித் திருந்தனர். இதனை அடுத்தே இவர்களை

(24ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புக்கான திருத்தங்கள் படிப்படியாக முன்வைக்கப்படும்

### புதிய அரசமைப்பை உருவாக்க அரசுக்கு அதிகாரமில்லையாம்

கொழும்பு, ஓகஸ்ட் 18

புதிய அரசமைப்பை உருவாக்குவ தற்கு எமக்கு அதிகாரம் இல்லை. எனவே, அரசமைப்புத் திருத்தங்களைப் படிப்படி யாக முன்வைக்கும் முயற்சிகளையே அரசு மேற்கொண்டு வருகிறது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரும், அமைச் சருமான நிமல் சிறிபால டி சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தி யா ளர் மாநாடு நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற் றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொரு ளாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்

(23ஆம் பக்கம் பார்க்க)




## தேசிய பாதுகாப்புத் தினத்தை இம்முறை யாழ்ப்பாணத்தில் கொண்டாட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 18

தேசிய பாதுகாப்பு தினம் இந்த வருடம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட உள்ள தாக அறிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் டிசெம்பர் 26ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் இந்தக் கொண் டாட்டங்களை நடத்தவும் முடிவாகியுள்ளது.

இதுதொடர்பான ஆரம்பக் கலந்துரையா டல் ஒன்று நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயிற்சி மற் றும் பொதுமக்கள் விழிப்புணர்வு நிலையப் பணிப்பாளர் நந்தரட்ண தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர்.

2006ஆம் ஆண்டுமுதல் தேசிய பாது காப்பு தினம் கொண்டாடப்பட்டு வருகின் றது. முதலாவது வருடம் காலியிலும் அடுத்த வருடம் இரத்தினபுரியிலும் தொடர்ந்து கண்டியிலும், குருநாகலிலும் இதுதொடா பான நிகழ்வுகள் இடம்பெற்றன.

(23ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு!

### ஒரு நற்செய்தி

2010ஆம் ஆண்டு 08ஆம் மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகவுள்ள மாணவர்களுக்கு பெரும் சிரமத்தின் மத்தியிலும்

### இறுதி நேரத்தில்
### முற்றிலும் எதிர்பார்க்கக்கூடிய

5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் **120/=**

(ஒரு மாதிரி வினாத்தாள் 80g பேப்பரில் 14 பக்கங்களை உடையது.)

வினாத்தாள்களைப் பெறவிரும்பும் பெற்றோர்கள் கீழ்வரும் புத்தகசாலைகளுடன் தங்கள் பதிவுகளை உடன் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

- பூபாலசிங்கம் - யாழ்.
- மொடேன் - நெல்லியடி.
- பாக்யா - கொக்குவில்.
- துர்க்கா - சுன்னாகம்.
- வலம்புரி - வட்டுக்கோட்டை
- அன்னை - யாழ்.
- செல்லாச்சி - பருத்தித்துறை
- பொதிகை - சாவகச்சேரி.
- அருள்நாயகி - கொடிகாமம்.
- சாரங்கன் - யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்திற்கு அருகில்

பதிவு செய்யப்பட்ட புத்தகசாலைகளுக்கு இன்று பி.ப.4 மணிக்கு வினாப் பொதி வழங்கப்படும். வினாத்தாள் தேவைப்படும் புத்தகசாலைகள் தெ.பே. 0778448763, 0213216922 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 12 மணித்தியாலத்தில் வினாத்தாள்கள் வழங்கப்படும்.

(102193) **கொழும்பு எக்ஸ்பிறஸ் வெளியீடு.**


# கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றப் பதிவுக்கு காலக்கெடு அறிவிப்பு

கிளிநொச்சி, ஓக.18

கிளிநொச்சி, பூநகரி, கண்டாவளை பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த தற்காலிகமாக வெளிமாவட்டங்களில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கான மீள் குடியமர்வு பதிவுகளை இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர்வுப் பதிவுக்காக தற்காலிகமாகத் தங்கியுள்ள இடத்தின் பிரதேச செயலகங்களில் உரிய முறையில் பதிவு நீக்கம் செய்து கடிதத்துடன் வந்து பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் மீள்குடியேற்றப் பதிவுகளை மேற்கொள்பவருக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படமாட்டாது என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ-10)


**சந்திரகாந்தன் திருமண சேவை**

அரச பதிவு : VW/FIN/R/I/12/2009

உள்நாட்டு வெளிநாட்டு மாப்பிள்ளை, பெண்கள் அனைத்து மணமக்கள், மணமகன் மணமகள் உண்டு. ஆனந்தி, தொல்புரம் மத்தி, சுழிபுரம்

தொ.பே.: 0775081756, 0215680063 Fax: 0212223734.

E-Mail : VADDU_SIVAN@yahoo.com

**KIDS BASIC DRIVES**

சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி, Game தொடர்பான வகுப்புகள் நடைபெறுகின்றன. 23.08.2010 இல் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

தொடர்பு: 0213206695, 0773114803, 0779213846

**தவறிவிட்டன**

கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய கோபாலகிருஸ்ணன் செல்வகுமார் (802431279V) எனும் இலக்கமுடைய தே.அ.அட்டை மற்றும் உசாந்தினி செல்வகுமார் தே.அ.அட்டை (806902187V) அத்துடன் சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அடையாள அட்டை என்பன திருநெல்வேலிக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையே தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்.)

கோ.செல்வகுமார்
இல.15, யாழ்.வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: தொ.பே.: 0779596779




## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 13.12.1926

விண்ணில் 19.07.2010

அமரர்
**கந்தப்பு சோமசுந்தரம்**
(முன்னாள் தொலைத் தொடர்பு திணைக்கள இலிகிதர்)

கடந்த 19.07.2010 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் இறுதிக் கிரியைகளில்கலந்து கொண்டோருக்கும், மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் உதவிகள் புரிந்தோருக்கும் அனுதாபச் செய்தி தெரிவித் தோருக்கும் வெளிநாடு வாழ் உறவுகள், நண்பர்கள்,மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எமது இதயங் கலந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (18.08.2010) புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.50/6, செட்டித்தெரு, நல்லூர். (102183)

## துயர் பகிர்கின்றோம்



பழம்பெரும் பிரபல வர்த்தகரும், எமது ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தர்மப் பணிகளில் முதன்மைப் பணியான அன்னதானப் பணிக்கு கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக உதவிக் கொண்டு இருப்பவரும், எமது ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிரியமான அபிமானியும், களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான

திருவாளர்
**எஸ்.வி.முருகேசு**
(S.V.M.)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.

## பொன்னாலை பெருமாள் கோயிலில் இம்முறை விசேட பூசைகள் இடம்பெறும்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலயத்தில் இவ்வருடம் ஆவணி மாத மஹோற்சவம் நடைபெறமாட்டாது என்று ஆலயப் பரிபாலன சபை தெரிவித்துள்ளது. ஆலயத்தின் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவதால் உற்சவ காலத்தில் விசேட அபிஷேகங்கள் பூசைகள் இடம்பெறும் எனவும் சபை அறிவித்துள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரலஷ்மி விரதத்தையொட்டி அன்றைய தினம் காலை 8 மணிக்கு வரலஷ்மி பூசை மற்றும் நூல் கட்டுதல் இடம்பெறும் எனவும் செப்ரெம்பர் முதலாம் திகதி தேர்த்திருவிழா தினத்தையொட்டி விசேட பூசைகளும் இரவு கிருஸ்ண ஜெயந்தி விழாவும் பாவனைகளும் இடம்பெறும்.

தீர்த்தத்திருவிழா காலத் திருவிழாவையொட்டி சிறப்புப் பூசைகளும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆஞ்சநேயர் பெருமானுக்கு விசேட பூசைகளும் இடம்பெறும். (ஒ-322)

## கண்ணீர் அஞ்சலி



எமது மருமகன்
சோதிநாதன் சிவகுமார் அவர்களின் அன்புத் தாய்

திருமதி
**சோதிநாதன் தவஞானபாக்கியம்**
(ஞானம்)

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.

க.இராசரத்தினம் குடும்பத்தினர்.

(102191)

## இடமாற்றம் பெற்ற ஆசிரியருடன் சந்திப்பு

இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.மாவட்ட கிளை ஏற்பாட்டில் வட மாகாண வலயங் கள், மாகாணங்களுக்கிடையே இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரிய குளச் சந்தியிலுள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் இடம்பெறும் என்று சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகான தீர்வுகள் பற்றியும் கலந்துரையாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-323)

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் செல்லமுத்து



கொக்குவில் கிழக்கு, 72/1, பிரம்படி லேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் செல்லமுத்து நேற்று (17.08.2010) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், ஜெயக்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), சிவகுமார், தங்கேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு தாயும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் (S.M.), விக்னேஸ்வரி மற்றும் யசோதரா (ஆசிரியை, யா/பெரியபுலம் ம.வி.), தயாபரன் ஆகியோரின் அன்பு மாமியும் செந்தூரன், ஆரூரன், தேனுஜன், டினேஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2010) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.ஜெயக்குமார் (மகன்).
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்).

72/1, பிரம்படி லேன், கொக்குவில். (102188)

## மரண அறிவித்தல்



### திருமதி சோதிநாதன் தவஞானபாக்கியம் (ஞானம்)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிநாதன் தவஞானபாக்கியம் நேற்று (17.08.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மருதபிள்ளை சோதிநாதனின் (முன்னாள் வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் - M.L.T.) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான மருதபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவகணேசன் (பிரதேச செயலகம் - உடுவில்), சிவானந்தி (பிரதேச சபை - நல்லூர்), சிவகுமார் (பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), சிவநாதன் (முகாமையாளர் - இந்து யாத்திரிகர் விடுதி, கதிர்காமம்), சிவனேசன் ஆகியோரின் அருமைத் தாயும் மலர்விழி (கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை, சுன்னாகம்), பிரதாபன் (பிரதேச சபை - நல்லூர்), சிவஜோதி (யா/கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்-சண்டிலிப்பாய்.) ஆகியோரின் அன்பு மாமியும், சோபிகா, ரேணுகன், நிலக்ஷிகா, சாருகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தனேஸ்வரி,சிதம்பரராணி காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் யோகராணி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2010) வியாழக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள் [illegible]

"சாந்திபவனம்"
சித்தன்கேணி. (102190)


## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் உணவகத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை. கவர்சிகரமான சம்பளம், அலவன்ஸ், தங்குமிட வசதி என்பன வழங்கப்படும். தகுதியுள்ளவர்கள் உங்களின் சுய விபரங்களுடன் 20/08/2010 வரும் வெள்ளிக்கிழமை எம்மை நேரில் சந்திக்கவும்.

1. சமையல்காரர்/Cook (ஆண்/பெண்)
   யாழ். உணவுகள் சமைக்கத்தெரிந்தவர்கள் - தகமை : முன் அனுபவம் உள்ளவர்கள்
2. சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)
   காய்கறி நறுக்குதல், பாத்திரம் கழுவுபவர்கள், சுத்தப்படுத்துவோர்
3. உதவியாளர்
   பார்சல் கட்டுதல், உணவுபரிமாறுதல்

மேலதிக விவரங்களுக்கு:
No.12 2/1, சிறாம்பியடி ஒழுங்கை (ஆரிய குளச் சந்திக்கு அருகாமையில்), யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2224550, 0777585913, 0777222422


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நமது சிறார்களுக்கு மேலும் ஒரு சுமையா, என்ன?

அரச பாடசாலைகளில் சீனமொழியையும் ஒரு பாட நெறியாக அறிமுகப்படுத்தவேண்டும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கருத்து வெளியிட்டிருக்கிறார். இதற்கு முன்னோடியாக கொழும்பு லும்பினி பாடசாலையில் ஏற்கனவே சீனமொழி கற்பிக்கப்படுவதாக அவர் பெருமையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்விக் கூடங்களில் நம் சிறார்களுக்குத் தாய்மொழியுடன் ஏனைய தேசிய மொழிகள் - குறிப்பாக தமிழ் பிள்ளைகளுக்கு சிங்களமும் சிங்களப் பிள்ளைகளுக்கு தமிழும் - கற்பிக்கப்படவேண்டும் என்பது எதிர்காலத்தில் தேசிய நல்லிணக்கத்துக்கும் அமைதிக்கும் பேருதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

சிங்களம் மட்டும் என்ற கொள்கையே நாட்டின் இன்றைய சீர்கேடுக்கெல்லாம் காரணமாக இருந்துள்ளது. இனிமேலும் அந்நிலை தொடராமல் இருக்க தமிழ் சிறார்களுக்கு சிங்களமும் சிங்கள சிறார்களுக்கு தமிழும் ஆரம்ப நிலையிலிருந்தே கற்பிக்கப்படவேண்டும் என்ற கருத்தை அண்மையில்தான் ஜனாதிபதி ராஜபக்ஷ கிளிநொச்சியில் ஒரு நிகழ்ச்சியில் வலியுறுத்தியிருந்தார்.

ஏறத்தாழ 50 வருடங்களுக்கு முன்னர் அரசுத் தலைவர்களால் இழைக்கப்பட்டுவிட்ட ஒரு தவறு இன்று அதே வழிவந்த அரசுத் தலைவரால் உணரப்பட்டு வெளிப்படையாகவும் எடுத்தியம்பப்படுவது ஆறுதல் அளிப்பதாகும். நாட்டின் எதிர்கால மேன்மையைக் கருத்தில்கொள்பவர்கள் தொலைநோக்கோடு இம்மாதிரி விடயங்களில் இறங்கவேண்டிய அவசியத்தை நாம் சுட்டிக்காட்டவேண்டியதில்லை.

எனவே கல்வித்துறையில் பல்வேறு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு ஆவல்கொண்டு செயற்படுபவரான கல்வி அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டிருப்பது ஆழமான சிந்தனையை அடிப்படையாகக் கொண்டிருக்கவே செய்யும் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்வுக்கு மற்றும் நாட்டின் மேம்பாட்டுக்கு இந்த மொழிப் பயிற்சி எந்த அளவில் உகந்ததாய் இருக்கப்போகிறது என்ற கேள்வி எழுவது நியாயமாகும்.

சர்வதேச மொழியான ஆங்கிலத்தை ஓரங்கட்டியதன் விளைவை இந்நாடும் நாட்டு மக்களும் இன்று நன்கு உணர்ந்திருக்கிறார்கள். சுயமொழியில் உயர் கல்வி பயில்கின்ற பலர் நாட்டுக்குள்ளேயே தம் கடமைகளில் ஆங்கிலம் தெரியாததினால் தள்ளாடுவதைப் பார்க்கிறோம். எனவே இந்த பின்புலத்தினைச் சீர்செய்வதற்கான செயற்பாடுகளை அரசுத் தலைவர்கள் துரிதப்படுத்த வேண்டியதை முதலில் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழ் தெரியாத சிங்கள ஆசிரியர்களை தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்க நியமிப்பதும் அதேவிதமாக தமிழ் ஆசிரியர்களை சிங்கள பாடசாலைகளில் நியமிப்பதும் இருக்கும் நிலைமையைக் குழப்பிவிடுவதற்கே உதவும். முறையாக இரண்டு மொழிகளிலும் தேர்ச்சியுள்ளவர்களையே இத்தகைய ஆசிரியர்களாக நியமிப்பது எதிர்காலச் சந்ததியினரின் முன்னேற்றத்தை நோக்கிய செயலாக இருக்கமுடியும்.

நிற்க. சீனமொழியின் தேசிய முக்கியத்தும் பற்றி அமைச்சர் விளக்கியிருப்பதாகத் தெரியவில்லை. சீன அரசின் அனுசரணையில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதற்கட்டம் அண்மையில் நிறைவேற்றப்பட்டு அதில் தண்ணீர் நிரப்பும் பணியை ஜனாதிபதி ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்த நிகழ்வினை அடுத்தே கல்வி அமைச்சர் சீன மொழியை ஒரு பாடமாக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருப்பதாகத் தெரிகின்றது.

சீனமொழியைக் கற்கும் நம்பிள்ளைகள் சீனாவில் தொழில் தேடிப்போவர்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் அங்கே அவர்களுக்கே தொழில்பிரச்சினை இருக்கிறது. முன்னூறுகோடிக்கு மேற்பட்ட மக்களை கொண்ட அந்நாட்டிலிருந்து வெளிநாடுகளில் பணிபுரிவதற்காக குற்றமிழைத்து தண்டனை பெற்று சிறையிலுள்ள கைதிகளை கொண்டு செல்கிறார்களென்று செய்திகள் வெளிவந்துள்ளன. இந்நிலையில் சீனர்கள் வேண்டுமானால் தம் மொழியைக் கற்பிக்க இங்கு வருவதற்கு முன்வரலாம், நம் இளைஞர்கள் செல்லக்கூடிய சூழ் நிலை எழும் என்று எண்ணுவதிற்கில்லை.

சீனாசெய்யும் உதவிக்கு நாம் நன்றிபாராட்டத்தான் வேண்டும். அதற்காக அவர்கள் மொழியை நம்பிள்ளைகள் ஏன் கற்கவேண்டும். அதனால் அவர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் பயன்தான் என்ன?

சீனாவின் மனம் குளிரவேண்டும் என்பதற்கா எமது சிறார்களின் சுமைகளை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்பதில்லை.

இருந்தாலும் சீன மொழியை தம் பிள்ளைகள் கற்பது அவசியம் என்று பெற்றோர்கள் விரும்புகிறார்களா என்பது கண்டறியப்படுவேண்டும். மேலும் நாட்டில் குறிப்பிட்ட சில பாடசாலைகளில் பிரெஞ்சு, ஜேர்மன், ரஷ்ய மொழிகள் பயிற்றுவிக்கப்படுவதாக தெரியவந்துள்ளது. அந்த வகையில் தாமாகவே விரும்பும் பாடசாலைகளில் சீனமொழியைக் கற்பிப்பது குறித்து அமைச்சு ஆராயலாம்.

தமிழ் - சிங்களம், ஆங்கில மொழிகளை நம் சிறார்களுக்கு முழுமையாக் கற்பித்து வளர்த்துவிடுவோமானால் அதுவே நாட்டின் எதிர்காலத்திற்குச் செய்யும் பெரிய பணியாக அமையும். அதைவிடுத்து புதிய மொழியொன்றை பாடத்திட்டத்தில் புகுத்துவது மாணவர்களுக்கும் பளுவையும் வீண் சிக்கல்களையுமே ஏற்படுத்துவதா இருக்கும்.

# புதிய வகை தொற்றுக்கிருமி கண்டுபிடிப்பு; இந்தியாவில் இருந்து பரவுவதாகத் தகவல்கள்

கொழும்பு,ஓக.18

எந்தவொரு நோய் எதிர்ப்பு மருந்துக்கும் கட்டுப்படாத புதிய வகை தொற்றுக்கிருமி இந்திய மருத்துவமனைகளில் இருந்து உலக நாடுகளுக்குப் பரவியிருப்பதாக பரபரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்தின் பிரபல மருத்துவ ஆராய்ச்சி இதழான 'த லான் செற்' இந்தப் பரபரப்புத் தகவலை வெளியிட்டு மருத்துவ உலகையே கலக்க முறச்செய்திருக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தினதும், மேற்குலகினதும் நோய் எதிர்ப்பு மருத்துகளைத் தயாரிக்கும் இருபெரிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலமே இந்தக் கிருமி அடையாளம் காணப்பட்டது. என்.டி. எம்-1 என்று அழைக்கப்படும் இந்தக் கிருமி இங்கிலாந்தின் கார்டிவ் பல்கலைக் கழகத்தின் மருத்துவ ஆராய்ச்சி நிபுணரான திமோதி ஆர்வால்ஷினால் சுவீடிஷ் நோயாளியொருவரில் முதன் முறையாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த தொற்றுக்கிருமி இந்தியாவில் இருந்துதான் பரவுகிறது என உலக நாடுகளை நம்பவைக்கும் முயற்சிகளை இந்திய அரசாங்கம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லையெனவும், இந்தச் சதியின் பின்னணியைக் கண்டு பிடித்து அம்பலப்படுத்துவோம் எனவும் இந்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் தினேஷ் திரிவேதி கூறியிருக்கின்றார். இந்தப் புதிய வகை தொற்றுக் கிருமியின் பெயர் நியூடில்லி எனத் தொடங்குவது இந்தியாவின் பதற்றத்துக்கும், கவலைக்கும் காரணமாக இருக்கலாமெனக் கூறப்படுகின்றது.

ஆனால் இந்திய மருத்துவ ஆலோசனைச் சபை மேற்படி ஆய்வை மறுதலித்திருப்பதுடன், அடையாளம் காணப்பட்ட புதிய வகை தொற்றுக் கிருமி பொதுச் சுகாதாரத்திற்கு ஓர் அச்சுறுத்தல் அல்ல என்றும் கூறியிருக்கின்றது. ஆனால் இந்தக் கிருமி பற்றிய தகவல்கள் இந்திய மருத்துவ சேவைகளுக்கு ஒரு களங் கமாகவே அமைந்துள்ளது. மேற்கு நாட்டவர்களும் அங்கு வாழும் ஆசிய நாட்டவர்களும் குறைந்த செலவில் மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவதற்கு இந்தியாவையே நாடுகின்றனர்.

இதனால் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளின் மருத்துவ நிறுவனங்கள் வருவாய் இழப்பினைச் சந்திக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக இந்திய மருத்துவத்துறைக்கு எதிரான ஒரு பொய்ப் பிரசாரமாகவே இந்தியர்கள் இதனை நோக்குகின்றனர். ஆகவே இந்தக் கிருமி பற்றிய சகல உண்மைகளையும் கண்டறிந்து இந்தியா வெளியிட வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும். (க)

## ஜப்பான் சர்வதேச அமைப்பு நடத்தும் சித்திரப் போட்டியும் கண்காட்சியும்

பருத்தித்துறை,ஓக.18

ஜப்பான் நாட்டின் 'கனகாவா' சர்வதேச அமைப்பினால் 16 ஆவது தடவையாக நடத்தப்படவுள்ள சிறுவர் சித்திரப் போட்டியும் சித்திரக் கண்காட்சிக்குமான ஆக்கங்கள் இலங்கை மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு சபை இலங்கை மாணவர்களிடம் அதற்கான அழைப்பை விடுத்துள்ளது. நான்கு வயதுக்குக் குறையாத பதினைந்து வயதுக்கு மேற்படாத மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியும். விண்ணப்பதாரிகள் தாம் விரும்பிய தொனிப் பொருளின் கீழ் ஆக்கங்களை சமர்ப்பிக்க முடியும்.

இப்போட்டியில் 3 அதிசிறந்த பரிசில்களும், 58 விசேட பரிசில்களும், 460 தேர்ந்தெடுக்கப்பட்ட ஆக்கங்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் ஒக்ரோபர் 10 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு சபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-190)

### மயக்க மருந்து விசிறிவிட்டு

## ஜன்னல் வழியே புகுந்த திருடர்களால் நல்லூரில் பணம்,நகைகள் கொள்ளை

வண்ணை, ஓக. 18

குழந்தையுடன் வீட்டில் நித்திரையாக இருந்த பெண்ணை மயக்க மருந்து ஏற்றிச் செயலிழக்கச் செய்த திருடர்கள் ஜன்னல் கிறில் ஆணிகளைச் சாவகாசமாகக் கழற்றி உள் நுளைந்து 5 லட்சத்துக்கும் மேற்பட்ட நகைகள் பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு நல்லூர் செங்குத்தா இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள குளத்துக்கு எதிர்ப்புறம் அமைந்துள்ள திருமதி விஜிதா அரிகரன் என்பவரது வீட்டில் நடை பெற்றது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது :-

சிறியதாயார் வீட்டில் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட விஜிதா உதவிக்கு ஒருவரும் வராத நிலையில் பிள்ளையுடன் வீட்டுக்கு வந்து உறக்கத்தில் ஆழ்ந்தார்.

கண் விழித்துப் பார்த்தபோது தனதும், பிள்ளையினதும் கழுத்துகளில் கிடந்த சங்கிலிகள் மாயமானதை அடுத்து பார்த்தபோது யன்னல் கிறில் கழற்றப்பட்டிருந்ததைக் கண்டார்.

உடனே ஏனைய பொருள்களைப் பார்த்தபோது 12 தங்கப்பவுண் அடங்கிய தாலி, நெக்லெஸ், பதக்கம், காப்பு என்பவற்றுடன் அலுமாரியில் வைத்திருந்த 30 ஆயிரம் ரொக்கப்பணம் மற்றும் 100 யூறோ வெளிநாட்டு நாணயங்கள், கையடக்கத் தொலைபேசி என்பனவும் திருட்டுப் போயிருந்தமை தெரியவந்தது.

கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (த-160)

## 'ஸ்ரடிஸ் இன் ஹின்டூசியம்' மறுபதிப்பு வெளியீட்டு விழா

அமரர் கலைப்புலவர் க.நவரத்தினம் எழுதிய 'ஸ்ரடிஸ் இன் ஹின்டூசியம்' (Studies in Hinduism) நூலின் மறுபதிப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வு அதன் தலைவர் வி.கை லாசபிள்ளை தலைமையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக சமஸ்கிருத சிரேஷ்ட விரிவுரையாளர் சிவஸ்ரீ ம.பாலகைலாசநாதசர்மாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (6)

### நாளை

| | |
|---|---|
| ஆவணி 03 | 19.08.2010 வியாழக்கிழமை |
| திதி: | : தசமி பி.ப.04.33 வரை |
| நட்சத்திரம் | : கேட்டை பி.ப.12.55 வரை |
| சுபநேரம் | : 07.35-09.05 வரை |
| ராகுகாலம் | : 01.35-03.05 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகலிப்புப் பணிக்காக மரங்கள் வெட்டப்பட்டதால்

## வெட்டை வெளியாகியுள்ள யாழ் - பருத்தித்துறை வீதி!

கோப்பாய்,ஓக.18

யாழ்- பருத்தித்துறை வீதி அகலிப்புக் காரணமாக வெட்டப்பட்ட பெரு விருட்சங்கள் மற்றும் வீட்டு முன்வளவுகளில் நின்ற பயன்தரு மரங்கள் பலவும் அழிக்கப்பட்டமையினால் இவ்வீதி தற்போது வெட்ட வெளியாகக் காட்சி அளிக்கின்றது.

இவ்வீதியில் பாதசாரிகள் மற்றும் சைக்கிளில் பயணிப்போர் ஒய்விற்கு ஒதுங்க இடமின்றி அருகிலுள்ள வீடுகளில் நிழலுக்குத் தஞ்சம் கேட்கும் நிலை தோன்றியுள்ளது!

தற்போது இவ் வீதியின் எதிர்கால நிழலிற்காக மரங்கள் நாட்ட, இடத்தை தேடி பிடிக்க வேண்டியுள்ளதாக சமூக ஆர்வலர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும் இவ்வீதிக்கு அண்மையாக வசித்தவர்கள் பலரும் வீதி அகலிப்பிற்காக இடத்தை விட்டுக் கொடுத்ததால் அவர்களின் குடியிருப்பு நிலப் பிரதேசம் கணிசமான அளவில் குறைவடைந்தமையினால் அங்கும் எவ்வகை மரங்களையும் நாட்டி வளர்க்க இடமில்லை எனவும் மேலும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (த-72)

## அல்லாரைத் தும்பு உற்பத்தி நிலையம் ஞாயிறன்று திறந்து வைப்பு

தென்மராட்சி, ஓக. 18

கிராமிய கைத்தொழில்கள் மற்றும் உற்பத்திக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லாரை தும்பு சார்ந்த உற்பத்திக் கிராமத்தின் பொது வசதிகள் மத்திய நிலையம் கடந்த 15ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த நிலையத்தைத் திறந்துவைத்துத் தும்பு உற்பத்தி இயந்திர சாதனங்களையும் இயக்கிவைத்தார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் வீ.சிவஞானசோதி, உதவிச் செயலாளர் டீ.டீ.அமரதுங்க, கைத்தொழில் அபிவிருத்திச் சபைப் பொது முகாமையாளர் திருமதி ஜெஸ்மின் மன்னப்பெரும உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

சுமார் 60 லட்சம் ரூபா செலவில் தொழில் நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டு, நவீன முறையிலான உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## லயன்ஸ் கழகத்தின் மருத்துவ முகாம்

தென்மராட்சி, ஓக. 18

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி, நாவற்குழி ஆகிய பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

கண், நீரழிவு, இரத்த அழுத்தம், வாய்ப்புற்று, தொழு, பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைகளை நடத்தவுள்ளனர்.

கண் பார்வையில் குறைபாடு காணப்படுவோருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்படும்.

இந்தப் பிரதேசங்களில் உள்ள பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் பரிசோதனை முகாம் நடத்தப்படுவதாக கழகத் தலைவர் லயன் தி.முருகதாஸ் தெரிவித்தார். (த-207)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri - Nallur Road, Jaffna
Phone: 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com

*Learn French the French Way*

**French Classes**

"ALLIANCE FRANCAISE DE JAFFNA" இலங்கையில் உள்ள பிரெஞ்சு தூதரகம் மூலம் பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்காக உருவாக்கப் பட்ட கலாசார மையமாகும்.
French இல் உள்ள ALLIANCE FRANCAISE DE PARIS இதன் தலைமைக் காரியாலயமாகவும் அமைந்துள்ளது.
மாணவர்கள், சிறுவர்கள், வெளிநாட்டிற்குப் போகிறவர்கள் எவரும் கற்றுக் கொள்ளலாம்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.


# 'நவமங்கை நிவாசம்' நாளை திறப்பு விழா

நாவற்குழி, ஓக. 18

கோப்பாய், இராசவீதியில் தேசியகல்வியியற் கல்லூரிக்கு அருகில் அமைக்கப்பட்ட 'நவமங்கை நிவாசம்' - பெண்கள் நிலையம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் இந்த நிலையத்தைத் திறந்து வைப்பார்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

கௌரவ அதிதிகளாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கோப்பாய் பிரதேச செயலர்சி.ஏ.மோகன்றாஸ், அகில இலங்கை இந்துமா மன்றச் செயலர் கந்தையா நீலகண்டன், யாழ். போதனா வைத்தியசாலை மனநலத்துறை வைத்திய கலாநிதி சா.சிவ யோகன், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி க.சிவாஜி ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (த-26-121)


## வரவேற்பும் சிறப்பு செய்தல் நிகழ்வும்



பாஷையூர் தூய அந்தோனியார் பங்கை பிறப்பிடமாகக் கொண்ட அருட்பணியாளர் விக்ரர் ஞானப்பிரகாசம் அ.ம.தி அடிகளார் 16.07.2010 பாகிஸ்தான் கராச்சி நகரில், குவேற்றா மறைமாவட்ட ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார். ஆண்டகை அவர்கள் பணிக் குருத்துவ அர்ப்பண வாழ்வில் தன்னை இணைத்து இவ்வாண்டு 50ஆவது ஆண்டு பொன்விழாவையும் நினைவு கூர்கிறார். இந்த இரட்டிப்பான மகிழ்ச்சியை அவர் பிறந்து, வளர்ந்த மண்ணாகிய பாஷையூர் பங்கில் கொண்டாட பாஷையூர் இறைமக்கள் சமூகம் பேருவகையோடு தயாராகிறது. அந்த ஆத்ம மகிழ்வில் அனைவரையும் பங்கெடுக்க அன்புடன் அழைக்கின்றோம்.



வரவேற்பு: இன்று (18.08.2010) மாலை 4.30 மணி
திருப்பலி : மாலை 5.00 மணி
சிறப்பு நிகழ்வுகள்: மாலை 6.30- 7.30

**அனைவரும் வாரீர்!**
**ஆயரின் ஆசீர் பெறுவீர்!**

பங்குத்தந்தையும், பங்குமக்களும்.

(102176)



## VISA - வீசா
Consultancy Service

*UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,*

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC,** 734, Hospital Road, Jaffna.



## Female Admin Assistant/Receptionist

A girl with passion to work and have good communication skills

Applicant Should be 28yrs or bellow with True Working Knowledge in English & Ms Office. Smart looking & Hardworking Abilities are the pre requests.
(Bring your Resume& Colour Photograph)

நேர்முகத்தேர்விற்கான நேர ஒதுக்கீட்டுக்கு அழையுங்கள்:0777-302882/021-3208342(Office Hrs only)

KNOWLEDGE UNIVERSE®
Malaysian College of Business and ICT
# 75,Temple Road,Jaffna | www.kugroup.info



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974, கனடா P.R. உடைய நிரந்தர தொழில் புரியும் 5'7" உயரம், செவ்வாய் குற்றமற்ற 11 கிரகபாவம், மிருகசீரிடம் மணமகனுக்கு உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்.
தொடர்பு: 0112736975, 021 4905707, 004721697193
E.mail:bavaney@hotmail.com



## தேவை

1. வீடு பராமரிப்பவர் (பெண்)
2. மொழி பெயர்ப்பாளர் (பகுதி நேரம் - ஆண்கள் விரும்பத்தக்கது)

வீடு பராமரிப்பவர் உடல் நலம் உள்ளவராகவும், சமையல் செய்யவும் வீட்டைத் துப்புரவாக வைத்திருக்கவும் வேண்டும். மொழி பெயர்ப்பாளர் ஆங்கிலம்/தமிழ்மொழி பெயர்ப்பாளராக இருக்கவேண்டும். நேர்முகப் பரீட்சை 18, 19 ஆம் திகதிகளில். தொடர்பு: 12/B, சோமைன் ஒழுங்கை, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 0778454272, 0772860995

Company China Railway No 5.



## உணவகத்துக்கு ஆள் தேவை

புதிதாக ஆரம்பிக்கவுள்ள உணவகத்துக்கு உணவு பரிமாறுபவர்கள் ஆண்/பெண் ஊழியர்கள் தேவை. 18.08.2010 இன்றும் 19.08.2010 நாளையும் பி.ப.2 - 4 மணி வரை நேரில் வரவும்
இல.26, தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0772495257, 0789487419



## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், டாசோன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண் பெண் நாயும், பொக்கட் பெனியர் ஆண், பெண் நாயும் 3 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் குட்டிகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: வி.மயூரன்,
இல.209, பலாலி றோட்,
ராஜா பீனாசா முன்பாக, கோண்டாவில்.



## நாய்க்குட்டி விற்பனைக்கு

தடுப்பூசி ஏற்றப்பட்ட பொமேரியன் நாய்க் குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0778338729


## கண்ணீர் அஞ்சலி



### விசுவநாதர் முருகேசு

எம் வர்த்தக வாழ்விற்கு வழிகாட்டிய நாயகனே வர்த்தக பெயருடன் பூகழ் பூத்த S.V.M நாமப்பெருமகனே வர்த்தக உலாவின் வியக்கத்தக்க சாதனை படைத்த நாயகனே யாழ்.நகர் மக்கள் வளமுடன் வாழ்ந்திட வர்த்தக தர்மத்தை வளர்த்திட்ட பெருமகனுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை யாசிக்கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆறுதலைத் தெரிவிக்கின்றோம்.*

இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம், *52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
கஜமுகன் ஹாட்வெயர், *147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*
(சி/570002)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி ஜெயக்குமாரி தேவநாயகத்தின்
பாசமிகு தாயார்

### திருமதி மேரி திரவியம் நேசையா

கடந்த (14.08.2010 ) சனிக்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.

(சி/570007)

## துயர் பகிர்கின்றோம்



Serendib Flour Mills (pvt) Ltd. இன் யாழ். மாவட்டத்திற்கான முகவர் நிறுவனத்தில் ஒன்றாகிய எஸ்.வி.எம். கூட்டு நிறுவனத்தின் ஸ்தாபகராகிய

### அமரர் சண்முகம் விசுவநாதர் முருகேசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Serendib Flour Mills (pvt) Ltd.,
245/52, old Avissawella Road,
Orugodawatta. Wellampitiya,
Sri Lanka.

(102169)

## மரண அறிவித்தல்

### *கந்தையா பிள்ளையம்மா*



கொக்குவில் மேற்கு, ஐயனார் கோயிலடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பிள்ளையம்மா 12.08.2010 வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ஆசைமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வைத்திலிங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் சுந்தரலிங்கம், காலஞ்சென்ற அமுதலிங்கம் மற்றும் கந்தசாமி, மங்களேஸ்வரி, பத்மாவதி, இந்திரவதனம், வசந்தா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பராசக்தி, ஞானறஞ்சிதம், சாரதாம்பாள், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் தவராசா, செல்வராசா (கொக்குவில்), சுரேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் திருமதி சுமதி செல்வநாதன் (ஏழாலை), சுதாகரன் (லண்டன்), சுகுமார் - லோகிதா (இத்தாலி), துஷ்யந்தன், றொகினா, சுஜந்தன், திருமதி நர்மதா - றமணபதி (கனடா), மயூரி, கோபிநாத் (கொனிக்கா கலர் லாப்), திருமதி சர்மிளா - ரகுநாதன் (ஜேர்மனி), திருமதி சங்கீதா - கிருபாகரன் (ஹொலண்ட்), சகிலா (கொக்குவில்), சதீஸ் (ஹொலண்ட்), நந்தனாவதி (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), சுபித்தா, சுஜீவன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் பானுஜா, சாருஜா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), சானுஜா, சாகித்தியா, பொலஸ், சாளிஸ், டிசாளினி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), ரக்ஷிகா (ஜேர்மனி), ஆகித்தியா, ஆருஜன், அனுமிதா (ஹொலண்ட்) ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, துரைராசா, இரத்தினம், இராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2010) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(102172)

## துயர் பகிர்கின்றோம்



தீவகக் கல்வி வலயத்தில் சேவையாற்றும்
வெ.யூட் ஜெயக்குமார் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி மேரி திரவியம் நேசையா (வரப்பிரகாசம்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்,
வலயக் கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.

(102184)

## கண்ணீர் அஞ்சலி



### ச.வி.முருகேசு

யாழ்ப்பாணத்தின் மூத்த வர்த்தகரும் உயர்ந்த குண இயல்பைக் கொண்டவருமான ச.வி.முருகேசு அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்.

உரிமையாளரும், ஊழியர்களும்,
ஜெகன் களஞ்சியம், *475, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*

(102185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சுடர்

உதயன் நாளிதழ் ஊடாக நடத்தும்

எது மாதிரியும் இல்லாத புதுமாதிரி

தொடர் 09

## தரம் 05 புலமைப் பரிசில் இறுதிக் கருத்தரங்குத்தொடர் 2010

வளவாளர்:
மாணவர் சமூகத்தின் பாராட்டுக்குரிய
எமது தேசிய ஆசிரியர் திரு.மு.வே.அன்பழகன்



**வினாத்தாள் I** | **45 நிமிடங்கள்**

**சுட்டெண்** | **புள்ளிகள்**

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

* 01-31 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
* முதலாம், 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள குறியீடுகளின் விளக்கத்தைக் காட்டும் சரியான விடையைத் தெரிவுசெய்க.



01. 1) இங்கே சிகரட் விற்கவேண்டாம்.
2) இங்கே சிகரட் இல்லை.
3) இங்கே புகையுங்கள்.
4) இங்கே புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.




02. 1) ஒலிக் கருவிகள் இல்லை.
2) ஒலி எழுப்பத் தடை.
3) ஒலி எழுப்பலாம்.
4) ஒலிக் கருவிகள் விற்பனைக்குண்டு.

* 03ஆம், 04ஆம் வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

03. குமரன் கடை தீப்பற்றி எரிந்ததால் அவருக்கு ஏற்பட்ட சேதத்திற்காக ஒரு தொகைப் பணம் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டது. கடைக்காரருக்கு வழங்கப்பட்ட பணத்தைக் குறிப்பிடப் பொருத்தமானது,
1) வட்டி. 2) நட்டஈடு.
3) இலாபம். 4) வெகுமதி.

04. முருகன் காலையில் எழுந்து தனது காலைக்கடன்களை முடித்துவிட்டுத் தினமும் வயலுக்குச் சென்று வேலை செய்வான். அவனைக் குறிப்பிடப் பொருத்தமான கூற்று,
1) பிச்சை எடுப்பவன்.
2) ஒரு கடின உழைப்பாளி.
3) சோம்பேறித்தனம் உள்ளவன்.
4) வேலைசெய்யாது வாழ்பவன்.


05. இவ்வுருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன?




1) 9 2) 12
3) 14 4) 10

* 06ஆம், 07ஆம் வினாக்களுக்கு வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவத்தைத் தெரிவுசெய்க.

06.




07.



* கீழே தரப்பட்டுள்ள மூன்று பெட்டிகளுக்குள் உள்ள பொருட்கள் எந்த ரீதியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவுசெய்க.


08.



1) அளவுகள். 2) நிறைகள். 3) வடிவங்கள்.


* இங்கு காட்டப்பட்டுள்ள உருவங்களின் பொருட்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவற்றைத் தெரிவுசெய்க.

09.



1) CD, BE, AB
2) BF, CD, AE
3) AB, EF, CD.

10. நான்கு பிள்ளைகள் மரதனோட்டம் ஓடினார்கள். அவர்கள் ஓடிமுடித்த நேரம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதன்படி வெற்றி பெற்றவர் யார் எனத் தெரிவுசெய்க.



சுனில் கமல் நிமல் கயான்

1) நிமல்.
2) கயான்.
3) சுனில்.

11. அம்மா, அப்பா என்னை மத்துமி என அழைப்பர். எனக்கு இளைய சகோதரிகள் இருவரும் ஒரு சகோதரனும், மூத்த சகோதரிகள் மூவரும் இருக்கின்றனர். அதன்படி மத்துமி குடும்பத்தில் எத்தனை பேர்?
1) 9 பேர். 2) 7 பேர். 3) 6 பேர்.


12. வயலில் பயிற்றங்காய் ஆய்வதற்கு 4 பெண்கள் 3 நாட்கள் எடுத்தனர். 6 பெண்கள் இவ் வேலையைச் செய்வதற்கு எத்தனை நாட்கள் வேண்டும்?
1) 2 நாட்கள். 2) 3 நாட்கள். 3) 6 நாட்கள்.

13. XYZ → YZX → ZXY → ?

வெற்றுக்கூண்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
1) XYZ 2) YXZ 3) YZX

14. எனது பையில் மூன்று வகையான காசுகள் உள்ளன. அவற்றின் பெறுமதி ரூபா 18.00 ஆகும். என்னிடம் உள்ள காசுகள் என்னென்ன?
1) 5 ரூபாவில் 2 உம் , 2 ரூபாவில் 2 உம், 50 சதத்தில் 3 உம்.
2) 5 ரூபாவில் 2 உம், 2 ரூபாவில் 2 உம், 1 ரூபாவில் 1உம், 50 சதத்தில் 1உம்.
3) 5 ரூபாவில் 2 உம், 2 ரூபாவில் 3உம், 1 ரூபாவில் 2உம்.

15. அருகில் தரப்பட்டுள்ள கூடுகளில் உள்ள உருவங்களுக்குத் தொடர்பு உண்டு. அவற்றின் கூட்டுத் தொகைகளில் கீழே உள்ள ஓரிடத்தில் கூட்டுத் தொகை போடவில்லை. வினாக்குறி (?) காட்டும் இடத்தில் வரவேண்டிய கூட்டுத்தொகையைத் தெரிவு செய்க.




1) 13 2) 15
3) 11

16. தரப்பட்டுள்ள மூன்று பொம்மைகளும் சிற்றுண்டிப் பைக்கற்றுக்களில் வருவனவாகும்.




பாலா ராஜா ஹாஜா

சகுந்தலாவுக்கு மூன்று பொம்மைகளையும் சேகரிக்கவேண்டியிருந்தது.
அவருக்கு ஒரு பாலா தேவையாயிருந்தது.
ஒரு பாலாவைப் பெறுவதற்கு மூன்று ராஜாக்கள் கொடுக்க வேண்டும்.
ஒரு ராஜாவைப் பெறுவதற்கு ஐந்து ஹாஜாக்கள் கொடுக்க வேண்டும்.
ஒரு பாலாவைப் பெறுவதற்கு சகுந்தலா எத்தனை ஹாஜாக்களைக் கொடுக்க வேண்டும்?
1) 3 2) 5 3) 15

17. ஒரு விளையாட்டுக் கார் ஒவ்வொரு 6 மணித்தியாலங்களுக்கும் 3 மின்கலங்களை (பற்றரிகளை) பயன்படுத்துகின்றது. பற்றறிகள் ஒரு பைக்கற்றில் 4 வீதம் விற்கப்படுகின்றன. அந்தக் கார் 48 மணித்தியாலங்களுக்கு ஓடுவதற்கு எத்தனை பைக்கற் பற்றறிகள் தேவை?
1) 6 2) 8 3) 18

18. சில மாணவர்கள் இந்த விளையாட்டைக் கண்டு பிடித்தனர். கீழுள்ளவற்றுள் எத்தொகுதி ☒ இலிருந்து ▦ இற்குச் செல்வதற்கான அறிவுறுத்தல்களைக் காட்டுகின்றது?




1) 5 சதுரங்கள் கீழேயும், 6 சதுரங்கள் குறுக்காகவும் நகர்த்துக.
2) 5 சதுரங்கள் கீழேயும், 7 சதுரங்கள் குற்க்காகவும் நகர்த்துக.
3) 6 சதுரங்கள் கீழேயும், 7 சதுரங்கள் குறுக்காகவும் நகர்த்துக.

19. மின்சுற்றில் உள்ள சிவப்பு, மஞ்சள், நீல நிற மின்குமிழ்கள் முறையே 3 நிமிடங்களுக்கும், 4 நிமிடங்களுக்கும், 5 நிமிடங்களுக்கும் ஒளிரும். 3 மின்குமிழ்களும் ஒரே தரம் ஒளிர்ந்தது மு.ப 8.00 மணிக்கு என்றால், மீண்டும் 3 மின்குமிழ்களும் ஒரே நேரத்தில் ஒளிரும் நேரம் யாது?
1) மு.ப 9.00 2) மு.ப 8.30 3) மு.ப 11.00

20. குமார் தனது 25வது பிறந்தநாளை இற்றைக்கு 5 ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டாடினான். அன்று லலிதாவின் வயது 5 ஆண்டுகளாக இருந்தது. இதற்கேற்ப குமாரினதும் லலிதாவினதும் வயதுகள் தொடர்பான சரியான கூற்று யாது?
1) இன்று குமாரின் வயது லலிதாவின் வயதிலும் மூன்று மடங்காகும்.
2) இன்று குமார் லலிதாவிலும் ஐந்து ஆண்டுகளினால் மூத்தவன்.
3) இன்னும் 5 ஆண்டுகளில் குமாரின் வயது 30 ஆண்டுகளாகும்.

21. மாலை 5.00 மணிக்கு கடற்கரையில் நடந்துகொண்டிருந்த எனக்கு எனது நிழல் எனது இடப்பக்கமாகத் தெரிந்தது. அப்படியாயின், நான் எத்திசையை நோக்கி நடந்துசென்றேன்?
1) வடக்கு. 2) தெற்கு. 3) கிழக்கு.

22. பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.



A B C D E F

மேலே தரப்பட்டுள்ள 6 யானைகளில் இரண்டு யானைகள் மட்டுமே ஒரே மாதிரியானவை. அந்த இரண்டு யானைகளைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
1) AC 2) BD
3) DE 4) CF

* பின்வரும் பாடலை வாசித்து 23ஆம், 24ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவுசெய்க.


சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

23. சுகம் எங்குள்ளது?
1) எல்லா இடமும். 2) சுத்தமான இடத்தில்.
3) நீண்ட ஆயுளில்.

24. நீண்ட ஆயுள் பெறுவதற்காக நீங்கள் யாது செய்யவேண்டும்?
1) நித்தம் பாதுகாப்பாக வாழ்தல்.
2) சுத்தத்தைப் பேணுதல். 3) நித்தம் உணவு உண்ணுதல்.

* படத்திலுள்ள X,Y,Z பற்சக்கரங்களாகும். X சக்கரம் வலஞ்சுழியாகச் சுற்றுகிறது.

25. Z சக்கரம் சுற்றும் திசை யாது?




1) அம்புக்குறி காட்டும் திசையாகச் சுற்றும்.
2) அம்புக்குறி காட்டும் திசைக்கு எதிர்த்திசையாகச் சுற்றும்.
3) அம்புக்குறி காட்டும் திசையை நோக்கி அரைவாசியும் மிகுதி எதிர்த்திசையிலும் சுற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. லலிதா வனிதாவைக் காட்டிலும் வயதில் மூத்தவள். யாழினி லலிதாவைக் காட்டிலும் வயதில் மூத்தவள். ஆகவே,
1) வனிதா யாழினியிலும் மூத்தவள்.
2) லலிதாவே எல்லோருள்ளும் மூத்தவள்.
3) எல்லோருள்ளும் மூத்தவள் யாழினியே.


27. உலகில் அன்றாட நிகழ்ச்சிகளை மிகக்குறுகிய காலத்தினுள் உன் கண்முன்னால் கொண்டுவரக்கூடிய என்னை பெரியோர் முதல் சிறியோர் வரை இன்று தேடுகின்றனர். அப்படியானால் நான் யார்?
1) பத்திரிகை. 2) வானொலிப்பெட்டி.
3) தொலைக்காட்சிப்பெட்டி.

28. நான் இன்றி அணுவும் அசையாது. நான்தான் உலகின் அதிபதி. என்னைச் சுற்றி எனது ஆதரவாளர்கள் வலம் வருகின்றனர். நான் யார்?
1) நாட்டின் ஜனாதிபதி. 2) வீரக்கடவுள். 3) சூரியன்.

29. நீர்க்குழாய் ஒன்று இரண்டு நிமிடங்களுக்கு 12 லீற்றர் நீரை வெளியேற்றும். இன்னுமொரு குழாய் மூன்று நிமிடத்திற்கு 15 லீற்றர் நீரை வெளியேற்றும். இரண்டு குழாய்களும் 30 நிமிடங்களில் மொத்தமாக எத்தனை லீற்றர் நீரை வெளியேற்றும்?
1) 180 லீற்றர். 2) 150 லீற்றர். 3) 330 லீற்றர்.

* தரப்பட்டுள்ள படத்தின் உதவியுடன் 30ஆம் வினாவிற்கு விடையளிக்குக.

30. படத்தில் காட்டிய பேணிகளை நேர் மேலே இருந்து (A) பார்த்தால் தெரியும் தோற்றம் பின்வருவனவற்றுள் எது?





31. தோட்டம் ஒன்றில் உள்ள பலா மரங்களின் எண்ணிக்கையைப் போல் இரு மடங்கு மா மரங்கள் உள்ளன. மாமரங்களைப் போல் மும்மடங்கு தென்னை மரங்களும் தென்னை மரங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 10 பாக்கு மரங்களும் அதிகமாக உள்ளன தோட்டத்தில் 34 பாக்கு மரங்களிலிருக்குமாயின் தோட்டத்தில் உள்ள பலா மரங்கள் எத்தனை?
1) 24 2) 8 3) 4

* 32-40 வரையான வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

32. தராசு சிலவற்றில் நிறைகள் குறிக்கப்பட்டுள்ளவிதத்தைக் காண்க. இதன்படி மூன்றாவது தராசின் நிறை என்ன?

(............................)





* 33ஆம், 34ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட ஆங்கிலத் தொடர்பை வைத்து வெற்றிடத்திற்கு வரவேண்டிய எழுத்துக்களை எழுதுக. (A, B,......Z வரை)

33. B D F H (............) (............)

34. W V T Q M (............) (............)

* நிமல், சுனில் போட்டிக்குக் கலந்துகொள்ள ஆரம்பநிலை, முடிவுநிலை என இரண்டு நிலைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்படி 35ஆம், 36ஆம், 37ஆம் வினாக்களுக்குரிய விடையை எழுதுக.




35. நிமல் பயண முடிவுவரை எவ்வளவு தூரத்தைக் கடந்துள்ளார்?

(............................)

36. சுனில் பயண முடிவு வரை எத்தனை தடவைகள் இடது பக்கம் திரும்பியுள்ளார்?

(............................)

37. நிமல் பயண முடிவு வரை எத்தனை தடவைகள் வலது பக்கம் திரும்பியுள்ளார்?

(............................)

38. ஒரு வளர்ந்த கொக்கு ஒரு நாளுக்கு 12 மீன்களைத் தின்னும். ஒரு சிறிய கொக்கு ஒரு நாளுக்கு 7 மீன்களைத் தின்னும். 4 வளர்ந்த கொக்குகளும் 3 சிறிய கொக்குகளும் ஒரு வாரத்தில் தின்னும் மீன்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(............................)

39. ஒரு பெட்டியில் 28 பென்சில்கள் உண்டு. நீலப்பென்சில்களைப்போல இரண்டு மடங்கு சிவப்புப் பென்சில்களும், சிவப்புப் பென்சில்களைப் போல இரண்டு மடங்கு பச்சைப் பென்சில்களும் இருந்தால் பெட்டியிலுள்ள பச்சைப் பென்சில்கள் எத்தனை?

(............................)

40. மரக்கறிப் பாத்தி நிரைக்கு செடிகள் வரிசையாகக் கத்தரி, மிளகாய், தக்காளி, வெண்டி என்ற ஒழுங்கில் நடப்பட்டிருந்தன. அவ்வாறான வரிசையில் 41 ஆவது இடத்தில் இருக்கவேண்டிய செடி யாது?

(............................)

## வினாத்தாள் II

## 1மணி 15 நிமிடங்கள்

சுட்டெண் | புள்ளிகள்

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. பின்வரும் பாடலை வாசித்து 1-10 வரையான வினாக்களுக்கு விடை தருக.

வண்ண வண்ண குடைகள்
வாகாய் அமைந்த குடைகள்
நிழலைத் தரும் குடைகள்
நிமிர்ந்து விரிந்த குடைகள்

சிறுவர் விரும்பும் குடைகள்
சின்னஞ்சிறிய குடைகள்
பெரியோர் விரும்பும் குடைகள்
பெறுமதிமிக்க குடைகள்

வெயிலுக்கு ஏற்ற குடைகள்
வெம்மை தணிக்கும் குடைகள்
மழைக்கு ஏற்ற குடைகள்
மயக்கும் அழகுக் குடைகள்

1) அடுக்கு மொழியை எழுதுக. ..........................................
2) பெயரடைமொழி எது? ..........................................
3) அடுக்கிடுக்குத் தொடரை எழுதுக.
..........................................
4) பெயரெச்சத்தை எழுதுக. ..........................................
5) 'வாகாயமைந்த' என்றால்? ..........................................
6) குணப்பெயரை எழுதுக. ..........................................
7) 'பெறுமதிமிக்க' என்றால் ..........................................
8) ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.
   1) வெம்மை - ..........................................
   2) வாகாய் - ..........................................
9) எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.
   1) வெயில் - ..........................................
   2) நிழல் - ..........................................
10) உயர்திணைப் படர்க்கைப் பெயர்?
..........................................

02. ஒழுங்குபடுத்தி எழுதுக.
1) அருளால்/நாங்கள்/இருக்கிறோம்/சுகமாக/இறைவன்
..........................................
2) நத்தைகள்/கிடந்தன/குவியல்/பற்றைக்குள்/குவியலாகக்
..........................................

03. ''சிலையில் எழுத்துப்போல'' என்ற உவமைத் தொடரின் கருத்து யாது?
..........................................

04. ''தலைகவிழ்தல்'' என்பதன் கருத்து யாது?
..........................................

05. எழுத்துப் பிழையற்ற சொல்லின் கீழ்க் கீறிடுக.
1) காளை வணக்கம்/காலை வணக்கம்/காலை வனக்கம்/காழை வணக்கம்
2) இராப்போசனம்/இறாப்போசனம்/இராப்போசணம்/இறாப்போசணம்

06. குறியீடு இடுக.
1) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது முதுமொழியாகும்.
2) நிலம் நீர் காற்று ஆகாயம் நெருப்பு என்பன ஐம்பூதங்களாகும்.

07. இல்லாதவர்களுக்கு இல்லையென கொடுக்கும் தன்மையுடையவன்
..........................................

08. வெ.நோ.பி என்பதன் விரிவு யாது?
..........................................

09. Underline one word from each set of brackets so that the sentences make sense.
A [doctor, teacher, mason] works in a [bank, hospital, farm]

10. தமிழ்ச்சொற்களுக்குரிய ஆங்கிலச்சொற்களை எழுதுக.
1) மூக்கு - ..........................................
2) வேலி - ..........................................
3) நதி - ..........................................

11. ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.
1) Break fast - ..........................................
2) Coconut - ..........................................
3) Bread - ..........................................

12. சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.
1) மம நங்கி - ..........................................
2) மே மகே நிவச - ..........................................

13. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
1) இலங்கையில் தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவது எந்த மாதத்தில்?
   1. மார்கழி. 2. தை.
   3. வைகாசி. 4. பங்குனி.
2) ஆடையொட்டி பரம்பலமையும் விதம்,
   1. நீர். 2. விலங்கு.
   3. வெடித்தல். 4. காற்று.
3) பாவற்பூவின் நிறம் யாது?
   1. ஊதா. 2. வெள்ளை.
   3. மஞ்சள். 4. சிவப்பு.
4) வீட்டுத்தோட்டப் பயிர்கள் எந்த மண்ணில் சிறப்பாக வளரும்?
   1. மணல்மண். 2. களிமண்.
   3. கூழ்மண். 4. இருவாட்டி மண்.
5) சங்கமித்தையால் கொண்டுவரப்பட்ட வெள்ளரசுமரம் நடப்பட்டிருக்கும் புராதன இடம் எது?
   1. அநுராதபுரம். 2. மிகிந்தலை.
   3. தம்புள்ள. 4. பொலன்னறுவை.
6) தேசப்படத்தில் நதியைக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் யாது?
   1. சிவப்பு. 2. மஞ்சள்.
   3. நீலம். 4. கறுப்பு.
7) ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரமடைந்தது,
   1. 1972 2. 1948
   3. 1950 4. 1994
8) இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
   1. வொலிபோல். 2. எல்லே.
   3. கிரிக்கட். 4. பூந்தோட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் பசுப்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி திட்டம்

## துறைசார் அதிகாரிகளுடன் வெள்ளியன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ்.குடாநாட்டில் பசுப்பால் உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் சந்தை வாய்ப்பைப் பெருக்குவது தொடர்பாக இலங்கை மத்திய வங்கி உரிய தரப்புகளுடன் ஆரா்யவுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு 'கிறீன் கிறாஸ்' விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் டபிள்யூ. எம்.கருணாரத்னவும், மத்திய வங்கி அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் கால்நடை அபிவிருத்திச் சங்க அதிகாரிகள், கால்நடை வைத்திய அதிகாரிகள், கூட்டுறவு அதிகாரிகள் மற்றும் வங்கி அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

குடாநாட்டில் பசுப்பால் உற்பத்தியை எவ்வாறு அதிகரிப்பது மற்றும் இதன் சந்தை வாய்ப்பை அதிகரிப்பது தொடர்பாக ஒவ்வொரு திணைக்கள அதிகாரிகளினதும் ஆலோசனைகளைப் பெற்று அவற்றுக்குரிய நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக மத்தியவங்கி இதில் ஆராயவுள்ளது.

இதேவேளை பி.ப 3 மணிக்கு மீன்பிடித்துறை அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்றும் 'கிறீன் கிறாஸ்' விடுதியில் மத்தியவங்கி உதவி ஆளுநர் டபிள்யூ.எம்.கருணாரத்ன தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை மத்திய வங்கியின் கிராமிய அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-16)

# மறவன்புலோ சகலகலா வித்தியாலயம் புனரமைப்பு

தென்மராட்சி,ஓக.18

2000 ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்த மறவன்புலோ சகலகலா வித்தியாலய கட்டடங்கள் துரித கதியில் நிர்மாணிக்கப்பட்டு வருவதால் வித்தியாலய கல்விச் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப்பட்டது.

ஒத்துழைப்புக்கான சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தில் பல மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளும் கொண்ட மாதிரிப் பாடசாலையாக அமைத்து வருகின்றனர்.

இன்னும் இரு மாதங்களில் வேலைகள் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுவதால் எதிர்வரும் 2011 ஜனவரி மாதம் இவ் வித்தியாலயம் முழுமையாக இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# வலி.தென்மேற்கு பிரதேசசபைக்கு புதிய தலைமைக் காரியாலயம்

## 45 மில்லியன் செலவில் அமைக்கப்படும்

சண்டிலிப்பாய்,ஓக.18

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம், பொது நூலகம் ஆகியன சுமார் 45 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளுடனும் அமைக்கப்படவிருக்கின்றது.

இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ள வடமாகாண உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டப் பணிப்பாளர், இருமாடிக் கட்டடம் அமைப்பதற்குக் கட்டட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரம் கோரியுள்ளார்.

மேற்படி பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் மானிப்பாயிலுள்ள பட்டின சபைக் காரியாலத்தில் பல வருடங்களாக இயங்கி வருகின்றது. சிறிய கட்டடத்திற்குள் இடவசதியின்றி இயங்கி வருவதால் அங்கு கடமையாற்றும் பணியாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள்.

இதேவேளை கேற் முதலியார் தியாகராஜாவின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட பொது நூலகமும் இடவசதியின்றிச் சிறிய இடத்தில் இயங்குவதால் அங்கு செல்பவர்கள் அசௌகரியங்களுக்குள்ளாகிறார்கள். அத்துடன் கட்டடத்தின் சுவர் இடிந்து காணப்படுவதுடன் மழை காலங்களில் மழை நீரும் உட்செல்லுகின்றது.

இக்குறைபாடுகள் பற்றிச் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்து விளக்கியதைத் தொடர்ந்து இருமாடிகள் கொண்ட தலைமைக் காரியாலயமும், பொது நூலகமும் அமைப்பதற்காக 45.2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (த-115)




# ஐஸ் உற்பத்தி நிலையத்தை அமைச்சர் டக்ளஸ் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம்,ஓக.18

வடமராட்சி, பொலிகண்டியில் கொள்கலன் ஐஸ் உற்பத்தி நிலையம் கடந்த 15ஆம் திகதி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின்செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள்மற்றும்சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

வடமராட்சி கடற்றொழிலாளர்களின் நீண்டநாள் கோரிக்கையான மேற்படி ஐஸ் உற்பத்தி நிலையமானது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சருடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தை காரணமாக கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினால் அமைத்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 15ஆம் திகதி அப்பகுதிக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கொள்கலன் ஐஸ் உற்பத்தி நிலையத்தை இயக்கி ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணியாளர் எஸ்.தர்மலிங்கம், அமைச்சு அதிகாரிகள், மற்றும் கடற்றொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பங்குகொண்டனர்.

மேற்படி கொள்கலன் ஐஸ் உற்பத்தி நிலையமானது தேவைக்கேற்ற பிரகாரம் இடமாற்றம் செய்யப்படக் கூடியது என்பது விசேட அம்சமாகும். (த)

# 50 வருடங்களாகப் பிரதேச சபைக் காணியில் குடியிருக்கும் எமக்குக் காணி உறுதி தாருங்கள்

## அமைச்சர் டக்ளஸிடம் மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.18

வலி.மேற்கு பிரதேசசபை காணியில் கடந்த ஐம்பது வருடங்களாக குடியிருக்கின்ற எமக்கு காணி உறுதியை வடக் கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெற்றுத்தாருங்கள்.

இவ்வாறுகோரி சங்கானை - அராலி மத்தி ஆகிய பிரதேசங்களில் குடியேறியுள்ள 64 குடும்பங்கள் பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

அராலி, சங்கானை ஆகிய பிரதேசங்களில் குடியிருக்கும் மக்கள் தமது வாழ்வாதார உரிமை பெறுவதற்கு வலி. மேற்குப் பிரதேச சபைக்கு சொந்தமான காணிகளில் குடியிருக்கின்றோம்.

அக்காணியில் உள்ள நாம் கடந்த 50 ஆண்டுகளாக வறுமை நிலையில் - கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே வலி.மேற்கு பிரதேச சபை சகல ஆவணங்களையும் எட்மிடம் இருந்து பெற்றுள்ளதுடன் காணிப் பங்கீடுகளையும் ஏற்கனவே மேற்கொண்டுள்ளது.

ஆனால் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பிரதேச சபை காணி பங்கீடு செய்து தருவதாகக் கூறுகின்ற போதும் கடந்த இரண்டுவருடங்களாக எதுவும் இடம்பெறவில்லை.

எனவே நிகாப் (NEHRP) திட்டத்தின் கீழ் வீடுகள் பெற்று நிரந்தரமாக இந்த ஏழைகள் வாழ்வதற்கு நிரந்தர உறுதிகள் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தே மகஜர் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(302)

## கொட்டடிப் பகுதியிலும் நடைபாதை வியாபாரிகள்

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ்.கொட்டடி மீன்சந்தைப் பகுதியிலும் தற்போது நடைபாதை வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

மீன்சந்தைக்கு முன்பாக வீதியோரத்தில் இந்த நடைபாதை வியாபாரிகள் பொருள்களை விற்பனை செய்து வருவதால் போக்குவரத்துக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதியில் இருந்து வந்த வியாபாரிகளே இந்த வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்பட்டது.

அத்துடன் வீதியோரத்தில் மரக்கறி விற்பனையும் நடைபெற்று வருகின்றனது. (த-26)

# பாகிஸ்தான் ஆயர் விக்ரர் ஆண்டகை யாழ்.மறை மாவட்டத்துக்கு விஜயம்

## சொந்த ஊரில் அவருக்கு இன்று வரவேற்பு



கொழும்புத்துறை,ஓக.18

பாகிஸ்தான் குவேற்றா மறை மாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள யாழ்.பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த அதி.வண. விக்ரர் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ். மறைமாவட்டத்திற்கு முதல் முறையாக வருகை தந்துள்ளார்.

புதிய ஆயரை வரவேற்று கௌரவிக்கும் திருப்பலி நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. ஈச்சமோட்டை சந்தியிலிருந்து வரவேற்பு ஊர்வலம் ஆரம்பமாகும்.

கடந்த 37 வருடங்கள் பாகிஸ்தானில் குருவாக, குருமுதல்வராக பணியாற்றிய ஞானப்பிரகாசம் அடிகள் கடந்த ஜூலை மாதம் 16 ஆம் திகதி கராச்சி பேராலயத்தில் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டு குவேற்றா மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாஷையூரிலே 1940 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி பிறந்த இவர் அமலமரித் தியாகிகள் சபையில் இணைந்து கண்டி அம்பிட்டிய தேசிய குருமாவட்டத்தில் குருத்துவக் கல்வியைப் பெற்று 1966 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார்.

இலங்கையில் ஏழுவருடங்கள் பணியாற்றியபின் 1973 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு இறைபணியாற்றச் சென்று 37 வருடம் அங்கு கடமையாற்றி வருகின்றார்.

குவெற்றா மாநிலத்தில் முதல்வராக 2002 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். திருத் தந்தை 16 ஆம் ஆசிர் வாதப்பரால் ஆயராக நியமனம் பெற்று கடந்த மாதம் 16 ஆம் திகதி ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

பாகிஸ்தான் மொத்தப் பரப்பளவில் குவெற்றா மாநிலம் 44 வீதத்தைக் கொண்டது. இலங்கையை விட 5 1/2 மடங்கு பெரியது. இவ்வாறான இடத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் துறவியொருவர் ஆயராக பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-135)




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஆரம்பக் கல்வி மன்றத்தால் நடத்தப்பட்ட கலைத்திறன் விழாவின்போது கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வவுனியா கல்வியியற் கல்லூரி [illegible] உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்டோருள் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள் : கோப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலத்திற்காய் போராடும் பொன்னகர் மக்கள்

வன்னியில் அரசு நிலங்களைக் கைப்பற்றுவதற்காய் ஏற்றி விட்டிருக்கும் நடவடிக்கைகளில் இன்னொன்றாக பொன்னகர் மக்களது நிலம் பறிபோகும் அபாயத்தில் இருக்கிறது. வடக்கு மாகாண சபைக்கான அலுவலகத்தை அமைப்பதற்காக அந்தப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்களை தங்கள் நிலங்களுக்கு உள் நுழைய முடியாத வகையில் பாதுகாப்பிடப்பட்டிருக்கிறது. மெலிந்துபோய் புழுதியிலும் கிரவலிலும் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களைப் பார்த்து இந்த பிள்ளைகள் வாழ நாம் நிலத்திற்கு எங்கு செல்லுவது? என்ற சனங்களின் கேள்வி இன்றைய ஈழ மக்களின் வாழ்நிலம் பற்றிய பெரும் கேள்வியாக எனக்குத் தெரிகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுடன் அண்மையில் பொன்னகர் கிராமத்திற்குச் சென்றேன் என்று குறிப்பிடும் குளோபல் தமிழ் செய்திகளின் கட்டுரையாளர் தீபச்செல்வன் நிலத்திற்காக போராடும் மற்றொரு மக்கள் குறித்து இந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார்.



வடக்கு மாகாண சபை கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட இருப்பதாகவும் அதற்கான விடுதிகளை அமைப்பதற்காக மக்களின் நிலங்கள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டு அந்த நிலத்தில் வாழ்ந்த மக்களை அந்த கிராமத்திற்குள் உள் நுழைய விடாதபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் இருந்து ஏ-9 வீதி ஊடாக முறிகண்டிக்குச் செல்லும் பொழுது சுமார் 8 கிலோ மீற்றர் தூரத்தில் மேற்குப் பக்கமாக அமைந்திருக்கிறது பொன்னகர். இங்கு 50 குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். பக்கத்தில் இந்துபுரம், பாரதிபுரம், அறிவியல்நகர் போன்ற கிராமங்கள் காணப்படுகின்றன. அமெரிக்காவில் வாழ்ந்து வரும் பருத்தித்துறையைச் சேர்ந்த இராசரத்தினம் என்பவரின் நிதி உதவியில் வீடுகள் கட்டி வேதா குடியிருப்பு என்ற பொன்னகர் கிராமம் 2005ஆம் ஆண்டில் குடியேற்றப்பட்டது.

ஈழத்தில் பல் வேறு கட்டங்களில் நடைபெற்ற போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இங்கு குடியமர்த்தப்பட்டார்கள். 50 வீட்டுத் திட்டத்தில் 35 வீடுகள் அமைத்து முடிக்கப்பட்ட சூழலில் யுத்தம் காரணமாக ஏனைய 15 வீடுகள் அமைக்கப்படாமல் இருக்கின்றன. அவர்களில் 13 குடும்பங்கள் தற்பொழுது அந்தக் கிராமத்தில் தரப்பாள்களைக் கட்டிக் கொண்டு குடியேறியிருக்கிறார்கள். அடர்ந்த பற்றைகளுக்குள் வீடிருந்த இடங்களில் எழும்பிய புற்றுக்களுக்கு மத்தியில் அவர்கள் குடியிருக்கிறார்கள். கூரைகளற்ற வீடுகளைச் சேர்ந்த ஏனைய மக்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களது காணியை சில நிமிடங்கள் நின்று பார்க்க கூட விடுகிறார்களில்லை என்று அந்த மக்கள் குமுறுகிறார்கள். மக்கள் வருவதைத் தடுப்பதற்காக காவலாளிகள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

2005ஆம் ஆண்டில் கிளிநொச்சி சிவபாதக்கலையகத்தில் வைத்து இந்த மக்களின் காணிகளுக்கான உறுதிப்பத்திர பதிவுகள் இடம்பெற்றதாக இந்த மக்கள் தெரிவிக்கிறார்கள். அப்பொழுதிருந்த அரசாங்க அதிபர் இந்தக் காணிகளை மக்களுக்கு வழங்கியதுடன் குடியிருப்பு திறப்பு விழாவில் கலந்து கொண்டு இந்தக் குடியிருப்பை திறந்தும் வைத்திருக்கிறார். 90 மற்றும் 91 இல் கிளாலி ஊடாக இடம்பெயர்ந்த மக்கள் நிலமின்றி அலையும் பொழுது அவர்கள் இருப்பதற்காக இந்தக் காணிகள் வழங்கப்பட்டன.

உழைத்துக் கட்டிய கிணற்றை இறைத்து அந்தத் தண்ணீரைக் குடிக்க அனுமதிக்கப்படவில்லை என்று குறிப்பிடும் ஒரு தாய் "நாளும் பொழுதுமாக கூலி வேலை செய்துதான் அந்தப் பணத்தில் இந்தக் கிணற்றை கட்டினோம். பள்ளமாக இருந்த இந்தக் காணிகளுக்கு குளத்து பக்கம் இருந்து மண் எடுத்து வந்து போட்டு மேடாக்கினோம். இப்பொழுது ஆளுநர் தனது தேவைக்காக எங்கள் காணியை எடுத்திருப்பதாக சொல்கிறார்கள். ஏன் எங்கள் வயிற்றிலும் இருப்பிலும் ஆளுநர் அடிக்கிறார்? இனியும் எங்களால் இழக்க முடியாது" என்று தெரிவித்தார்.

எங்களுக்கு ஒரு கூடாரத்தைக் கட்டுவதற்குகூட ஆள்களில்லை என்று சொல்கிறார்கள். கணவன்மார்களைப் பறிகொடுத்தும் தடுத்து வைக்கப்பட்டும் இருக்கும் நிலையில் காணிகள் துப்புரவாக்கப்படாமல் பற்றைகள் மண்டிப் போயிருக்கின்றன, அவைகளுக்குள் மிதிவெடிகள் கிடக்கலாம் என்ற அச்சத்தோடுதான் மலசலம் கழிக்கக் காடுகளுக்கு செல்லுகிறோம். எப்பொழுது கால் போகிறதோ கை போகிறதோ தெரியவில்லை? என்று குறிப்பிடும் அந்த மக்களிடையில் தனது கணவன் மருதமடு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என திலகராசா நிரோசா என்ற இளம்பெண் பிறந்து பதினொரு மாதங்களான தனது குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு என்னிடம் குறிப்பிட்டார்.

தகரமும் தரவில்லை. தடிகளும் தரவில்லை. காணியைப் பறிக்க நிற்பவர்கள் தகரங்களை எப்பொழுது தரப் போகிறார்கள்? காட்டுத் தடிகளை வெட்டியாவது வீடு போடலாம். அதுக்கும் எங்களிடம் ஆண் துணையில்லை என்று தெரிவித்த ஜெயக்குமாரி "அப்பா மாத்தளனில் நடந்த செல்தாக்குதலில் இறந்து விட்டார். தங்கையின் கணவரும் அதே செல்லில் பலிகொள்ளப்பட்டார் என்று குறிப்பிடுகிறார். தங்கையின் குழந்தையைத் தூக்கி வைத்திருந்தார். பக்கத்து வீட்டு கூடாரத்தின் முன்பாக மரத்தின் கீழ் கட்டப்பட்ட தொட்டில் உறங்கிய குழந்தை விழித்து அழுத பொழுது ஜெயக்குமாரி தூக்கி வைத்திருந்த அவரது தங்கையின குழந்தை இறங்கிச் சென்று தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தது.

அந்தக் குழந்தைகள் வாழ்ந்த வீடுகள் இடிந்து மறைந்து விட்டன. சில இடங்களில் வீடுகள் இருந்த இடங்களில் புற்றுகள் எழும்பியிருக்கின்றன. நிலத்திற்காக துடிக்கும் மக்களின் கைகளை கால்களைப் பிடித்துக் கொண்டும் நிற்கும் குழந்தைகளும் எனது பார்வையை ஈர்த்தன. அப்பொழுது தான் வளர்த்த தென்னம் பிள்ளைகளை குறித்து ஒரு தாய் என்னுடன் பேசத் தொடங்கினார். 40 தென்னம் பிள்ளைகளை வைத்து வளர்த்ததாகவும் இப்பொழுது 20 தென்னைகள் நிற்பதாகவும் சொன்னார். தண்ணீரற்ற இந்தத் தரையில் கிணற்றிலிருந்து கையால் அள்ளித் தண்ணீர் ஊற்றி வளர்த்த பிள்ளைகள் என்று குறிப்பிட்டதோடு போர் 20 தென்னம் பிள்கைளைத் தின்றதுடன் தான் பெற்ற பிள்ளைகளையும் தின்றிருப்பதாக சொன்னார். "பிள்ளையை இழந்து, உடமையை இழந்து, எல்லாவற்றையும் இழந்து இப்பொழுது காணி நிலத்தையும் இழப்பதா" என அழுதபடி கேட்கிறார்.

**தீபச்செல்வன்**

கிரவல் மண் மேடாக இருக்கும் இந்தக் கிராமத்திற்கு இன வன்முறையினால் மாத்தளையில் இருந்து வந்து குடியேறியதாக சின்னையா பிச்சை குறிப்பிட்டார். 1979 இல் வந்து பொன்னகரில் காடு வெட்டிக் குடியேறியிருக்கிறார். அந்த கிராமத்தில் உள்ள பல ஏக்கர் காடுகளை வெட்டி அதை ஒரு கிராமமாக்கியதாகவும் சொல்கிறார். அன்று முதல் தண்ணீருக்காக பெரும் சிரமங்களை இவர்கள் எதிர்கொள்கிறார்கள். குடிக்கும் தண்ணீருக்காக ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்திற்கு செல்லுவதாக பிச்சை சொல்கிறார். அதைப்போல மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பொன்னகர் குளத்தில் சென்றுதான் குளிக்க வேண்டும் என்றும் சொன்னார். அங்கிருக்கின்ற மக்களுக்கு தண்ணீர் அள்ளி சைக்கிளில் கொண்டு கொடுத்து சேவை செய்யும் முத்து என்பவர் தங்கள் கிராமம் தரும் அமைதியையும் நிம்மதியையும் குறித்து ஆறுதற்பட்டார்.

இனக்கலவரம் காரணமாக இடம்பெயர்ந்த இந்த மக்களும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களும் ஒரு அமைதியான வாழ்வுக்காக இந்த கிராமத்திற்கு வந்திருக்கிறார்கள். வாழ்ந்து கொண்டிருந்தார்கள். மீளவும் மீளவும் யுத்தத்திற்கு முகம் கொடுத்து வந்த பொழுதும் மீண்டும் வாழ வேண்டும் என்ற பெருங்கனவுடன் மீண்டும் வந்திருக்கிறார்கள். முத்திய கல்லூரியிலும் முகாங்களிலும் தங்கியிருக்கிறார்கள். கூடாரங்களில் வாழ்வோம். நீண்ட தூரத்திற்குச் சென்று தண்ணீர் எடுப்போம். எங்களுக்கு தேவை இந்த நிலம். நாங்கள் வாழ்வதற்கு தேவைப்படுகிறது. எங்கள் குழந்தைகளக்கு தேவைப்படுகிறது என்ற பலமான வார்த்தைகள் அந்த மக்களிடம் எழும்புகின்றன. உணர்வு நிறைந்த வார்த்தைகள். எதையும் அறியாமல் நடக்கும் துயரங்களை பார்த்துக் கொண்டும் போராடும் பெற்றோர்களுடன் அணிவகுத்து நிற்கின்றனர் இந்தக் குழந்தைகள். அந்தக் குழந்தைகளைப் பார்க்கும் பொழுது எனக்குள் கடுமையான தாக்கம் உண்டாகியது.

இந்த மக்களின் விடயத்தில் அல்லது நிலம் குறித்த விடயத்தில் நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும். மக்களின் காணிகளைக் சுவீகரித்து அரச உடைமையாக்குவதற்கும் எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அரசு திட்டமிட்டிருக்கிறது. 'இந்த நிலம் மக்களுக்குரியது. அவர்கள் வாழ வேண்டியது. எந்த நிலத்திற்காக ஈழத் தமிழினம் போராடியதோ அந்த நிலத்தை கூறுகூறாக அள்ளிக் கொள்ள அரசு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கிறது. முப்பது ஏக்கர் காணிகளை எடுக்கப் போகிறார்களாம். இந்தக் கிராமத்தை எடுக்கப் போகிறார்களாம் என்ற கதைகள் பல இடங்களில் கேட்கின்றன. எங்கோ காணி தருகிறோம் என்று மக்கள் சமாளிப்பு வார்த்தைகளால் அணுகப்படுகிறார்கள். எங்கு காணி கொடுத்தாலும் யார் வேண்டுமானாலும் போய் விடுவார்களா? அப்படியானால் நமது நாட்டில் இருந்து வடக்கு கிழக்கு என்ற தமிழ் பேசும் மக்களின் தாயகத்திலிருந்து மக்களை சுரண்டும் பலர் போய் வாழலாம். நிலம் பெயர மக்களை மீண்டும் மீண்டும் நிர்பந்திப்பது மிகவும் கொடுமையானதாக இருக்கிறது.


நிலத்திற்காக பொன்னகர் மக்கள் நடத்திக் கொண்டிருக்கும் தவம் சாந்தபுரம் மற்றும் பல கிராமத்து மக்கள் நடத்தும் போராட்டங்களை நினைவுக்கு கொண்டு வருகின்றன. நிலத்திற்காகவும் பச்சை மரங்களுக்காகவும் மலைகளுக்காகவும் துப்பாக்கிகளை தூக்கி வைத்திருக்கும் மாவோ சிறுவர் போராளிகளும் நினைவுக்கு



வருகிறார்கள். நிலம் விடயத்தில் மக்கள் எவ்வளவு தெளிவுடன் உறுதியுடன் கனவுடன் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். புழுதியிலும் கிரவலிலும் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களைப் பார்த்து இந்த பிள்ளைகள் வாழ நாம் நிலத்திற்கு எங்கு செல்லுவது? என்ற சனங்களின் கேள்வி இன்றைய ஈழ மக்களின் வாழ்நிலம் பற்றிய பெரும் கேள்வியாக எனக்குக் கேட்கிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகுலன், சிலோஜன் சகோதரர்கள் அபாரமான பந்துவீச்சு; கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இலகு வெற்றி




வலி.வடக்கு,ஓக.18

இராகுலன், சிலோஜன் சகோதரர்களின் அசத்தலான பந்து வீச்சுக்கு முகங்கொடுக்க முடியாது திணறியது கொழும்பு கந்தானை புனித செபஸ்தியார் கல்லூரி. கொக்குவில் இந்துக் கல்லூரி மீண்டும் இலகுவான வெற்றியொன்றைத் தனதாக்கியது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் அகில இலங்கைப் பாடசாலைகளின் 17வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் கொழும்பு கந்தானை புனித செபஸ்தியார் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதின.

கொழும்பு கந்தானை புனித செபஸ்தியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கந்தானை புனித செபஸ்தியார் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. 17.2 ஓவர்கள் மட்டுமே துடுப்பெடுத்தாடிய செபஸ்தியார் கல்லூரி இராகுலன், சிலோஜனின் பந்துவீச்சில் தனது விக்கெட்டுக்களை மள மளவென்று இழந்தது.

17.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த கந்தானைக் கல்லூரி 88 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பெரேரா 30 ஓட்டங்கைளப் பெற்றதுடன் உதிரிகளாக 14 ஓட்டங்கள் கிடைத்தன.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய இராகுலன், சிலோஜன் சகோதரர்கள் தமது அபாரமான திறமையை வெளிப்படுத்தி எதிரணியின் விக்கெட்டுக்களைப் பறித்தனர்.

8ஓவர்கள் பந்து வீசிய இராகுலன் ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 27 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் சிலோஜன் 5.2 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

89 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 8 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

கே.சிலோஜன் 18 பந்துகளில் 7 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 35, பி.பங்குஜன் 18 பந்துகளில் 4 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 32, கே.இராகுலன் 12 பந்துகளில் 4 பௌண்டறிகளுடன் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

கந்தானை புனித அந்தோனியார் கல்லூரியைச் சேர்ந்த சத்துராங்கன் 4 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

(6-86)

# ஹப்பினஸ் அணி அதிரடியாக ஆடி 'தண்டர்ஸ்' கிண்ணத்தைக் கைப்பற்றியது

யாழ்ப்பாணம்,ஓக.18

அதிரடியான ஆட்டத்தால் கொக்கக்கோலா அணியை வீழ்த்தி 'தண்டர்ஸ்' வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது ஹப்பினஸ் விளையாட்டுக் கழகம்.

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் பாஷையூர் தண்டர்ஸ் அணியின் 28ஆவது ஆண்டு நிறைவையொட்டி உள்ளூர் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 'தண்டர்ஸ்' வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட இறுதியாட்டம்அண்மையில் இடம்பெற்றது.

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் கொக்கக்கோலா அணியும் ஹப்பினஸ் அணியும் மோதின. இதில் தன்னை எதிர்த்தாடிய கொக்கக்கோலா அணியை 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றிகொண்டு தண்டர்ஸ் கிண்ணத்தை சுவீகரித்தது ஹப்பினஸ் அணி.

இதில் சிறந்த வீரர்களாக கொக்கக்கோலா அணி வீரர் யாறோசன், ஹப்பினஸ் அணி வீரர் கயிஸ்ரஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த கோல் காப்பாளராக ஹப்பினஸ் அணியின் கோல் காப்பாளர் யதீபன் தெரிவு செய்யப்பட்டார். (6-23)




# மோசாந்தி, கலைவாணியின் 100 மீற்றர் தூர ஓட்ட சாதனைகள் பதிவு

வலி.வடக்கு,ஓக.18

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கலைவாணி யாழ்.மாவட்டத்தைச் சேர்நத எம்.மோசாந்தி ஆகியோரின் பெறுபேறுகள் வடமாகாணத்தின் சிறந்த சாதனையாக பதிவு செய்யப்படவுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த சாதனைப் பதிவேடு பதிவு செய்யப்படுகின்றது.

கடந்த 2007, 2009ஆம் ஆண்டுகளில் 2010ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் 2007ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கலைவாணியும் 2009ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மோசாந்தியும் 13.9 செக்கன்களில் ஓடி சாதனையாகப் பதிவு செய்ததுடன் 2010ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர் கலைவாணி 14.4 செக்கனிலும் ஓடியிருந்தார்.

இந்நிலையில் வடமாகாண சாதனையாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மோசாந்தி, வவுனியா மாவட்டத்தைச்சேர்ந்த எஸ்.கலைவாணி ஆகியோரின் பெறுபேறான 13.9 செக்கன்களில் ஓடிய புதிய சாதனை பதிவு செய்யப்படவுள்ளது. (6-86)

# பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டம்; சிறந்த வீராங்கனைகள் தெரிவு

வலி.வடக்கு,ஓக.18

இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் முதல் நான்கு இடங்களைப் பெற்ற பாடசலைகளில் சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ரி.ஏஞ்சலா, கொக்குவில் இந்துக் கல்லூரியின் கே.தரசுதா, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் சோபா, உடுவில் மகளிர் கல்லூரி திசானா ஆகியோரும் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகியாக உடுவில்மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கமலினி மில்ஆமும் தெரிவு செய்யப்பட்டனர்.

(6-86)

## தேசிய ஜூடோ போட்டிகள்

வலி.வடக்கு,ஓக.18

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் ஆண், பெண்களுக்கான ஜூடோப் போட்டிகள் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் கொழும்பு 13இல் அமைந்துள்ள ஜூடோ சதுக்கத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் இலங்கை முழுவதுமிருந்து 350 வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர். மாகாண மட்டத்தில் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகள் 175 பேர் வீதம் கலந்து கொள்ளவுள்ளதுடன் வடமாகாணத்தில் இருந்து எவரும் இப்போட்டியில் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6-86)

# தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசக் கரப்பந்தாட்டம்; கெமுனு படையணி, மட்டுவில் அ.மி.த.க. சம்பியன்

யாழ்ப்பாணம்,ஓக.18

தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்களின் கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவின் சம்பியனாகப் 10ஆவது பட்டாலியனின் கெமுனு படையணியும் பெண்கள் பிரிவின் சம்பியனாக மட்டுவில் தெற்கு அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயமும் தெரிவாகின.

522ஆவது படையணியினரால் தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

522ஆவது படையணியின் படை அதிகாரி மேஜர் கே.டி.எஸ்.தயானந்த தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக 52 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் டபிள்யூ.ஏ. ரி. அனுர சுகசிங்க, சிறப்பு விருந்தினர்களாக 522 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஹேமந்த பண்டார, தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆண்களுக்கான போட்டியில் 10 ஆவது பட்டாலியனின் கெமுனு படைப் பிரிவு அணியும் உடுப்பிட்டி நவஜீவனம் விளையாட்டுக் கழகமும் மோதின. 5 செற்களைக் கொண்ட இந்தப் போட்டியில் கெமுனு அணி 25:18, 25:17, 28:26, 25:19 எனும் செற்கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலய அணியும் நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும் மோதின. 3 செற்களைக் கொண்ட இந்தப் போட்டியில் மட்டுவில் தெற்கு அ.மி.த.க வித்தியாலய அணி 25:20, 25:23 எனும் செற்களில் வெற்றி கொண்டது.

(6-207)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கான பாராட்டு நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மங்கள விளக்கு ஏற்றுவதையும் வடமாகாண விளையாட்டு பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை உரையாற்றுவதையும் சைக்கிள் ஓட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற றகீமுக்கு மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை ஆகியோர் இணைந்து சைக்கிள் வழங்குவதையும் அருகில் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி எவ்.சி.ரூபசிங்கம் நிற்பதையும் பாராட்டு நிகழ்வில் கலந்து கொண்ட வீர, வீராங்கனைகளையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## கேள்வி அறிவித்தல்-2010

13.08.2010 ஆம் திகதிய பத்திரிகையில் வலி. கிழக்குப் பிரதேச சபையின் வேலைகளுக்கான கேள்வி விளம்பரத்தின் மாற்றத்துக்கு அமைய இரண்டாவது கேள்வி C8 இக்ராட் தரத்திலும் மிகுதி வேலைகள் C9 இக்ராட் தரத்திலும் கேள்விகள் கோரப்படுகின்றன என்பதை அறியத்தருகின்றேன்.

வலி.கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர். 16.08.2010

தம்பையா நடராசா,
செயலாளர்.

(சி/570001)

## வலயக் கல்வி அலுவலகம்-வலிகாமம்
## மருதனார்மடம், சுன்னாகம்
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தினால் பாவிக்கப்பட்ட கீழ்க்காணும் பழைய, பழுதடைந்த பொருள்கள் எதிர்வரும் 19.08.2010 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் சித்திகாரராகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் உடன் பணத்தினைச் செலுத்திப் பொருள்களை எடுத்துச்செல்ல வேண்டும்.

பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் எதிர்வரும் 19.08.2010ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

| | |
|---|---|
| 1.Type Writer (Tamil) | 2 Nos. |
| 2.Type Writer (English) | 6 Nos. |
| 3.Wheel Chairs | 1 Nos. |
| 4.Printer (Dot matrix) | 5 Nos. |
| 5.Printer (Laser) | 1 Nos. |
| 6.Fax Machine | 1 Nos. |
| 7.Risograph | 1 Nos. |
| 8.Photostat Machine (canon) | 1 Nos. |
| 9.Table Fan | 1 Nos. |
| 10. Other Office Items | |

வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

(சி/569997)

# தனங்கிளப்பு வீதியில் கொல்களம்

தென்மராட்சி, ஓக. 18

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் மீண்டும் இறைச்சிக்காக கால்நடைகள் வெட்டப்படும் கொல்களம் நிர்மாணிக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையினால் 1.3 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்விடத்தில் இருந்த கொல்களம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்டுள்ளதால் சந்தை இறைச்சிக் கடைக்கு அருகில் உள்ள கட்டடத்தில் கொல்களம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-207)

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

துளிராய் 10 ★ 07 ★ 1982



விதையாய் 06 ★ 08 ★ 1992

### செல்வி சர்விழி (கிளி) தம்பிராசா :

திதி: நவமி (18.08.2010)

எல்லாம் வல்ல இறைவா!
எங்கும் நிறைந்த இறைவா!!
காக்கும் கடவுளல்லவா நீ?
கடைசி மகள் கிளியின் மேல்
கண்வைத்த காரணம் என்ன?
கணப்பொழுதில் கடந்துவிட்ட 18 வருடங்கள்
எம் மனதில் எஃகுவாக படிந்துவிட்டனவே
இத்தனை வருடமென்ன எத்தனை வருடம் கடந்தாலும்
எம்துயரம் ஆறாது-மாறாது.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

என்றும் நினைவுடன்:
தம்பிராசா குடும்பத்தினர்.

(102164)

## நீர்வேலி பரலோக அன்னை திருவிழா ஞாயிறன்று

நீர்வேலி புனித பரலோக மாதா ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும். மறுநாள் காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

அன்றையதினம் இரவு அண்ணாவியார் எ.வரப்பிரகாசத்தின் நெறியாழ்கையில் உருவான 'கவிதன் கண்டகனவு' தென்மோடி நாட்டுக்கூத்து நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த-135)

## விற்பனைக்கு

அலுமினியம் கலர் கண்ணாடி பிற்றிங் அலுமாரிகள் பருத்தித்துறையில் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774366704

## வீடு, வளவு விற்பனைக்கு

மானிப்பாய், மெமோறியல் வீதியில் 4 பரப்பு 7குழி, 3 அறைகள், சாப்பாட்டு அறை, சமயலறை, சுற்று மதில் போன்ற வசதிகள் கொண்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
0717555524

(102153)

## மாபிள் பதிப்பதற்கு...

கட்டடங்களுக்கு (வீடு/பாடசாலை/ஹோட்டல்/வைத்தியசாலை) மாபிள் பதிக்கும் வேலைகள் திறமாகவும், காத்திரமாகவும் ஒரு சதுர அடிக்கு ரூபா 40/= படி செய்துதரப்படும்.

ஹோட்டல் கிறீன் கிறாஸ், பிறின்ஸ் பாமசி, ஜெகன் பாமசி போன்ற இடங்களில் எம்மால் மாபிள்கள் நல்லமுறையில் பதிக்கப்பட்டுள்ளன.

தொடர்பு: 0711472266
0771166177

(102182)


SUZUKI மற்றும் SUZUKI MARUTI நவீனமயப்படுத்தல் முகாம் யாழ்ப்பாணத்திற்கு வருகிறது.

யாழ் மக்கள் மீதான அபிமானத்தால் AMW உங்கள் வாகனங்களை நவீனமயப்படுத்துவதற்கான புதிய நோக்குடன் உங்களை தேடி வருகிறது.



ஆகஸ்ட் 21 மற்றும் 22
9.00 a.m. மணி முதல் 5.00 p.m. மணி வரை
றோயல் லுப்ரிகேஷன் சேவை நிலையம்
K.K.S. வீதி சுன்னாகம், யாழ்ப்பாணம்
இலவச பரிசோதனை
பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
முரளி 0212 241090, 0213 217771, 0776 013568

- செய்கூலியில் 50% மட்டுமே அறவிடப்படும்.
- சுசுக்கி மற்றும் சுசுக்கி மாருதி வாகனங்களுக்கான இலவச பரிசோதனை அறிக்கைகள்.
- உங்கள் வாகனங்களுக்கான இலவச மதிப்பீடு.
- இன்னும் பல

*நிபந்தனைகளுக்கு உட்படும்

AMW வின் தகுதியுள்ள சிறந்த தொழினுட்பவியலாளர்களைக் கொண்டு நடாத்தப்படுகிறது.

வாகன உதிரிப்பாகங்களுக்கு விசேட விலைக்கழிவு

www.cpm.lk

SUZUKI Way of Life!
SUZUKI MARUTI Count on us
AMW அசோசியேட்டட் மோட்டர் வேஸ் (பிரைவட்) லிமிட்டட்
துரித அழைப்பு 011 2 690099


## சிறுவர்களை தாக்கிய கருங்குளவிகள்

தென்மராட்சி, ஓக. 18

தென்மராட்சிப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி வீசிய கடும் காற்றின்போது வீழ்ந்த பனை ஓலைக்குள் இருந்து புறப்பட்ட கருங்குளவிகள் ஆறு சிறுவர்களைத் தாக்கியது.

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் நான்கு மாணவர்கள் ரியூசனுக்கு வந்தபோது குளவிகள் தாக்கியதில் நுணாவில் மேற்கைச் சேர்ந்த குணரத்தினம் மிதுஷிகா (வயது-10), நந்தகுமார் சுவந்திகா (வயது-10), ரவிக்குமார் சிந்துஜா (வயது-10), இராசரத்தினம் (வயது-10) ஆகியோரும்-

மிருசுவில் வடக்கில் கருங்குளவிகளால் தாக்கப்பட்டு சிவனேஸ்வரன் ஸ்ரீபன் (வயது- 15) தாவளை இயற்றாலையில் முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த கந்தையா கம்ஷிகா (வயது-5) ஆகியோரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதபுரத்துக்குக் கடந்தவாரம் முதல் இரணைமடுக் குளத்திலிருந்து நீர் திறப்பு

## பிரதேசத்தில் வரட்சி ஓரளவு நீங்கியது

கிளிநொச்சி,ஓக.18

கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் பகுதிக்கு இரணைமடுக் குளத்து நீர் கடந்தவாரம் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசம் வரட்சி குறைந்து வருகின்றது.

மக்கள் மீள்குடியேறியபின் இரணைமடுக்குளத்தின் வலதுகரை வாய்க்கால் மூலமாக வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்கான நீர் திறந்து விடப்படாமையால் இப்பிரதேசக் கிணறுகள் நீர் மட்டம் குறைந்திருந்ததுடன் கால்நடைகளும் நீருக்காக அலைந்து திரிந்தன.

தற்போது நீர் திறந்து விடப்பட்டுள்ளமையால் கிணறுகளின் நீர்மட்டம் உயரத் தொடங்கியுள்ளதுடன் சிறு குளங்களான இரட்டைப் பனைக்குளம், பிள்ளையார் குளம், பெரிய குளம் ஆகியவற்றுக்கும் நீர் வரத் தொடங்கியுள்ளது. இதனால் கால்நடைகளும் நீருக்காக அலைந்து திரிவது குறைவடைந்துள்ளது.

இரு வாரங்களுக்கு முன்னர் இவ்வாய்க்காலில் குறைந்தளவு நீர் திறந்து விடப்பட்டமையால் இராமநாதபுரம் பகுதிக்கு நீர் செல்லாமல் இருந்தது. இது தொடர்பாக கடந்த வாரம் உதயனில் செய்தி வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நீரைத் திறந்து விட்டமை தொடர்பாக பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நன்றி தெரிவிப்பதுடன். இப்பகுதி வாய்க்கால்களையும் புனரமைத்துச் சீரான நீர் விநியோகத்திற்கு உதவ முன்வர வேண்டும் எனவும் அவர்கள் கோருகின்றனர். (த-405)

# மீளக்குடியமர்ந்த மக்கள் பதிவுகளை மேற்கொள்க

கிளிநொச்சி,ஓக.18

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியேறிய மக்கள் தமது தேவைகள் தொடர்பான பதிவுகளை உடனடியாக கிராம அலுவலர் அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கல்மடுநகர் கிராம அலுவலர் சி.பரமதாஸ் அறிவித்துள்ளார்.

குடியிருப்பதற்கு காணி அற்றோர், காணிகளுக்கான அனுமதிப் பத்திரம் மற்றும் வீடுகளைப் புனரமைக்க வேண்டியுள்ளோர், கிணறுகளைப் புனரமைக்க வேண்டியுள்ளோர், சுயதொழில்களை மேற்கொள்ளவுள்ளோர் போன்றோர் தமது விவரங்களை உடனடியாகப் பதிவு செய்யுமாறு கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (த-405)




# செல்லியாதீவு அ.த.க.பாடசாலைக்கு நாமல் ராஜபக்ஷ குழுவினர் விஜயம்

பூநகரி,ஓக.18

ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் கடந்த புதன்கிழமை பூநகரியில் அமைந்துள்ள செல்லியாதீவு பாடசாலைக்கு விஜயம் செய்தனர். அவர்களை பாடசாலையின் அதிபர் சே.அம்பிகைபாகன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் தருமரட்ணம் ஆகியோர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.




பூநகரி, கிளிநொச்சி பிரதான வீதியில் பாடசாலைக்குச் செல்லும் சந்தியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைப் பெயர்ப் பலகை முதல் நிகழ்வாகத் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் நாதஸ்வர மங்களவாத்தியத்துடனும் பாடாசலை மாணவிகளின் வரவேற்பு நடனத்துடனும் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு இலங்கையின் தேசியக் கொடியும் பாடசாலைக் கொடியும் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினரின் வருகை நினைவாக மரம் நாட்டப்பட்டு பின்னர் நிகழ்வு நடைபெறும் மண்டபத்திற்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் அதிபரினால் பாடசாலை சம்பந்தமான தற்போதைய தேவைகள், நிலைமைகள் எடுத்துக் கூறப்பட்டன. அதன் பின்னர் நாமல் ராஜபக்ஷ சிறப்புரை ஆற்றினார்.

அவர் தமது உரையில் பாடசாலைத் தேவைகளை தான் உடனடியாகக் கவனிப்பதாகவும் நிறைவேற்றித் தருவதாகவும் உறுதி அளித்தார். பின்னர் மாணவர்களுக்குச் சிறிய அன்பளிப்புப் பொருள்களும் வழங்கப்பட்டன. (த)

# கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு புதிய உதவிக் கல்விப் பணிப்பாளர்

கிளிநொச்சி,ஓக.18

கிளிநொச்சி கல்வி வலயத்தின் உடற்கல்வி பாடத்திற்கான புதிய உதவிக் கல்விப் பணிப்பாளராக பிரதாப்சிங் விஷ்ணு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 3 ஆம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் உடற்கல்வி பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றிய இவர் முன்னர் வவுனியா சிதம்பரபுரம் சிறி நாகராஜா வித்தியாலயம், வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயம், கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் உடற்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றியவராவார்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் உடற்கல்வி பாடத்தில் கற்பித்தலுக்கான தேசிய டிப்ளோமா சான்றிதழைப் பெற்ற இவர் 1998 ஆம் ஆண்டிலிருந்து உதைபந்தாட்ட மத்தியஸ்தராகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஆவார். (த-405)

# தமது காணிகள் அபகரிக்கப்படுவதாக பொன்னகர் பகுதி மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஓக.18



தமது காணிகளை அபகரித்து தங்களை வேறு இடங்களுக்கு அகற்றும் நடவடிக்கையில் சில அதிகாரிகள் ஈடுபட்டிருப்பதாக பொன்னகர் மக்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர். 50இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்த பொன்நகர் கிராமத்தில் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் வசித்து வந்தார்கள். வடக்கு மாகாண சபை அலுவலகம் அமைப்பதற்காக மக்களின் காணிகளை அபகரிக்க திட்டமிட்டிருப்பதாக மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி பொன்னகர் கிராமத்திற்கு சென்று மக்களுடன் சிறிதரன் எம்.பி உரையாடியுள்ளார். மக்களின் நிலைவரங்களையும் பார்வையிட்டார். அத்தோடு இந்த விடயம் தொடர்பாக உரியதரப்புகளுடன் பேசி விரைவில் மக்களை அந்தப் பகுதிகளில் குடியமர்த்த நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

தற்பொழுது 14 குடும்பங்கள் அந்தக் கிராமத்தில் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் குடியேறியுள்ளனர். ஏனைய 35இற்கு மேற்பட்ட குடும்பங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தங்கள் காணிகளை அபரிக்கும் திட்டத்தை ஒரு பொழுதும் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த மக்கள் அதற்காகப் போராடுவோம் என்றும் குறிப்பிட்டனர். (த)

# யுத்தத்தில் கணவரை இழந்த பெண்களுக்கு விசேட வீட்டுக் கடன் திட்டம் அறிமுகம்

கிளிநொச்சி,ஓக.18

யுத்தத்தில் கணவரை இழந்த பெண்களுக்கு விசேட வீட்டுக் கடன்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சினால் இந்தக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை வங்கியினால் வழங்கப்படும் இந்த கடன்திட்டத்தின் மூலம் யுத்தத்தினால் கணவரை இழந்த ஆயிரக் கணக்கான பெண்கள் நன்மை அடைவார்கள் என சிறைச்சாலைகள் அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்தக் கடன் திட்டம் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தில் கணவரை இழந்த பெண்களுக்கு நான்கு வீத வட்டியில் இந்த வீடமைப்புக் கடன் வழங்கப்படுகிறது.

2லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் கடன் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடன் வழங்குவதற்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், 50,000 விண்ணப்பங்கள் வரையில் எதிர்பார்ப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# கல்மடுநகர் கிராமத்தில் உள்ள பயனாளிகளுக்குக் கோழிகள்

கிளிநொச்சி,ஓக.18

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் கோழி வளர்ப்புக்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இவர்களுக்கு கோழிக் கூடுகள் அமைப்பதற்கான பொருள்களும் கோழித்தீவனங்களும் வழங்கப்பட்டிருந்தன. கடந்தவாரம் அவர்களுக்கான கோழிக் குஞ்சுகளும் வழங்கப்பட்டுள்ளன.

மக்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் இவ்வாறான சுய தொழில் ஊக்குவிப்புக்கள் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்பதால் இவ்வாறான திட்டங்கள் அனைவருக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என பிரதேச மக்கள் கோருகின்றனர். (த-405)

# தமிழ்ச் செம்மொழி விழாவையொட்டி கவிதை, சிறுகதைப் போட்டிகள்

மன்னார்,ஓக.18

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் தமிழ்ச் செம்மொழி விழாவை முன்னிட்டு கவிதை, சிறுகதைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்கு பற்ற விரும்புபவர்கள் ஈழத்தமிழரின் அவலங்களை மையப்படுத்தி எழுதுதல் வேண்டும். அத்துடன் இதற்கு முன்னர் பிரசுரிக்கப்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

தலைப்பை விரும்பியவாறு தீர்மானிக்கலாம். ஆக்கத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை தனியாக இணைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் 'மன்னார் தமிழ்ச் சங்கத்தின் முதலாமாண்டு நிறைவு கவிதை /சிறுகதை போட்டி' எனக் குறிப்பிட்டு 'வி.எஸ்.சிவகரன், பொதுச் செயலாளர், புனித வளனார் மாணவர் இல்லம், இல 30, வைத்தியசாலை வீதி, மன்னார் எனும் முகவரிக்கு 30.09.2010 இற்கு முன்பாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் கவிதை, சிறுகதைகளுக்கு முதலாம் பரிசாக 5000 ரூபாவும், இரண்டாம் பரிசாக 3000 ரூபாவும், மூன்றாம் பரிசாக 2000 ரூபாவும் ஏனைய 9 படைப்புக்களுக்கு பரிசுச் சான்றிதழ்களும் வழங்கப்படும். (த-6-80)

# மன்னார் செயலகத்தில் செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

மன்னார்,ஓக.18

மன்னார் அரச செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பொன்றின் போது, ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாந்தை மேற்கு பகுதியில் மீள் குடியேற்றப்பட்ட மக்கள் தமது விவசாய பிரச்சினைகள் தொடர்பில் பல தடவை கள் மன்னார் அரசாங்க அதிபரின் கவ னத்திற்குக் கொண்டு வந்திருந்தனர். எனினும் இது குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனையடுத்து, நேற்றுக் காலை 9.30 மணியளவில் அரசாங்க அதிபரை நேரில் சந்திக்க மன்னார் அரச செயலகத்திற்குச் சென்றனர்.

கடந்த காலங்களில் தம்மைப் பற்றியும் தமது அரச அலுவலகம் பற்றியும் தவறான செய்திகள் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக மன்னார் அரசாங்க அதிபர் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. (த-80)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

## மேஷம்



தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். சாலங்களால் அவதிகள், அவமானங்களுக்கு ஆளாகலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். சொந்த பந்தங்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் போகலாம். வெளியூர்களில் இருக்கும் சிலரை தொடர்பு கொண்டு பேச முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம்.

## இடபம்



எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தது போல நடக்கும் நாள். உங்களுக்காகவோ அல்லது குடும்ப உறுப்பினர்களுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருட்கள் வாங்கலாம். மனைவி வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றி பெருமை சேர்க்கலாம். எதிர்பாராத சந்திப்புகள் நேரும்.

## மிதுனம்



கைமாத்தாக, கடனாக கொடுத்த பணம் திரும்ப வரும். குடும்ப உறுப்பினர்களிடம் யோசனை கேட்டு சில காரியங்களைச் செய்வீர்கள். முன்யோசனையுடன் செயற்படுவதன் மூலம் சில விடயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். உத்தியோகத்தர்கள் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். சூரிய வழிபாட்டின் மூலம் சுகம், சந்தோஷம் அதிகரிக்கும்.

## கடகம்



மறதியால் சில பிரச்சினைகள், அவதிகளுக்கு ஆளாகலாம். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளை எதிர்கொள்ளலாம். உடன்பிறப்புக்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பழைய பொருட்களை மாற்றி புதிய பொருட்கள் வாங்குவீர்கள். சக ஊழியர்கள் அல்லது மற்றவர்களின் பேச்சை நம்பி எந்த காரியத்திலும் இறங்க வேண்டாம்.

## சிங்கம்



ஆதாயமில்லாத அலைச்சல்கள் அதிகரிக்கும் நாள். கொடுக்கல் வாங்கல்களில் சுமுகமான நிலைமை காணப்படும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் இழுபறிகள் காணப்படும். மற்றவர்கள் மத்தியில் உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல முன்னேற்பாடு செய்வீர்கள்.

## கன்னி



சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்கை அதிகரிப்பீர்கள். பல நாள்களாக திட்டமிட்ட காரியம் ஒன்று இன்று எளிதாக முடியும். வியாபாரிகள் கணிசமான பொருள் வரவுகளைப் பெறலாம். உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலையலாம். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

## துலாம்



எதிர்பார்த்த காரியம் ஒன்று நடக்காமல், எதிர்பாராத ஒரு காரியம் நடக்கும். அவசரச் செலவுகளைச் சமாளிக்க பிறரிடம் கைமாத்து வாங்கலாம். இறை வழிபாடுகளுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். ஒருவர் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல் கையை விரிக்கலாம். வழக்கமான வேலைகளில் மாற்றங்கள் செய்யலாம்.

## விருச்சிகம்



விருந்து, விசேடங்களால் மகிழ்ச்சி, சந்தோஷம் உண்டு. செலவுகள் இருந்தாலும் அதற்கேற்ற வரவுகள் வந்து சேரும். வீண் பழிகளில் இருந்து விடுபட்டு பாராட்டுப் பெறுவீர்கள். ஆசைப் பட்ட பொருள்களை வாங்க புதிய திட்டம் போடுவீர்கள். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். வெற்றிகரமான நாள்.

## தனுசு



பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த முக்கியமான தகவல்கள் வரலாம். பெரிய அளவில் கற்பனை செய்திருந்த காரியம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காக அல்லது மருத்துவ சிகிச்சை தொடர்பான காரியங்களுக்காக காத்திருக்கலாம். வீண் பயம் உண்டாகும்.

## மகரம்



பயணங்களால் அலைச்சல், திரிச்சல் உண்டு. யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளும். சகோதரர்கள் அனுசரணையால் நல்ல காரியம் ஒன்றை செய்வீர்கள். உறவினர் ஒருவர் மூலம் அவர்களுக்கு வேண்டிய நபர்கள் அறிமுகமாகலாம். பெண்கள் தொடர்பான வழிகளில் அனுகூலம் உண்டு. சுகமான இனிய அனுபவங்களைப் பெறலாம்.

## கும்பம்



அடுக்கடுக்காக வேலைகள் குவிந்தாலும், அசராமல் செய்து முடிப்பீர்கள். உறவினர்கள் சிலர் எதிர்பாராத வகையில் அவர்களுக்கு உதவி செய்வீர்கள். சக ஊழியர்களின் வாழ்த்துக்களைப் பெறுவீர்கள். கடந்த காலத்தில் உதவிய ஒருவரை நினைத்து பார்ப்பீர்கள். அயலார் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும்.

## மீனம்



புதிய அனுபவங்களைப் பெறுவீர்கள். நண்பர்கள் சிலரை விமர்சிப்பதன் மூலம் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். மறைமுக எதிர்ப்புகளால் மன அமைதி பாதிக்கலாம். குடும்பப் பெரியவர்கள் உங்களிடம் கோபமாக நடந்து கொள்ளலாம். தொழில் ரீதியாக வெளியூர் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகும்.


## விற்பனைக்கு

சுதுமலை தெற்கு, விளாப் படை வீதியில் 19 பரப்புக் காணியும், எச்சாட்டி வீதியில் 6½ பரப் புக்காணியும் உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- V.K.தனபாலா
தொ.பே:- 0776779348




சீட்டிழுப்பு இலக்கம் 673 திகதி 16-08-2010

வெற்றி எண்கள்

08 34 42 59 P

ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,000,000/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 2,000/= | 30,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 411 | 1,000/= | 411,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 587 | 1,000/= | 587,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16433 | 60/= | 985,980/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7546 | 40/= | 301,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 191893 | 20/= | 3,837,860/= |
| | | மொத்தம் ரூ. | 6,953,680/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| புத்தளம் | 600280669-1-21 |
| மாத்தளை | 600286328-5-45 |
| மட்டக்களப்பு | 600291393-8-38 |
| கேகாலை | 600286333-8-48 |
| பொலன்னறுவை | 600287329-8-28 |
| கம்பஹா | 600285414-0-30 |
| அனுராதபுரம் | 600289603-9-49 |
| கண்டி | 600284149-8-38 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,353,680/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 10,517,920/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 ஓகஸ்ட் 19 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

CDB
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட்
உங்கள் நண்பன்

அதிகபட்ச நன்மையும் உன்னத சேவையும்

15.25%
(A.E.R.12%)
5 வருட வைப்புகளுக்கு

உங்கள் நிலையான வைப்புக்கு

கணக்காய்வு செய்யப்பட்ட நிதித் தகவல் சுருக்கம்
2010 மார்ச் 31இல் இருந்தவாறு

| | |
|---|---|
| மொத்தச் சொத்துகள் | 6675 மில்லியன் |
| வரிக்குப் பின் இலாபம் | 79 மில்லியன்* |
| மொத்த வருமானம் | 1900 மில்லியன்* |
| பங்குதாரர் நிதியம் | 513 மில்லியன் |
| கடன் பெறுகை | 755 மில்லியன் |
| முதலீடு | 4837 மில்லியன் |

*2010 மார்ச் 31இல் முடிவடைந்த 15 மாதங்களுக்கானது

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 1995 செப்டெம்பர் 07

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் லிமிட்டட்
இல.18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.

உடனடி அழைப்பு 011 7 388 388

www.cdb.lk

கிளைகள் - அனுராதபுரம், பத்தரமுல்லை, பதுளை, சிலாபம், எம்பிலிப்பிட்டிய, கம்பஹா, ஹொரண, கடுவெல, களுத்துறை, கண்டி, காலி, கேகாலை, கொஸ்ஜப்பிட்டிய, குருநாகல், மஹரகம, மஹர, மத்துகம, மாத்தறை, மொறட்டுவை, நீர்கொழும்பு, திட்டம்புல, இரத்தினபுரி, வத்தளை, வெள்ளம்புல, திஸ்ஸமஹாராம, காலி, தம்புள்ள, கதுருவெல, யாழ்ப்பாணம், வவுனியா கொட்டாஞ்சேனை.

| காலம் (மாதங்கள்) | மாதாந்தம் | வ.தே.வீ. | முதிர்ச்சியில் | வ.தே.வீ. |
|---|---|---|---|---|
| 12 | 12.00% | 13.00% | 12.68% | 13.00% |
| 24 | 13.50% | 15.00% | 14.37% | 14.02% |
| 36 | 13.50% | 15.00% | 14.37% | 13.18% |
| 48 | 13.50% | 15.00% | 14.37% | 12.47% |
| 60 | 13.50% | 15.25% | 14.37% | 12.00% |

பணிப்பாளர் சபை
[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்சிலூடஸ் துணை கோளில் தண்ணீர் ஆதாரம்




விண்வெளி ஆராய்ச்சிக்காக செலுத்தப்பட்ட காசினி விண்கலம், நூற்றுக்கணக்கான படங்களை பூமிக்கு அனுப்புகிறது. சூரியக் குடும்பத்தில் உள்ள என்சிலூடஸ் துணை கோளை, காசினி விண்கலம் சுமார் 6,17,000 மைல் தூரத்தில் பயணித்தபோது, எடுத்த படத்தை டாக்டர். ப்ராங்க் போஸ்ட்பெர்க் விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர்.

இதில் என்சிலூடசில் உப்புநீர் பனிப்பாறைகள் இருப்பது தெரியவந்துள்ளது. மேலும் அங்கு ஏரிகள், நீர்தேக்கங்கள், மற்றும் கடல்கள் இருந்திருக்கக்கூடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான சாத்தியக் கூறுகளும் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்த ஆராய்ச்சி மேலும் தொடர்ந்து நடைபெறுகிறது. சூரிய மண்டலத்தில் உள்ள 3 துணைக் கோள்களில் என்சிலூடசும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐந்தாம் அறிவைப் பயன்படுத்தி உயிர் தப்பும் பூச்சிகள்




தாவரங்களை நம்பியுள்ள சிறு பூச்சிகள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள 5ஆவது அறிவைத் தீட்டிக்கொள்வது தெரியவந்துள்ளது. இத்தகைய பூச்சிகளுக்கு இயற்கையிலேயே மோப்ப சக்தி அதிகம். இதனால் பாலூட்டிகள் போன்ற இதர விலங்குகள் தங்கள் உணவுக்காக தாவரங்களை நாடிவரும் போது, அதை இருப்படமாகக் கொண்டுள்ள பூச்சிகள் தங்கள் மோப்ப சக்தியால் அதை முதலிலேயே அறிந்து கொள்ளும்.

எனவே உயிர் பிழைக்கும் நோக்கில் அவை தாவரங்களில் இருந்து தரையில் விழுந்து விடுகின்றன. விலங்குகள் சென்ற பின் அந்தப் பூச்சிகள் தங்கள் இருப்படத்திற்குத் திரும்புவதும் தெரியவந்துள்ளது. ஒரு சில விநாடிகள் அசட்டையாக இருந்தாலும் விலங்குகளுக்கு பூச்சிகள் உணவாகிவிடும் என்பதால் இயற்கையிலேயே அந்தப் பூச்சிகளுக்கு எச்சரிக்கை உணர்வு உள்ளது தெரியவந்துள்ளது.

இஸ்ரேலில் உள்ள ஹைபா பல்கலைக் கழக விஞ்ஞானிகள் தாவரங்களும், பூச்சிகளும் குறித்து நடத்திய ஆய்வுத் தகவல் நடைமுறை உயிரியல் என்ற அறிவியல் இதழில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

# பூமியில் மனித இனத்துக்கு ஆபத்து



அடுத்த் சில நூற்றாண்டுகளில் வேற்று கிரகங்களில் மனிதனை குடியமர்த்த வேண்டியது மிகவும் அவசியம். பூமியில் மட்டுமே இருந்தால், மனித இனமே கூண்டோடு அழிந்து விட வாய்ப்பு உள்ளது என விஞ்ஞானி ஒருவர் எச்சரித்துள்ளார். இதுகுறித்து புகழ் பெற்ற அறிவியல் அறிஞர் ஸ்டீபன் ஹாக் கிங் கூறியதாவது:-

நல்லதே நடக்கும் என்ற எண்ணம் எனக்கும் உண்டு. எனினும், மனித இனம் பூமியில் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு வாழ முடியும் என்பது குறித்து நீண்ட விவாதம் நடத்த வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது. ஏனெனில், அடுத்த சில நூற்றாண்டுகளில் பூமியில் மிகப்பெரிய அழிவு ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

கடந்த காலங்களில் சில சமயங்களில் மனித இனம் இனியும் தப்புமா? என்ற கேள்வி எழுந்ததும், அதிலிருந்து நூலிழையில் தப்பயதையும் அறிவோம். 1963இல் ஏற்பட்ட கியூபா ஏவுகணை நெருக்கடியை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதுதவிர, 1945ம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி மீது அமெரிக்கா அணுகுண்டு விசியதால் லட்சக்கணக்கானோர் உயிரிழந்ததுடன் பலர் கொடிய நோயால் பாதிக்கப்பட்டனர். மேலும் சூறாவளி, பூகம்பம், சுனாமி போன்ற இயற்கை பேரிடர்களின் அச்சுறுத்தலும் தொடர் கதையாக உள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் இனி வரும் காலங்களிலும் அடிக்கடி நிகழ வாய்ப்பு உள்ளது. இவ ற்றை எல்லாம் எதிர்கொள்வதற்கு நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

முக்கியமாக அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும். அடுத்ததாக, பூமி வெப்பமாதல், பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்பது உட்பட சுற்றுச் சூழலை பாதிக்கும் பல்வேறு விஷயங்களை தடுக்க வேண்டும். இவையெல்லாம் அவ்வளவு எளிதில் நடக்கும் விஷயம் அல்ல. இதிலிருந்து தவறினால் மனித இனமே கூண்டோடு அழியலாம்.

எனவே, ஆயிரமாயிரம் ஆண்டுகளையும் கடந்து மனித இனம் வாழ வேண்டுமானால், வேற்று கிரகங்களில் குடியேற்றுவது அவசியமாகிறது. அதற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபடவேண்டும்.



# உடலில் வெண்படலம் படருவதால் ஆபத்தா?

வெள்ளை நிறத் தோலுடன் இருப்பதே அழகு என, இந்தியர்கள் நினைக்கின்றனர். தங்கள் தோலின் நிறம் வெண்மையாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்கின்றனர்.

ஆனால், உடலில் திட்டு திட்டாக வெண்மை படலம் படரும் போது அதிர்ச்சியாகின்றனர். அவர் உறவினர்களும் அதிர்ச்சி அடைகின்றனர். வெண்மை படலம் படிவதற்கு, லூகோடெர்மா அல்லது விடிலிகோ என்று பெயர். மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவீதத்தினருக்கு இது போன்று ஏற்படுகிறது.. பொதுவாக 12 முதல் 40 வயதுக்கு இடைப்பட்ட காலத்தினருக்கு இது போன்று ஏற்படுகிறது. யாருக்கு இது போன்று ஏற்படுமென சொல்வதற்கில்லை. சமூக, பொருளாதார பின்னணியெல்லாம் பார்த்துகொண்டு, இது ஏற்படாது.

சாதாரண மக்களுக்கும் இந்தப் பாதிப்பு ஏற்படுகிறது. இது போன்ற பாதிப்பு ஏற்பட்டுள்ளவர்களில் 25 சதவீதத்தினர், கவலை, மன அழுத்தம் அல்லது தற்கொலை செய்து கொள்ள நினைக்கின்றனர். சமூகத்தில் எந்த நாட்டு மக்களும் இதற்கு விதி விலக்கல்ல. பணம் படைத்தவர்களால் கூட, இந்நோயை குணப்படுத்திக் கொள்ள முடிவதில்லை; சிறந்த தோல் மருத்துவரை நாடி செல்ல மட்டுமே பணம் உதவுகிறது. வெண் படலம் முதலில், கைகள் மற்றும் கால்களில் துவங்குகிறது. மைக்கேல் ஜாக்சனுக்கு முதலில் கையில் தான் வெண் படலம் துவங்கியது. அதை மறைக்கவே, கையில் கிளவுஸ் அணிந்தபடி, பொது இடங்களில் தோன்றத் துவங்கினார். சிலருக்கு மூக்கு, வாய், கண்கள், தொப்புள் போன்ற இடங்களில் வெண் படலம் தோன்றும். பிறகு பரவாமல், அந்தந்தப் பகுதிகளுடன் நின்றுவிடும்; சிலருக்கு உடல் முழுவதும் பரவும். உடலின் இரண்டு பக்கங்களிலும் இது ஏற்படலாம். சில பகுதிகளில் தானாகவே சரி யாகி விடும். சில நேரங்களில், மற்ற பகுதிகளுக்கும் பரவும். வெண் படலம் உருவாக, மரபணுவே காரணம். 17ஆவது குரோமோசோமில் உள்ள சில மரபணுவில் மாற்றம் ஏற்படுவதால் இது போன்ற நிலை ஏற்படுகிறது. பொதுவாக, இது பரம்பரை நோயாக ஏற்படும். சிலருக்கு, இந்தப் பிரச்சினைக்குரிய மரபணு துண்டிப்பு, உடலில் இருந்தாலும், வாழ்நாள் முழுவதும் வெண் படலம் ஏற்படாமலேயே போக வாய்ப்பும் ஏற்படும். எனினும், குடும்பத்தில் ஒருவருக்கு இந்தப் படலம் தோன்றினால், மற்றவர்களுக்கும் தோன்ற, ஐந்து மடங்கு வாய்ப்பு அதிகம். இதே மரபணு தான், இள வயது நரைக்கும் காரணமாகிறது. சிலருக்கு உடலில் வெண் படலமாகத் தோன்றும். சிலருக்கு இருபது வயதிலேயே நரை தோன்றும். சிலருக்கு, எந்தப் பாதிப்புமே தோன்றாது.

கவலைகள் அதிகரிக்கும் போது இந்த மரபணு தன் குணத்தைக் காட்டத் தோன்றும். சில விபத்துக்களாலோ அல்லது ஒவ்வாத உடைகள் அணிவதாலும் இந்த மரபணு தூண்டப்பட்டு விடும். மாற்றம் கொண்ட மரபணு, உடலில் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து, மெலனோசைட்ஸ் என்ற நிறமி செல்களை, எதிர்க்கும் செல்களை உருவாக்கிவிடுகிறது. எனவே, மெலனோசைட்ஸ் செல்கள் அழிக்கப்பட்டு விடுகின்றன. தைராய்டு, வயிறு, அண்ணீரக சுரப்பியை (அட்ரினல் கிளாண்டு) பாதிக்கும் நோய் எதிர்ப்பு செல்களால் கூட, வெண் படலம் தோன்றலாம். சிஸ்டெமிக் லூபஸ் என்ற நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம்.

உடலுக்கு, மெலனின் என்ற நிறத்தை கொடுக்கும் நிறமி, சரியான முறையில் வேலை செய்யாமல் போவதால், இது போன்ற பாதிப்பு ஏற்படுகிறது. இதுவும் பரம்பரையாக ஏற்படுவது தான். தாய், தந்தை இருவருக்குமே இப்படிப்பட்ட மரபணு இருந்தால், குழந்தைக்கு இது போன்று ஏற்படும். இந்த மரபணு கொண்டவர்கள் சாதாரணமாகவே இருப்பர். அவர்களை அறியாமல், இதே மரபணு கொண்டவர்களைத் திருமணம் செய்து கொள்ளும்போது, அவர்களுக்கு, அல்பனோ வகை குழந்தை பிறக்கும். உடலின் ஒரு குறிப்பட்ட பகுதியில் மட்டும் வெண் படலம் பரவும் வகையிலான அமைப்பு;பிறப்பிலேயே சிலருக்கு அமையும். இதற்கும் பாரம்பரியம்தான் காரணம்; பீபால்டிசம் என இதற்குப் பெயர். உடலின் எந்த பகுதியிலும் இது ஏற்படலாம். எனவே தோல் பரிசோதனை செய்தால் மட்டுமே, எந்த வகையான நோய் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிய வரும். வெண் படலம் தோன்றினால், நம் உடலில் சூரிய ஒளி நேரடியாகப் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மற்ற இடங்களில் தோல் கருப்பாகி, வெண் படலம் வித்தியாசமாக தெரியத் துவங்கிவிடும். எனவே, சன் பல்டர் 30 சதவீதம் அடங்கிய, சன்ஸ்கிரீன் லோஷனை, உடலில் வெயில் படும் இடங்களில் பூசிக் கொண்டபிறகே, வெளியில் செல்ல வேண்டும். குடை விரித்து செல்வது மிக மிக அவசியம். சிறிய வெண் படலங்களை, சில களிம்புகளைப் பூசி மறைக்கலாம். டாக்டர்களின் பரிந்துரையின் பேரில், ஸ்டிராய்டு களிம்புகளும் பூசலாம். எனினும், தொடர்ந்து களிம்பு பூசினால், தோலின் தன்மை கெட்டு விடும். கி.மு., 1500 ஆண்டிலேயே, இந்தியர்களும், எகிப்தியர்களும் வெண் படலம் குறித்த ஆராய்ச்சியில் இறங்கிவிட்டனர்.

இன்றும் கூட, இந்த பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகள் வெளிப்பூச்சாகவும், மருந்துகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. செயற்கையாகத் தயாரிக்கப்படும் மருந்துகளும் உள்ளன. அவை அனைத்துமே, சூரிய ஒளியின் தாக்கத்தை எதிர் கொள்ளும் தன்மையில் அமைந்தவை. நிறம் கொடுப்பவை. இயற்கையான சூரியஒளியோ, அல்[illegible]த்தில் படச்செய்து சிகிச்சை அளிப்பது தான் தற்போதைய நடைமுறை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தர வாதமளிக்கப்பட்ட No.1 பிறிமா புறொயிலர் கோழிக் குஞ்சுகள் 25.08.2010 அன்று விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே: 0212226944

நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையத்திலும் பதிவு செய்யலாம். தொ.பே: 0774656377

ஹோர் டி பாம் வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம். 021 321 6290


# அக்கரைப்பற்றில் விபத்து; சமுர்த்தி உத்தியோகத்தர் பலி

கொழும்பு, ஓக. 18

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூழாவாடி பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் அக்கரைப்பற்று - சாகாம வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் அதேபிரதேசத்தைச் சேர்ந்த கே.யோகநாதன் என்ற சமுர்த்தி உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார் என அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சமுர்த்தி உத்தியோகத்தரும், அவரின் மைத்துனரும் சாகாமத்தில் இருந்து அக்கரைப்பற்று நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வேகமாக வந்த டிரைக்டரில் மோதுண்டு சமுர்த்தி உத்தியோகத்தர் சம்பவ இடத்திலேயே பலியானார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த சமுர்த்தி உத்தியோகத்தரின் மைத்துனர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார் எனவும் தலைமறைவாகியுள்ள டிரைக்டரின் சாரதியை தாம் தேடிவருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்றுக்காலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார் தொடர்ந்து விசாரணை இடம்பெற்றுவருகின்றது என்றும் தெரிவித்தனர். (ஒ-10)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 10 . 1947

மறைவு 10 . 09 . 2008



திருமதி குகதாம்பாள் கோபாலசுந்தரம்

DIP IN MUSIC SLTS- I பட்டதாரி, பட்டப்பின் படிப்பு பயிற்றப்பட்ட ஆசிரியை. சங்கீதகலா வித்தகர். அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில் ஓதுவார்.

திதி: தசமி

உள்ளத்தால் உயர்வாகி வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும் எங்கள் தெய்வமே!
ஈராண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறாது எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

12/4, கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(101894)


# கொழும்பு மாவட்ட அபிவிருத்திக்கு 13 ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஓக. 18

கொழும்பு மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு என 13 ஆயிரம் கோடி ரூபா நிதி தமது அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில்ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்புமாவட்டத்தின் அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதன் அடிப்படையில், கொழும்பு மாவட் டத்தின் 13 செயலாளர் பிரிவுகளை அபவிருத்தி செய்யும் நோக்கில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(சி)


## DANISH REFUGEE COUNCIL

*DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDPs) in the north and east of the country. The program includes activities in the sectors of infrastructure rehabilitation, emergency response, protection, and capacity development; and operates within a strategy based on participation and partnership. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Jaffna and a liaison office in Colombo.*

### Legal Protection Field Officer – Jaffna

The Legal Protection field officer will work as part of the District Team, specifically in support of the Legal Protection Officer, to provide legal advice, awareness raising / training on legal and human rights issues, identification and assistance of especially vulnerable individuals and groups.

The position is in Jaffna with frequent travel within the district and occasionally to other districts.

**Qualifications:**

★ University degree in Law
★ Familiarity with the legal system of Sri Lanka.
★ Knowledge of Human Rights principles and Government structure.
★ Knowledge of IDP context and that of vulnerable groups.
★ Confidence and ability to communicate with Government, UN agencies, NGO's and communities.
★ Advocacy skills & Training skills.
★ Ability to organize training and awareness raising events.
★ Excellent oral and written communication skills in English and local languages are essential requirement.
★ Computer skills in MS office and Data management skills.
★ Willingness to reside, work and travel in Jaffna District

* Interested candidates are invited to submit their application (Cover letter and CV) electronically in Word or PDF format no later than 25th August 2010 indicating your name and the title of the position in the subject line of the e-mail along with two non-related referees.
* Applicants should send their applications to jaffna@drc-lk.org or via hardcopy to DRC, 456, Main Street, Chundikkuli, Jaffna. Please note that DRC is not to be held responsible in case of mal transmission or non timely receipt of the application.
* Only short listed candidates will be contacted.
* The recruitment process will consist of written tests and interviews to be held in Jaffna.
* As an equal opportunity employer DRC encourages the application of women and/or underrepresented communities for the position.



## நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு அதிரடி மலிவு விற்பனையில்...

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துவிசலறைச் சாதனங்கள், சகல மாபிள் வகைகள், கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், கல்மிதிபோல்கள் போன்றவற்றை தரமான, மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

ஸ்ரார் செராமிக்ஸ்
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0215672061, 077 7578277.






அழகான உடலைப் பெற...

சொக்லட் மற்றும் வனிலா சுவை கொண்ட வெயிட் கெய்னர், அதில் அடங்கியுள்ள தீவிர செயற்பாட்டுச் சேர்வை மூலம் அவசியமான போஷாக்கை வழங்கி, உங்களது நேர்த்தியான உடல் வளர்ச்சிக்கு உதவும் மெலிந்த தோற்றமுடைய நீங்கள் முற்றிலும் வித்தியாசமான, கவர்ச்சியான உடலழகை பெறுவீர்கள்.

Hotline 0777 536 796
Manufactured under licence from Edge USA
EDGE வெயிட் கெய்னர்


## கரைச்சி பிரதேச சபை
## முக்கிய அறிவித்தல்

முறிகண்டியில் இருந்து ஆனையிறவு வரையான ஏ-9 வீதியின் (கண்டிவீதி) இரு மருங்கிலும் உள்ள பல கட்டடங்கள், காணிகள் இதுவரை திருத்தப்படாமல் இருப்பதும் பாவனைக்கு உட்படுத்தப்படாமல் இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. மேற்படி தனியார், அரச, அரசசார்பற்ற கட்டடக் காணி உரிமையாளர்கள் அவற்றை உடனடியாகத் திருத்தி பாவனைக்கு உட்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். 31.08.2010ஆம் திகதிக்கு முன்னர் திருத்தி பாவனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்க முடியாவிடில் சபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தற்போது உயிர்கொல்லி நோயாகப் பரவிவரும் டெங்கு நோயின் தாக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற இந்நடவடிக்கையை முக்கியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே தங்கள் காணி, கட்டடங்களைத் திருத்தி சுற்றாடலைப் பாதுகாப்பாக வைத்திருப்பது தங்களின் கட்டாயக் கடமை என்பதுடன் இதனை செயற்படுத்தாதவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

பொன்.நித்தியானந்தன்,
விசேட ஆணையாளர்.

## கொவிசெத
### உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 768
சீட்டிழுப்பு திகதி 16.08.2010

எழுத்து: E

வெற்றி இலக்கங்கள்: 03 09 28 56

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 21,666,661.60 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 310 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 606 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15129 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8558 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 214690 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 33825 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,291,520.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 22,157,531.20

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 02.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் மக்களின் மின்பாவனை அதிகரிப்பு

கோப்பாய்,ஓக.18

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகள் விஸ்தரிப்புக் காரணமாக மின்தேவை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இப்பிரதேச மின் விநியோகங்களில் அதிக நுகர்ச்சி காரணமாக வலுக் குறைந்த மின் கிடைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் விவசாயிகளின் நீர் இறைக்கும் மோட்டர்கள் மற்றும் பொதுமக்களின் மின்சாதனங்கள் பலவும் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இப்பிரதேசங்களில் மேலதிக மின் மாற்றிகளை பொருத்தியும் சட்ட விரோத மின் இணைப்புக்களை அகற்றியும் உதவுமாறு பிரதேச பொதுமக்கள் சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-72)

## டெங்குக் கருத்தரங்கு

நவாலி,ஓக.18

நாவலி கிழக்கு, ஜே/135 கிராம சேவையாளர் பிரிவில் டெங்கு ஒழிப்பு சம்பந்தமாக கருத்தரங்கொன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

கிராம சேவையாளர் ரி.நித்தியானந்தன் தலைமையில் நவாலி பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரபாகரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இதனையடுத்து குழுக்கள் நியமிக்கப்பட்டு வீடுகளுக்குச் சென்று சிரமதானம் செய்து படிவங்கள் வழங்கவும் பணிக்கப்பட்டனர். (த-100)




வடமராட்சி, ஓக. 18

தம்பசிட்டி மாயக்கை சித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டை, சப்பறத் திருவிழாவும், 23 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை காலை 7 மணிக்கு சமுத்திர தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-236)

* * *

கொழும்புத்துறை,ஓக.18

கோண்டாவில் மேற்கு மகா கணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட் கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், 25 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறும். (204-135)

* * *

வண்ணை,ஓக.18

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஏகாதசித் தீர்த்தம் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஸ்ரீமத் நாராயணருக்கு பூசை நடைபெறும். 9 மணிக்கு சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

மு.ப. 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நாராயண சுவாமி ஸ்ரீதேவி பூமாதேவி சகிதராய் வீதியுலா எழுந்தருள்வார். (204-160)

* * *

சுழிபுரம்,ஓக.18

மூளாய் முருகப் பெருமான் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும். (204-28)

## உயர் மின்னழுத்தக் கம்பிகள் பொருத்தும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.18

இலங்கை மின்சார சபையினர் சில இடங்களில் தற்போது உயர் அழுத்த மின்கம்பிகளைப் பொருத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது இணுவில் தெற்குப் பகுதி, மானிப்பாய் கிழக்குப் பகுதி உட்பட்ட கிராமங்களுக்கான உயர் அழுத்த மின் கம்பிகளைப் பெருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் இதுவரை மின்னிணைப்புப் பெறாத கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதிகளுக்கு மின் வழங்கத் தேவையான தூண்களும், கம்பிகளும் அவ்வவ் விடங்களில் பறிக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் தூண்கள் புதிதாக நிறுத்தப்பட்டுவருகின்றன. (த-313)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 18

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணி மண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு செல்வன் நாகேந்திரன் சுபாகரன் வழங்கும் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.


ஏ.ஜெயராமன் வயலினும், சதாவேல் மாறன் மிருதங்கமும், இரா.சிவராமன் கெஞ்சிராவும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந் திருவிழாக் காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலைநிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'இந்து சமய ஒழுக்கம்' என்னும் தலைப்பில் கனக வாரிதி கனகராசா சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். ஏழாலை ஆத்ம ஜோதி அறநெறிப் பாடசாலை, ஒட்டுமடம் ஞான வைரவர் அறநெறிப் பாட சாலை, இளவாலை ஞான வைரவர் அற நெறிப் பாட சாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (201)





# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## அருள் செய்ய வரவேண்டும்

பல்லவி

கந்தா... நல்லூர்க்கந்தா...
உந்தன் அருளை... நாடி வந்தேன்...
(கந்தா...)

அனுபல்லவி

பாதமலர் சரணடைந்தோம் பாடியே உருகி நின்றோம்
காவடிகள் எடுத்துவந்தோம் கவலைகளைத் தீர்க்க வா-
(கந்தா...)

சரணங்கள்

திருவீதி... வலம் வந்து...
தீவினைகளை மாய்க்க வேண்டும்
அருள்செய்ய தினம் தினமும்
கருணையுடன் வரவேண்டும்
(கந்தா...)

வெற்றிவேற் குமரனே வேண்டும் வரம் தருவோனே
சஞ்சலங்களைத் தீர்க்க வேண்டும் சாந்தத்தைத் தரவேண்டும்
வள்ளி தெய்வானை விரும்பிடும் மன்னவா
வரவேண்டும் அனுதினமும் அடியார்க்கு அருள்தரவே
(கந்தா...)

கி.கிரிசாம்பாள்
மானிப்பாய்.

## வரமருள்வாய் கந்தா

அப்பனே முருகா ஆனந்தனே! கந்தா,
இப்பொழுதெனக்கு ஈந்தருள்வாய் உன் அருளை
உன்பாதம் சரணடைந்தேன் ஊன்றிடுவாய் என்மனதில்
எப்போதும் உன்நினைப்பாய் ஏங்கியே தவிக்கின்றேன்
ஐங்கரனுக்கிளையவனே எனை ஆட்கொண்ட ஐயனே!
ஒரு காலும் மறவாமல் ஓம் எனும் அடியேன்
சொல்லாட்சி கேட்டு சோகம் அகற்றிடுவாய்
கற்றேன் உன் புகழை, அருளாட்சியை
கனன்றிட்டேன் உன் அருளால் உன்மேல்
பக்திப்பா பாடிடவே அருள் தருவாய் கந்தா நீ
கிலிகொண்டு நாமிங்கு கிளர்கின்ற வேளையில்
கலியுகக் கந்தனாய் காந்தருள்வாய் நம் வாழ்வையுன்
கொடியேற்றிக் குலம் காக்கும் நம்மவரை நின்றன்
படியேற இருபத்தைந்து நாள் அருளுகின்ற நாயகனே
நாங்கள் அடியொற்றி நின் துணையால்
நலமொடு வாழ்ந்திட நீ வரமருள்வாய்

தெல்லியூர் தேவி

## அன்பருள்ளம் உறைகின்ற அருட்குமரா போற்றி

நல்லைப் பதிவாழும் நல்லூர் முருகனே!
வல்ல வடிவே லழகனே - சொல்லரிய
உன்புகழை உன் அடியார் ஓதி வழிபடவே
உன்னதமாய் வாழ்வார் உயர்ந்து

அன்பருள்ளம் உறைகின்ற அருள்குமரா போற்றி!
ஆறுமுகம் கொண்ட அண்ணலே போற்றி!
இனிய வாழ்வு தருகின்ற ஏந்தலே போற்றி!
ஈசன் உமை மைந்தனே என்குருவே போற்றி!
உன் அருளால் உய்கின்றோம் உத்தமனே போற்றி!
உமைக் கருள் புரிந்த ஓங்கார ரூபியே போற்றி!
என்றும் இளமுகம் கொண்ட எழில் முத்தே போற்றி!
ஏற்றமுற எம் வாழ்வை எமக்கருள்வாய் போற்றி!
ஐந்து கரன் தம்பியே ஐயனே போற்றி!
ஒளிரூான வேலனே ஓம் முருகா போற்றி!
ஓசையெல்லாம் நீயானாய் ஒண் பொருளே போற்றி!
ஔவைக் கருள் புரிந்த அருட்குமரா போற்றி !

வே.இராமர்
தைடி,நாவற்குழி.

## மயிலேறி வந்திடுவாய்!

மயில் ஏறி வருகின்ற முருகா என்
மனதில் நீ தங்க வேண்டும் குமரா
அடியார்கள் அன்புடன் அழைக்கின்ற கந்தா
அடியேனுடன் விளையாட வர வேண்டும் ஐயா

வேலுடன் வீற்றிருந்து அருள்கின்ற ஆறுமுகா
வேண்டும் வரம் தந்தருளும் வேலையா - பூ
மலர்கள் தூவி வணங்குவேன் சண்முகா - உன்னை
மனமாரப் போற்றித் துதித்திடுவேன் முருகா

கி.கஸ்தன்
மானிப்பாய்.

## நல்லூரானை நினைத்துவிடு

தீராத வினையெல்லாம் தீர்ந்துவிடும் - நல்லூரான்
திருவடியைத் தொழுது விட்டால்
உருகாத உள்ளமும் உருகிவிடும் - நல்லூரான்
உருவமது கண்டு விட்டால்
வராத துயரெல்லாம் பறந்துவிடும் - நல்லூரான்
வடிவினை வணங்கி விட்டால்
நேராத துன்பங்கள் நெருங்காது - நல்லூரான்
நினைவுடன் வாழ்ந்து விட்டால்

வ.யோகானந்தசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் மருதபினார் சுப்பிரமணியம் குமாரசாமி
(தொழிலதிபர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், நெடுந்தீவு கிழக்கு பெயர்வளவையும், லண்டனையும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் குமாரசாமி அவர்கள் 19.07.2010இல் லண்டனில் இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.08.2010) புதன் கிழமை வாதாம்ஸ்ரோவில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(லண்டன்)
நெடுந்தீவு.

க.மருதபினார் (மருது) - மைத்துனர்
கு.தர்மசூரியர் (சூரியா) - பெறாமகன்

## பயிற்சி ஆசிரியருக்கான செயலமர்வு சனியன்று

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கற்றல், கற்பித்தல் உபகரணக் கண்காட்சிக்கான செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தினால் இச் செயலமர்வு 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்போடப்பட்டுள்ளதாகப் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்

(ஓ)

## பழைய மாணவர்களை அழைக்கின்றோம்

வெளிநாடுகளிலிருந்து வரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களை கல்லூரியின் அதிபர், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் சந்தித்துக் கலந்துரையாட விரும்புகின்றனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

தொ.பே. இல: 0212222431


# Computer Express

Institute of Information Technology.
No-15, Sirampiyadi Lane
off Stanley Road, Jaffna. Tp- 021-2228250

மாணவர்களின் நலன்கருதி மீண்டும் Computer Express நிறுவனம் Cosy Hotel 2nd Floorக்கு 25/07/2010இல் இருந்து இடமாற்றப்பட்டுள்ளது.

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் - 2010

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 3 Months 3000/= | Diploma in Desktop Publishing 4 Months ~~22,500/=~~ 4500/= | Diploma in Web Page Designing 3 Months ~~22,500/=~~ 4500/= |
| Diploma in Graphic Designing 4 Months ~~22,500/=~~ 4500/= | Diploma in Hardware Engineering 3 Months ~~20,000/=~~ 4000/= | Diploma in Auto CAD 3 Months ~~22,500/=~~ 4500/= |
| Diploma in Accounting Package 3 Months ~~22,500/=~~ 4500/= | Diploma in Computer Science 4 Months ~~22,500/=~~ 4500/= | Honors Diploma in Computer Science 3 Months ~~32,500/=~~ 6500/= |

2010 A/L பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு.....
பரீட்சைகள் முடிவு பெற்றதும்
விசேட கழிவுக்கட்டணங்களுடன் கணனி கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

50% Off Advance Courses

DIPLOMA IN FILM TECHNOLOGY & VIDEO EDITING ~~10,000/=~~ 5,000/=
DIPLOMA IN STUDIO TECHNOLOGY & MULTY MEDIA ~~9,500/=~~ 4,750/=

1வாரகால கற்கை நெறிகளும் ஆரம்பமாகின்றன......
Diploma in Video Editing
Diploma in Hard ware Engineering
Diploma in Graphic Designing
பதிவுகளுக்கு முந்துங்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்...

Batch i - 18.08.2010 - 9Am or3pm
Batch ii - 20.08.2010 - 9Am or3pm
Batch iii - 21.08.2010 - 9Am or3pm
Batch vi - 23.08.2010 - 9Am or3pm


## தமிழ்த்துறையின் கருத்தரங்கில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்.பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைப் பிரிவில் இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் இடம் பெறும் கருத்தரங்கில் கலாநிதி அம் மன்கிளி முருகதாஸ் 'சங்க இலக்கியத்தில் உழவர் பால் நிலையும் பாடல்களும்' எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கவுள்ளார்.

இந் நிகழ்வு தமிழகத்துறைப் பிரிவின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (6)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 08.09.1932

மறைவு: 19.07.2010

திருமதி அன்னலட்சுமி பொன்னுச்சாமி
(இளைப்பாறிய ஆசிரியை, யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்)

எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்ற
எண்ணம் கொண்ட குணவதியே!
உறவுகளின் ஓர் இணைப்புப் பாலமே!
பாரினிலே சிறப்பாக வாழ்ந்த நீங்கள்
பரமனடியில் அமைதி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

கடந்த 19.07.2010 திங்கட்கிழமை அன்று லண்டனில் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் 31 ஆம் நாள் நினைவுதினம் இன்று (18.08.2010) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வுக்கு தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பத் தலைவியின் மறைவுச்செய்திகேட்டு ஓடோடிவந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி, தபால் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஏழாலை வடக்கு, ஏழாலை.

என்றும் நினைவுடன்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## பொன்னுச்சாமி பரமேஸ்வரி



மஞ்சத்தடி, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி பரமேஸ்வரி 15.08.2010 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுச்சாமியின் அன்பு மனைவியும் ஆனந்தராஜா (கனடா), காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் ராஜகோபால் (கனடா), மனோரஞ்சிததேவி (கொழும்பு), சர்வானந்தன் (உரிமையாளர், சிறிகுமரன் ஹாட்வெயர் இல.83, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), யோகானந்தன் (கனடா), மல்லிகாதேவி (கொழும்பு), ஞானசேகரம் (ஜேர்மனி), மகேந்திரன் (கனடா), சுரேஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திராதேவி (கனடா), கமலாம்பிகை (கோண்டாவில்), வதனி (கனடா), சண்முகராஜா (கொழும்பு), கோடீஸ்வரி (சுதுமலை), அஸ்டலக்சுமி (கனடா), பரமநாதன் (கொழும்பு), குணமணி (ஜேர்மனி), சுதாசினி (கனடா), நளாயினி (கனடா) ஆகியோரின் மாமியாரும் சதீசானந், சசிகலா, ஆனந்தவதனி, பிறேமானந், கௌரி, கலைவாணி, கலைச்செல்வன், றஜீவ், சுஜீவ், சாஜிசுயானி, தனேஸ்குமார், றமேஸ்குமார், பிரதீஸ்குமார், நந்தீஸ்குமார், விஜீஸ்குமார், உஷாந்தினி, செந்தில்குமரன், ஜெனனி, இளங்குமரன், கண்ணன், ஜெயா, குமரன், சரணா, சைலயா, அர்ச்சனா, கபர்த்தினி, சாஜிதேவ், துஸ்யந்தன், சந்தனா, மயூரன், சாய்ராம், மிதுனா, நதீஷன், வைஸ்ணவி, ஐஸ்வர்யா, ஐஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.10) வியாழக்கிழமை அன்னாரின் மஞ்சத்தடி, இணுவில் இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பொ.சர்வானந்தன்
(சிறிகுமரன் ஹாட்வெயர்
இல.83, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கி மானிப்பாய் கிளையின் வட்டு கிழக்கு சிறு சேமிப்புக் குழுக்கள் இணைந்து நடத்திய 'வட்டு வசந்தம்' நிகழ்வுக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதல் படத்திலும், 18+ கணக்கு வைத்திருந்த ஆர்.சுதர்சினிக்கு தங்க நாணயம் திருமணப் பரிசை இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன் வழங்குவதை இரண்டாவது படத்திலும், சிறுவர் சேமிப்பு பணத்திற்கான பரிசினை இலங்கைவங்கி வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: நவாலிச்செய்தியாளர்)

# சுற்றுலாப் பயணிகளாலும், யாழ்.மக்கள் தென்பகுதிக்கு சென்று வருவதாலும் டெங்கு தீவிரமடையும் வாய்ப்பு

## எச்சரிக்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ்ப்பாணத்துக்குத் தற்போது அதிகமாக வரும் சுற்றுலாப் பயணிகளா லும், விடுமுறையைக் கழிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கை நோக்கி அதிகளவில் பயணமாகும் மக்களாலும் டெங்கு நோயின் பரவல் தீவிரமடைய வாய்ப்புள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் எச்சரித்துள்ளார்.

தற்போது நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டுவரும் டெங்குத் தடுப்பு வாரம் குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் டெங்குநோயின் பரம்பல் அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது பல ஆலயங்களில் உற்சவங்கள் நடைபெறுவதாலும் பாடசாலை விடுமுறைக் காலம் என்பதாலும் தென்பகுதியில் இருந்து அதிகளவான மக்கள் யாழ்.மாவட்டத்திற்கு வருகை தருகின்றனர்.

இதேபோன்று யாழ்.மாவட்டத்தில் இருந்தும் பெருமளவான மக்கள் தென் பகுதிக்குச் சென்று வருகின்றனர். இதனால் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் தீவிரமடைய வாய்ப்புள்ளது.

எனவே சகல மக்களும் ஒன்றிணைந்து பின்வரும் டெங்கு தடுப்பு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

*சகல அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், சந்தைகள், வணக்கஸ்தலங்கள், பொது இடங்கள் அனைத்தும் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்தல்வேண்டும்.

*சகல வீடுகளும் உரிமையாளர்கள், குடியிருப்பாளர்களால் துப்புரவு செய்யப்படவேண்டும்.

*தனியார் கல்வி நிலையங்களை உரிமையாளர்கள் துப்புரவு செய்ய ஏற்பாடு செய்தல் வேண்டும்.

*பராமரிப்பற்ற காணிகள், வீடுகள் உரிமையாளர்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

*கழிவுநீர் கால்வாய்களை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் துப்புரவு செய்தல் வேண்டும்.

*டெங்கு வாரம் பற்றிய விழிப்புணர்வை சுகாதார வைத்திய அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

*ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் பிரதேச செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உள்ளூராட்சி மன்றத்தின் பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு பிரதேசத்தை சுற்றிப் பார்வையிடுதல்.

டெங்கு தடுப்பு செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்காத நிறுவனத் தலைவர்கள் அல்லது வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்- என்றுள்ளது.

(த-6-26)

## ரம்ழான் சிந்தனை

இந்த மாதத்தில்தான் மகத்தான ஒரு இரவு பொழிந்து கிடக்கின்றது. அந்த ஒரே இரவில் ஆயிரக் கணக்கான மாதங்களுக்கான அருள் வளங்களின் புதையல்கள் ஈட்டப்படுகின்றன. - காதர்

# தரம் 5 மாணவர்களுக்கான சுட்டெண் வழங்கல்

துணுக்காய், ஓக. 18

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளின் ஊடாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்து தற்போது யாழ்ப்பாணத்தில் வசிக்கும் துணுக்காய் வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு சுட்டெண் வழங்குதல் இன்று புதன்கிழமை முதல் வெள்ளிவரை காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் வழங்கப்படும் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

(த-6)

# வீதிகளுக்கு 'காப்பெற்' கலவை; மதிப்பீடு 'கெயார்' நிறுவனத்திடம்

யாழ்ப்பாணம், ஓக. 18

வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் யாழ்ப்பாணத்திலுள்ள 3 நகர சபைகளின் வீதிகளுக்கும் காப்பெற் கலவையிடும் மதிப்பீட்டை கெயர் நிறுவனத்திடம் கையளித்துள்ளது.

சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய நகரசபைகளின் வீதிகளுக்கே இவ்வாறு 'காப்பெற்' கலவையிடுவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வீதி வலையமைப்பை நவீன மயப்படுத்தும் நோக்கிலான எதிர்காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தனது பராமரிப்பிலுள்ள நகரசபை வீதிகளின் தரத்தை உயர்த்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவே இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(த-121)

# கைதடியில் சட்டவிரோத மணல் அகழ்வு; கடல்நீர் கிராமத்துக்குள் வரும் ஆபத்து

கைதடி,ஓக.18

கைதடி சைவ சிறுவர் இல்லத்திற்குப் பின்பக்கமாகவுள்ள மக்கள் குடியிருப்புக்களை அண்டிய கடல் நீரேரிப் பிரதேசத்தில் இருந்து பெருமளவு மண் அகழப்பட்டு அண்மைக் காலமாக கனரக வாகனங்களில் கொண்டு செல்லப்படுவதனால் மழை காலங்களில் இந்தப் பிரதேசம் நீரில் மூழ்கும் அபாயம் எற்பட்டிருப்பதாக அப்பகுதி மக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்தப் பிரதேசத்தில் அப்பகுதி வாகன உரிமையாளர்கள், ஒப்பந்தகாரர்கள் எனப் பலராலும் இதுவரை காலமும் மணல் அகழப்பட்டு வந்ததாகவும் தற்போது வெளியிடத்தைச் சேர்ந்தவர்களும் இந்த மண் அகழ்வில் ஈடுபடுவதாகவும் இதனைத் தட்டிக் கேட்டால் தாம் அச்சுறுத்தப்படுவதாகவும் அப்பிரதேச வாசிகளால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உடனடியாகக் கவனமெடுத்து இச் சட்டவிரோத மண் அகழ்வைத் தடுத்து நிறுத்த வேண்டும் என அப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ஜ-க-288)

# இலங்கை வங்கிக் கிளைகளில் முகாமைத்துவ பயிலுநராக 50 பேர்

யாழ்ப்பாணம், ஓக. 18

வடக்கு-கிழக்கில் இலங்கை வங்கிக் கிளைகளில் முகாமைத்துவப் பயிலுநர்களாகப் பணியாற்றுவதற்கு 50 பேர் தெரிவு செய்யப்பட்டு கடந்த 16ஆம் திகதி முதல் வங்கிகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் 25பேரும் கிழக்கு மாகாணத்தில் 25 பேருமாக மொத்தம் 50 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை வங்கி சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிலும்-கிழக்கிலும் முகாமைத்துவப் பயிலுநர்களாகச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டபோது 6,000 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. அதில் பரீட்சை வைக்கப்பட்டு 300 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதில் 50 பேர் சகல வழி பரீட்சைகளிலும் தேறியவர்கள் வடக்கு-கிழக்கு இலங்கை வங்கிகளில் பயிலுநர்களாக அருகில் உள்ள வங்கிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயிலுநர் காலத்தில் திருப்திகரமான சேவையை மேற்கொண்டவுடன் நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கப்படுவர் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

(த-302)




# ஆனைக்கோட்டையில் திங்கள் முதல் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி



நவாலி,ஓக.18

டெங்கு வாரத்தையொட்டி ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் பல சிரமதானப் பணிகள் நேற்று முன்தினம் 16 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராம சேவையாளர் நிசாந்தன் தலைமையில் 8குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் ஆனைக்கோட்டை மீனவர் கூட்டுறவுச் சங்கம், ஆனைக்கோட்டை முதியோர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், இளைஞர் கழகம், மாதர் சங்கம் என்பனவும் இராணுவத்தினரும் இணைந்து கொண்டனர்.

வீடு வீடாகச் செல்லும் இவர்கள் அங்கு துப்புரவுப் பணிகளை மேற்கொண்ட பின் படிவம் ஒன்றையும் வழங்கி வருகின்றனர்.

இச்சிரமதானப் பணியில் முதலாவது வீடொன்றில் கிராம சேவையாளர் நிசாந்தன், பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். அருந்தவரர்சா, முதியோர் சங்கத் தலைவர் சீ.பொன்கலன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

(த-100)

# சேர்.பொன் இராமநாதன் நினைவு நிகழ்வில் எஸ்.பி.திஸநாயக்க கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகர் சேர் பொன்.இராமநாதன் நினைவு தினநிகழ்வில் பிரதம அதிதியாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் நினைவுதின நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.45 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவும் சிறப்பு விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(த-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## S.V. முருகேசு

(பிரபல தொழில் அதிபர், **S.V.M.** கூட்டு நிறுவனங்கள்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டி இல.17/1, பொன்சேகா மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பழம்பெரும் தொழிலதிபர் ச.வி.முருகேசு 16.08.2010 திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2010) வியாழக்கிழமை காலை 9 மணிதொடக்கம் 10.00 மணிவரை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இன்று (18.08.2010) புதன்கிழமை இல.48, ஆஸ்பத்திரி வீதியில் (கொட்டடி) காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்பவர்களுக்கு கொழும்பு செல்ல பேருந்து (பஸ்) வசதிகள் இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்பவர்கள் இன்று (18.08.2010) புதன்கிழமை மாலை 7 மணிக்கு இல.154, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள எமது கடைக்கு முன்பாக வந்து ஒன்று கூடும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**உரிமையாளரும் ஊழியர்களும்.**

**ச.வி.முருகேசு**
*154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன பங்காளரான
**முருகேசு குணரத்தினம்** அவர்களின்
அன்புத் தந்தை

## அமரர் S.V. முருகேசு

(பிரபல தொழில் அதிபர், **S.V.M.** கூட்டு நிறுவனங்கள்)

அமரர் **S.V.** முருகேசு அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர், உற்றார்கள், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

பங்காளர்களும் - பணியாளர்களும்

*Office:*
*Maha Shipping (PVT) LTD,*
*No: 5A, Pentreve Garden,*
*Colombo - 03, SriLanka.*


*Head Office:*
*Maha Shipping (PVT) LTD,*
*232, Wolfendhal Street,*
*Colombo-13, SriLanka.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) உடல் வளர்ச்சிக்கு உதவும் ஊட்டச்சத்து எது?
1. புரதம். 2. கொழுப்பு.
3. இலிப்பிட்டு. 4. விற்றமின்.

10) கொழும்பு அமைந்துள்ள மாகாணம் எது?
1. தென்மாகாணம். 2. மேல் மாகாணம்.
3. வடமாகாணம். 4. கிழக்கு மாகாணம்.

11) படத்தில் 3 பற்றரிகள் கொண்டு ஒரு மின்குமிழை எரியச் செய்வதற்குரிய 4 முறைகள் காட்டப்பட்டுள்ளன. இதில் சரியான முறையில் காட்டப்பட்ட உருவத்தைத் தெரிவுசெய்க.





12) இவ் ஓவியம் குறிப்பது,



1. சிகிரியா.
2. அஜந்தா.
3. சந்திரவட்டக்கல்.
4. வட்டதாகே.

13) சிகிரியா ஓவியங்களிலுள்ள மாதர்கள் கையிலுள்ள பூ எது?
1. செவ்வரத்தம்பூ. 2. குறிஞ்சிப்பூ.
3. நீலோற்பலம். 4. தாமரை.

14) வண்டிற்சில்லுகளில் துளையிடுவதற்குப் பொருத்த மான இடத்தைச் சரியாகக் காட்டுவது,




1. A 2. B
3. C 4. D

15) இந்து மதகுருவை அழைப்பது,
1. மௌலவி. 2. அதிவணக்கத்துக்குரிய.
3. சங்கைக்குரிய. 4. பிரம்மஸ்ரீ.

16) அருகில் தரப்பட்ட வீதிக்குறியீடு உணர்த்துவது,



1. வாகனம் செல்லலாம்.
2. வாகனம் செல்லத்தடை.
3. முன்னால் வாகனம்.
4. முன்நோக்கி செல்க.

17) ''புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே'' எனும் பாடல்,
1. அரிவு வெட்டுப் பாடல். 2. தாலாட்டுப் பாடல்.
3. மீனவர் பாடல். 4. கும்மிப்பாட்டு.

18) இவற்றிடையே விரைவாக ஆவியாகக்கூடிய திரவம் எது?
1. நீர். 2. பெற்றோல்.
3. மண்ணெண்ணெய். 4. தேங்காயெண்ணெய்.

19) ஒருமுறை பலன் கொடுத்த பின்பு அழிந்துபோகும் தாவரம் எது?
1. பலா. 2. தென்னை.
3. வாழை. 4. கொய்யா.


20. பச்சை நிறத்தைப் பெறக் கலக்கப்படவேண்டிய நிறங்கள் எவை?
1. சிவப்பு, மஞ்சள். 2. நீலம், மஞ்சள்.
3. சிவப்பு, வெள்ளை. 4. நீலம், சிவப்பு.

14. பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதுக.
1) பக்ஸ் என்பதன் தமிழ்ப்பெயர் யாது? ..............................
2) ரோச்லைற் என்பதன் தமிழ்ப்பதம் யாது? ..............................
3) இ.போ.ச என்பதன் விரிவாக்கம் என்ன? ..............................
4) பாதசாரிகள் பாதையில் எப்பக்கமாக நடந்து செல்ல வேண்டும்?
..............................
5) இலங்கைப் படத்தில் புகையிரதப் பாதை குறிக்கப்படும் நிறம் எது?
..............................

15. சரியாயின் ''சரி'' எனவும், பிழையாயின் ''பிழை'' எனவும் அடைப்புக்குள் எழுதுக.
1) சவர அலகு காந்தத்தால் கவரப்படும். ( )
2) கிளிசிறியா தடி வேலி அமைக்கப் பொருத்தமற்றது. ( )
3) டெங்கு நுளம்புகள் அசுத்தமான நீரில் முட்டையிட்டு பெருகுகின்றன. ( )
4) வீதிகளில் விளையாடுவதால் வீதி விபத்துக்கள் ஏற்படும். ( )
5) நாம் எவரையும் குறைகூறக்கூடாது. ( )

16. பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை எழுதுக.
1)

_ _ _ _ _


2)

_ _ _ _ _


17. தரப்பட்டுள்ள பூக்களின் பெயர்களை எழுதுக.
1)

_ _ _ _ _

2)

_ _ _ _ _

18. பின்வரும் மேசன் தொழிலாளியின் உபகரணங்களின் பெயரையும் பயன்பாட்டையும் எழுதுக.
1)

_ _ _ _ _
..............................

2)

_ _ _ _ _
..............................

19. பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைக் கணித்து எழுதுக.
1) ஒரு காணியின் 1/3 பங்கின் விலை ரூபா 12,000 ஆகும். எனின், அக்காணியின் 1/4 பங்கின் விலை எவ்வளவு?

(......................ரூபா ............சதம்)

2) 1kg மிளகாயின் விலை ரூபா 220 ஆகும். 400g மிளகாயின் விலை யாது?

(......................ரூபா ............சதம்)

3) பேருந்து நிலையத்திலிருந்து இரண்டாவது பேருந்து காலை 7.25 இற்குப் புறப்பட்டது. முதலாவது பேருந்தானது இதற்கு 35 நிமிடங்களுக்கு முன்னர் புறப்பட்டது. எனின், முதலாவது பேருந்து புறப்பட்ட நேரம் யாது?

(..............................................)


4) வானொலிப் பெட்டி ஒன்றின் விலை ரூபா 3,200.00 ஆகும். தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றின் விலை வானொலிப்பெட்டி ஒன்றின் விலையின் 4 மடங்காகும். தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றையும், வானொலிப்பெட்டி ஒன்றையும் விலைக்கு வாங்குவதற்கான மொத்தப் பணத்தொகை யாது?

(......................ரூபா ............சதம்)

5) 600*ml* பாத்திரம் ஒன்றினால் 8 தடவைகளில் பாத்திரம் ஒன்றை நிரப்பக்கூடிய நீரின் கனவளவு யாது?


(....................*l* ....................*ml*)

6) தரப்பட்ட உருவில் நிழற்றப்படாத பகுதியைத் தசம எண்ணில் எழுதுக.



(..............................................)

7) சென்ரிமீற்றர் நாடாக்கள் இரண்டு இங்கே காட்டப் பட்டுள்ளன. இரண்டிலும் 3cm நீளமான துண்டுகள் வெட்டி எடுத்த பின்பு இரண்டையும் ஒரே நீளமாகப் பொருத்தினால் அதன் மொத்த நீளம் யாது?




(..............................................)

8) கூட்டுக. $\frac{3}{8} + \frac{1}{2}$ = (.....................)


9) கூடை ஒன்றில் 36 மாம்பழங்கள் வீதம் 5 கூடைகளில் மாம்பழங்கள் இருந்தன. இவற்றை வகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்களிடையே சம எண்ணிக்கையாகப் பகிர்ந்தபோது ஒரு மாணவனுக்கு 6 மாம்பழங்கள் கிடைத்தன. எனின், அவ் வகுப்பல் இருந்த மாணவர்கள் எண்ணிக்கையைக் காணுங்கள்.

(..............................................)

10) மாட்டுப்பண்ணை ஒன்றிற்கு நாள் ஒன்றுக்கு 7,500*l* நீர் தேவை. 1,500*ml* நீர் கொண்டுவரத்தக்க லொறி ஒன்று அங்கு இருந்தது எனின், ஒவ்வொரு நாளும் அந்த லொறி எத்தனை தடவைகள் நீர் கொண்டுவரச் செல்லவேண்டும்?


(....................*l* ....................*ml*)

11) இவ்வுருவில் செங்கோணத்திலும் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை யாது?



(.........................)

12) A, B ஆகிய இரண்டு பென்சில்களின் மொத்த நீளம் யாது?




(.............................)


13) ஒரு போத்தலில் நிரப்பப்படத்தக்க இனிப்புப் பானத்தின் கனவளவு 175*ml* ஆகும். அத்தகைய 8 போத்தல்களில் நிரப்பப்படத்தக்க இனிப்புப் பானத்தின் கனவளவை ***l*, *ml*** ஆகியவற்றில் தருக.

(....................*l* ....................*ml*)

14) சதுரம் ஒன்றின் ஒருபக்க நீளம் 6 cm ஆயின் அவ்வாறான மூன்று சதுரங்களை ஒன்றை ஒன்று தொடக்கூடியவாறு ஒரே வரிசையில் வைத்து ஒரு செவ்வகம் அமைக்கப்பட்டுள்ளது. இச் செவ்வகத்தின் சுற்றளவைக் காண்க.

(..............................................)

15) அருகே தரப்பட்டுள்ள படம் சில சதுரங்களைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளது. நிழற்றிய பகுதி முழுப் பகுதியின் என்ன பின்னம்?



(..............................................)

20. குமரன் ஒருநாள் மிருகக்காட்சிச்சாலைக்குப் பெற்றோருடன் சென்றான். இதனைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் படச்சட்டங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு ஆறு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களேனும் இடம் பெறவேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருக்கவேண்டும்.)




1) ..............................................................
2) ..............................................................
3) ..............................................................
4) ..............................................................
5) ..............................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வளவாளர்கள் திரு.எம்.சந்திரகுமார், திரு.பி.பரமதயாளன் வழங்கிய 17.08.2010 இல் வெளிவந்த தொடர் 08 வினாத்தாள்களுக்கான விடை விளக்கக்குறிப்புக்கள்.



விடை விளக்கக்குறிப்புக்கள் வினாத்தாள்-I


01. விடை - 2 வாருகோல். 1 ஆம், 3 ஆம் விடைகள் பொருத்தமற்றவை.
02. விடை - 3 மாம்பழம் ( காய் புளிப்பாக இருக்கும்) 1 ஆம், 2 ஆம் விடைகள் பொருத்தமற்றவை.
03. விடை - 1 இடைவெளியைப் பூரணப்படுத்த வேண்டும்.
04. விடை - 1 சாய்வுக்கோடுகளை ஒழுங்குபடுத்தும்போது சரியான விடை பெறப்படும்.




05. விடை - 2 ஆழம் அதிகரிக்க அமுக்கம் அதிகரிக்கும். எனவே, அடித்துவாரத்தினூடாக நீர் வேகமாக வெளியேறும். எனவே, துவாரங்கள் அமைந்திருக்கும் ஆழத்திற்கு ஏற்ப விடை பெறப்படும்.
06. விடை - 3
    A:G - வானில் பயணம் செய்பவை
    B:H - மனிதன் அணிந்துகொள்வது
    C:H - ஒன்றுக்கொன்று பொருத்தமான தளபாடம்
07. விடை - 3 - 1ஆம், 2ஆம் விடைகள் பொருத்தமற்றவை.
08. விடை - 2 - 1ஆம், 3ஆம் விடைகள் பொருத்தமற்றவை.
09. விடை - 1 இதனை ஓர் அட்டையில் எழுதி வலஞ்சுழியாக சுழற்றிப் பார்க்கும்போது சரியான விடையை இனங்காண முடியும்.





10. விடை - 3 ஹம்சாவின் வயது = 23
    அஜித்தாவின் வயது = 23+1 = 24
    கிசாணியின் வயது = 24+3 = 27
11. விடை - 2 சிவப்பு = 16+1=17 $50 \div 3 = 16$----- மீதி-2
    மஞ்சள் =16+1=17
    நீலம் =16=16
    * மீதியாக வந்த 2 உம் முறையே சிவப்பு, மஞ்சள் நிறக்கொடிகளாகும்.
12. விடை - 3 $40 \div 4 = 10$ -------- 10+1=11
    * ஒவ்வொரு மூலைக்கம்பங்களும் இரு தடவைகள் எண்ணப்படுகின்றது.




13. விடை - 1





* மூன்று பஸ்தரிப்பு நிலையங்களுக்கிடையே இரு இடைவெளிகளே உண்டு.
14. விடை - 1 ஒத்த எழுத்துகளுக்கு ஒத்த இலக்கங்கள் இடப்படும்.
    பரல் - 346, புல்லு - 368, சில்லு - 568
15. விடை - 2 - 1 ஆம்,3 ஆம் விடைகள் பொருத்தமற்றவை.
16. விடை - 3 - 1 ஆம், 2 ஆம் விடைகள் பொருத்தமற்றவை.
17. விடை - 1
18. விடை - 3
19. விடை - 2
    இரு சில்லுகளுக்கிடையே இரு இடைவெளிகள் உண்டு. இதற்கமைய விடைகள் பெறப்படும்.





20. விடை - 3 1+2+3=6
21. விடை - 2 1 அப்=1 மா=40/- எனில், 2 அப் + 2 மா= 80/- ஆக அமையும்.
22. விடை - 3 1அப்= 30/-, 1 மா= 10/- ஆக அமையும்போது 1 ஆம், 3 ஆம் விடைகள் பொருத்தமற்றவை.
23. விடை - 3 நியம முறையில் எழுதும்போது மு.ப, பி.ப எழுதக்கூடாது. நான்கிலக்கங்களில் எழுதப்பட வேண்டும்.
24. விடை - 3 ஒன்றைவிட்டு அடுத்து வரும் கட்டங்களில் வரும் அடையாளங் கள் எதிர்ப்பக்கங்களில் அமையும். எனவே, 1 ஆம், 2 ஆம் விடைகள் பொருத்தமற்றவை.
25. விடை - 1 அம்புக்குறிகள் சுழலும் திசைக்கு ஏற்ப இடைவெளிகளைப் பொருத்தமாகப் பூரணப்படுத்தி விடையை இனம் காணலாம்.
26. விடை - 1 அடங்கல் எண்ணக்கருவைக் கொண்டு விடையினைத் தீர்மானிக்க வேண்டும்.
27. விடை - 2




இவ்வாறு அமைவிடங்களைப் படம்மூலம் இனங்காணலாம்.
28. விடை - 2




தரவினை வாசித்து இவ்வாறானவொரு கிளை வரைபினைத்தயாரித்துக் கொண்டால் இலகுவாக விடையைக்காணலாம்.
29. விடை - 2 1ஆம், 3ஆம் விடைகள் பொருத்தமற்றவை.
30. விடை - 3 தோன்றா எழுவாய்
31. விடை - 2 மூலைவிட்டங்களை இணைப்பதனூடாக விடையினைக் காணலாம்.
32. 24 அடுக்குகளைப் பொருத்தமாக எண்ண வேண்டும்.
33. ரூபா 400.00
34. 53 $300 \div 2 = 150$ ------- $150 \div 3$ ------- 50+3=53
35. $1cm^2$ * முழு உருவின் அரைவாசியே நிறந்தீட்டப்பட்டுள்ளது.
36. ரூபா 10.00 * 60.00-10.00=50.00 $50 \div 5 = 10/-$
37. பறவைகள்-35, மிருகங்கள்-15 தலைகள்=35+15=50, கால்கள் =35×2=70 15×4=60 மொத்தம் =130
38. 20 km மிகக் குறைந்த எண் பெறுமானத்தை இனங்காணல்.
39. வடமேற்கு




40. 45 நிமிடங்கள் மணிக்கு=60 km 60 நிமிடங்களிற்கு=60km
    45 km இற்கு=45 நிமிடங்கள்


### வினாத்தாள்-II

01. 1) காகமே/காகத்தாரே. 2) உறவு. 3) குஞ்சு. 4) 1. மனம். 2. கண்.
    5) செவிலி/வேறொரு பெண் தாயாக இருந்து, பிள்ளையைப் பராமரித்தல்.
    6) விருந்தில் கலந்துகொள்ள ஏனைய காகங்களை அழைக்க.
2. 1) பிற்போடுதல்/தாமதித்தல். 2) தவறை மறைத்தல்/குற்றத்தை மறைக்கப் பார்த்தல்.
3. 1) ஆனைக்கும் அடிசறுக்கும். 2) அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.
4. 1) காட்டு மலர்கள் ஆற்றின் இரு பக்கங்களையும் எழில் செய்தன.
5. 1) பறவைகள் கூட்டம் கூட்டமாக வானத்தில் பறந்தன.
   பறவை கூட்டம் கூட்டமாக வானத்தில் பறந்தது.
6. 1) அகழி 2) தலைமுறை. 3) நூதனசாலை.
7. 1) கை, வை, போ - இவை தனித்தனியே பொருள்தருகின்றன.
   2) மன்னா! என்ன கூறுகின்றீர்கள்?
8. 1) இரவும் பகலும்/இராப்பகலாக. 2) உடல் மெலிந்து போதல்.
9. 1) நான் உள்ளே வரலாமா? 2) மகிழ்ச்சியான புத்தாண்டு வாழ்த்துக்கள்.
   3) அது நல்ல வேலை.
10. 1) உங்களுக்குப் பசிக்கிறதா? 2) மலசலகூடம் எங்கேயுள்ளது. 11. தாத்தா ஆவாத?

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12-1 | 13-3 | 14-3 | 15-4 | 16-3 | 17-4 | 18-1 | 19-4 | 20-1 | 21-4 | 22-2 |
| 23-4 | 24-4 | 25-1 | 26-1 | 27-4 | 28-1 | 29-1 | 30-1 | 31-4 | 32-1 | 33-1 |
| 34-2 | 35-1 | 36-1 | 37-3 | 38-3 | 39-2 | 40-2 | 41-2 | 42. 1) வண.எஸ்.மஹிந்த. | | |

2) மொனராவில கப்பெட்டிப்பொல திசாவை. 3) கொங்காலேகொட பண்டா.
4) சேர்.டீ.பி.ஜயதிலக.
43. 1) மூவாயிரத்து நூற்று நான்கு. 2) 3104+299= 3403
44. 22 46. 5 47. 1) 149 கி.மீ. 2) 209 கி.மீ. 3) 225 கி.மீ.
48. 1) 12-6= 6 2) 12-10=2 3) நிழற்றுக. 4) 8+6+12+10+12=48.
49. (8+10)×2=18×2=36 கி.மீ.+15=51 கி.மீ. 50. மி.ப 1.05 51. ரூ. 284.50 52. 303
53. ரூ. 875 54. 4 55. 3810 லீற்றர்.
56. 1) குளம், குட்டைகள் நீரால் நிரம்பி வழியும்.
    2) யோக்கற் கப், இளநீர் கோம்பைகளில் நீர் தேங்கி அதில் டெங்கு நுளம்புகள் பெருகுவதால் டெங்கு நோய்பரவும்.
    3) தாழ் நிலங்களில் நீர் தேங்குவதால் வெள்ளப்பெருக்கு ஏற்படும்.
    4) வெள்ளப்பெருக்கு காரணமாக வீடுகள், கால்நடைகள் அழியும்.
    5) சில இடங்களில் மண்சரிவு ஏற்படுவதால் அழிவு ஏற்படும்.
    6) அசுத்தமான நீர் குடிநீருடன் கலப்பதால், நீர் மாசடையும்.
    7) மாசடைந்த நீரைப் பருகுவதால் சிலருக்கு வாந்திபேதி போன்ற நோய் ஏற்படும்.

45.



கருத்தாளர்க்கு குறிப்பு:
சேற்றைய வினாத்தாள்களுக்கு மாணவர்கள் அளித்த விடைகளை இவ்வாறு தினம் வெளிவந்துள்ள விடை விளக்கக்குறிப்புக்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து விளக்கமின்மை, தெளிவின்மைகள் ஏற்படின் 065 2226698, 0714498486 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக திரு.எம்.சந்திரகுமார், திரு.பி.பரமதயாளன் ஆகியோருடன் இன்றைய தினம் இரவு 7.00மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். (பிரபல ஆசிரியர்கள் இதுச்சிய அரிய தேர்ச்சை பயன்படுத்திக் தவறாதீர்கள்)


# மரண அறிவித்தல்கள்

## செல்வி பத்மராணி தம்பிப்பிள்ளை

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, ஸ்ரேஷன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்வி பத்மராணி தம்பிப்பிள்ளை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பிப்பிள்ளை- விசாலாட்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களரன சின்னத்துரை தங்கரத்தினம், சொர்ணலிங்கம் (முன்னாள் நீதிமன்றப் பதிவாளர், யாழ்ப்பாணம்) மற்றும் சொர்ணரத்தினம் வேலாயுதபிள்ளை (கனடா), புஷ்பரத்தினம் சண்முகரத்தினம் (முன்னாள் ஆசிரியை, சந்திரோதய வித்தியாலயம், உரும்பிராய், ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான யோகரத்தினம், வேலாயுதம் (ஜேர்மனி) மற்றும் சாரதாதேவி புஸ்பராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (18.08.2010) புதன் கிழமை காலை 9 மணிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 4 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி: 0777353183 (சி/569840) தகவல்: சுகுணா அரியராசா.

## இராசையா கனகலிங்கம்



சங்கரத்தையைப்பிறப்பிடமாகவும் தாவளை, வட்டு.கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகலிங்கம் 16.08.2010 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற எஸ்.எஸ். பொன்னையா மற்றும் கண்ணகையம்மா தம்பதியரின் மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் சிவகுமார், சுமதி, நிரஞ்சனி, உமாகணேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாத்மா, சிவானந்தா, செந்தில்குமார், டிலானி ஆகியோரின் அன்பு மாமனும் ரகுராம், ஜனின், கெவின், மயூரி, மயூரதன், ஐஸ்வர்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2010) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவளை, வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை.
0213211126 (102067) தகவல்: மனைவி.

## காணி விற்பனைக்கு

3 ஏக்கர் 4 பரப்பளவுள்ள வெறுங்காணி விற்பனைக்குண்டு. இல. 51, கனகாம்பிகை குளம், கிளிநொச்சி. தொ.பே.: 0773481987

## கடை வாடகைக்கு

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0775371631


## மது போதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு நீதிமன்றம் அபராதம்

தென்மராட்சி, ஓக. 18

ஆவணங்கள் எதுவுமின்றி மதுபோதையில் மோட்டார்சைக்கிள் செலுத்திய இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான் என். எம்.எம். அப்துல்லா இருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் அபராதத் தொகை செலுத்தத் தவறின் முறையே 6 மாதம், 3 மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வாகனவரி ஆகியவை இல்லாமல் வாகனம் செலுத்தியதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பிரமணியம் மகேந்திரன் (சாமியார்)
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

தாயின் மடியில்: 18.05.1940
இறைவன் திருவடியில்: 06.08.2003

அன்பின் திருவுருவே பாசத்தின் இருப்பிடமே!
எங்கள் அனைவரையும் விட்டுத் தூரதேசம் சென்றீரோ?
துணையின்றித் தவிக்கின்றோம் ஏழு ஆண்டுகள் சென்றாலென்ன
ஏழேழு ஜென்மத்திலும் உங்கள் உறவும்
உங்கள் நினைவும் எம்மோடு தொடர்ந்துகொண்டே இருக்கும்.

கனகபுரம், கிளிநொச்சி. குடும்பத்தினர்.



# திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்

# அற்றைத் திங்கள்
(கூத்துருவ நாடகம்)

காலம்: 21, 22.08.2010 (சனி, ஞாயிறு)
நேரம்: மாலை 6.45 மணி
இடம்: திருமறைக்கலாமன்ற அரங்கு

முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் பாரி மன்னனின் வீர வரலாற்றினை, ஈழத்தின் பல்வேறு கூத்துமரபுகளின் ஒன்றிணைப்பினூடாக வெளிப்படுத்தும் அரங்கப் படைப்பு

ஆசனப் பதிவுகளை மன்ற அலுவலகத்தில் செய்து கொள்ளலாம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். திருமறைக் கலாமன்றம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் குண்டுத் தாக்குதல்: 51 பேர் பலி; 100 பேர் காயம்!

பக்தாத், ஓக. 18

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தி லுள்ள இராணுவத்துக்கு ஆள் திரட்டும் நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 51 பேர் கொல்லப் பட்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காய மடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித் தார்கள்.

இராணுவத்துக்கு ஆள் திரட்டும் நிலை யத்துக்கு எதிரில் நூற்றுக்கணக்கானோர் வரிசைக் கிரமப்படி நின்று, திங்கள்கிழமை காலை காத்துக்கொண்டிருந்தனர். அச்சம யம் இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட் டது என அங்கிருந்தவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்த நிலையம் மக்கள் நடமாட்ட மிகுந்த நகரின் பிரதான பஸ் நிலையங் களுக்கு அருகில் அமைந்துள்ளது என பக்தாத்திலுள்ள பி.பி.ஸி. நிருபர் ஹக் ஸைகிஸ் தெரிவித்தார்.

காலை நேரத்தில் வீதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது. அச் சமயத்தில் தற்கொலைக் குண்டுதாரி சுல பமாக இராணுவ ஆட்சேர்ப்பு நிலையத் துக்கு வந்துள்ளார் என்றும் அவர் குறிப் பிட்டார்.

குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதை அடுத்து, அப்பகுதி படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது. நிலைய வீதியில் மனித அவயவங்கள் இரத்த வெள்ளத்தில் சிதறிக் கிடந்தன என்றும் இந்நிருபர் விவரித்தார்.

# சீன பட்டாசுத் தொழிற்சாலையில் விபத்து: 3 பேர் உயிரிழப்பு!

பீஜிங், ஓக. 18

வடகிழக்கு சீனாவின் ஹெய்லாங்ஜியாங் மாகாணத்தில் திங்கட்கிழமை பட்டாசு தொழிற் சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் மூன்று பேர்பலியாயினர். 22 பேர் காய மடைந்தனர்.

இசூன் நகரிலுள்ள ஒரு பட்டாசு தொழிற் சாலையில் எதிர்பாராத விதமாக வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து காரண மாக தொழிற்சாலையின் கதவுகள் ஒரு கி.மீ. தூரத்திற்கு தூக்கி வீசப்பட்டன. தீயை அணைக்க ஹெலிக்கொப்டர் உதவியுடன், தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்பட்டது.

விபத்து நடைபெற்றபோது, தொழிற் சாலையில் எத்தனை தொழிலாளர்கள் இருந் தனர் என்று தெரியவில்லை. 20 தீயணைப்பு வண்டிகளில், 550இற்கும் மேற்பட்ட வீரர் கள், தீயை அணைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

தொழிற்சாலை அருகிலுள்ள வீடுகள், கட்டடங்கள் ஆகியவற்றின் மீது முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக தண்ணீர் பீய்ச் சினர். 2 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# மேலும் ஒரு யுரேனிய ஆலை: ஈரானிய அரசாங்கம் அனுமதி

தெஹ்ரான், ஓக. 18

மேலும் ஒரு யுரேனியம் செறிவூட்டும் ஆலையை கட்ட ஈரான் தயாராகியுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் 2011ஆம் ஆண்டில் தொடங்கும். இதற்காக அரசுத் தரப்பிலிருந்து அனைத்து அனுமதியும் வழங்கப்பட்டுவிட்டது.

ஓராண்டில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து, யுரேனியம் செறிவூட்டும் ஆலைப் பணிகள் நிறைவடையும். அணு ஆயுதங்கள் தயாரிப்புக்கு யுரேனியம் முக்கிய மூலப் பொருளாகும்.

வல்லரசு நாடுகள் என்று கூறும் நாடு களுக்குச் சவால் விடும் வகையில் இந்த யுரேனியம் செறிவூட்டும் ஆலையைத் தொடங்குகிறோம் என்று ஈரான் அணுசக்தி அமைப்பின் தலைவர் அலி அக்பர் தெரி வித்துள்ளார்.

ஈரானில் ஏற்கனவே 2 யுரேனியம் செறி வூட்டும் ஆலைகள் செயல்பட்டு வருகின் றன. இப்போது மூன்றாவது ஆலையை ஈரான் அமைக்கவுள்ளது.

ஈரான் அணு ஆயுதங்கள் தயாரித்து வரு கிறது என ஏற்கெனவே அமெரிக்கா குற்றஞ் சாட்டி வருகிறது. இந்நிலையில் ஈரானின் இந்த நடவடிக்கை அனைத்து நாடுகளாலும் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது.

உலக அரங்கில்

# காதலர்களைக் கல்வீசி கொன்ற தலிபான்கள்!

குந்துஸ், ஓக. 18

ஆப்கானிஸ்தானில் காதலர்கள் இரு வரை தலிபான்கள் கல்வீசி கொன்ற சம் பவம் நிகழ்ந்துள்ளது.

காதல் செய்த குற்றத்துக்காக இருவரை யும் தலிபான்கள் கற்களால் வீசிக் கொன் றனர் என குந்துஸ் மாகாணத்தில் உள்ள இமாம் சாஹிம் மாவட்டத்தின் ஆளுநர் மொஹமத் அயோப் தெரிவித்தார்.

வடக்கு ஆப்கானிஸ்தானில் உள்ளது முல்லா கியூலி கிராமம். இக்கிராமம் தலி பான்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இக் கிராமத்தைச் சேர்ந்த 28 வயது ஆணும், 23 வயது பெண்ணும் ஒருவரை ஒருவர் காதலித்து வந்தனர்.

இவர்களில் ஆண் ஏற்கனவே திருமண மானவர். பெண்ணுக்கும் நிச்சயதார்த்தம் முடிந்து விரைவில் திருமணம் நடக்கவிருந் தது.

இந்நிலையில், இருவரும் காதலித்து வந் தனர். இது முறைகேடான காதல் என தலி பான்கள் குற்றஞ்சுமத்தினர். இவர்களை முல்லா கியூலி கிராமத்தில் வெட்டவெளி யில் நிறுத்தி வைத்து கற்களை வீசிக் கொன் றனர். காதலர்களை சுமார் 100 தலிபான் கள் சுற்றி நின்று கற்களை வீசினர். (சி)

# இந்தியப் புலிகளை பார்க்க ஒபாமா புதல்விகள் விருப்பம்

வாஷிங்டன், ஓக. 18

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எதிர் வரும் நவம்பர் மாதம் இந்தியா செல்கிறார். அப்போது அவருடன் அவரது புதல்விகள் மாலியா, சேஷா ஆகியோரும் இந்தியா செல்ல இருக்கிறார்கள்.

அவர்கள் இந்தியா செல்லும்போது, புலி களைப் பார்க்கவும், தாஜ்மகாலை பார்க் கவும் விரும்புகிறார்களாம். இந்தத் தகவலை இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் டிமோதி ரோமரின் மனைவி ஹாலி தெரிவித்தார்.

திமோதி ரோமரும் ஒபாமாவும் நெருங் கிய நண்பர்கள். திமோதியின் குழந்தை கள் இந்தியாவில் புலிகளைப் பார்த்து விட்டு அவை பற்றி ஒபாமாவின் குழந்தை களிடம் கூறியிருக்கிறார்கள். அது முதல் ஒபாமாவின் குழந்தைகளுக்கும் இந்திய புலிகளை பார்க்க வேண்டும் என்று ஆசை ஏற்பட்டுள்ளது.



ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் (மத்தியில்), மொஸ்கோ போடோல்க்கில் வீட்டுமனைகள் கட்டமைப்புப் பணிகள் நடைபெறுவதைப் பார்வையிடுகிறார்.

# அமெரிக்காவில் ஓட்டப் பந்தய கார் கூட்டத்துக்குள் புகுந்து 8 பேர் பலி!

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் இரவு நேரத்தில் கார் பந்தயம் நடந்தது. இதில் 200இற்கும் மேற்பட்ட கார்கள் கலந்துகொண்டன.

50 கி.மீ. நீளத்துக்கு பந்தயப் பாதை அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பந்தயம் தொடங்கியதுமே ஒரு கார், பந்தயத்தை பார்ப்பதற்குக் கூடியிருந்த கூட்டத்துக்குள் புகுந்தது. இதில் 8 பேர் பலியானார்கள். 17 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் லுசேர்ன்வேலி என்ற நகரத்துக்கருகில் உள்ள சோக்கி டிரை லேக் படுகை யில் நடந்தது. பலியான அனைவரும் 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவார்கள்.

காயமடைந்தவர்களில் 4 பேர் நிலை கவலைக்கிடமாக உள்ளது. அவர்கள் ஹெலிக் கொப்டர் மூலம் வைத்தியசாலைக்கு தூக்கிச் செல்லப்பட்டனர்.

கூட்டத்துக்குள் நுழைந்த காரை ஓட்டியவர் பெயர் பிரெட் ஸ்லோப்பி. இந்த விபத் தின்போது ஸ்லோப்பி குடித்து இருக்கவில்லை என்பதாலும், விபத்துக்கு தொழில்நுட்பக் கோளாறுதான் காரணம் என்பதாலும் அவர் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பினார்.

# தமது சொந்தக் கட்சியின் தொடக்க விழாவுக்கு முஷாரப் பாகிஸ்தான் வரமாட்டார்

## லண்டனிலேயே தொடர்ந்து தங்கி இருக்க முடிவு

இஸ்லாமாபாத், ஓக. 18

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷரப் சொந்தமாகக் கட்சி தொடங்க இருக்கிறார். இதன் தொடக்க விழாவுக்காக அவர் அடுத்த மாதம் (செப்டம்பர்) பாகிஸ் தான் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட் டது. ஆனால், அவர் இப்போதைக்கு பாகிஸ் தான் வரமாட்டார் என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தான் இராணுவத் தளபதியாக இருந்து ஆட்சியைக் கைப்பற்றிய முஷா ரப் நாட்டின் சர்வாதிகாரியாகவும், பின்னர் ஜனாதிபதியாகவும் இருந்தார்.

அவரது ஆட்சிக் காலத்தில் இலஞ்ச ஊழல் வழக்குகளில் தொடர்புடைய அர சியல் தலைவர்களுக்குப் பொதுமன்னிப்பு அளித்து அவர் மீதான வழக்குகளை கை விட்டார். இதற்காக அவர் அவசரச்சட்டம் கொண்டு வந்தார். இந்தச் சட்டத்துக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்குவதற்கு முன்னர் அவர் பதவி விலகிவிட்டார்.

இந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து வழக்குத் தொடரப்பட்டதால், உயர் நீதி மன்றம் இந்த அவசரச்சட்டம் செல்லாது என்று தீர்ப்பு அளித்தது.

இதற்கிடையில் சிந்து மேல் நீதிமன்றம் அவர் மீது தொடரப்பட்ட வழக்கில், அவர் ஆஜராகவேண்டும் என்று பல தடவைகள் அறிவித்தல் அனுப்பியது. எனினும், அவர் ஆஜராகாததைக் கண்டித்து அவரை பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக நீதிமன்றம் அறிவித்தது.

இந்நிலையில்தான் அவர் பாகிஸ்தான் வருவார் என்று வதந்திகள் கிளம்பின. இதற்கு ஆதாரமாக அவர் வீட்டில் புதுப்பிக் கும் வேலைகள் தீவிரமாக நடந்து வருகின் றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

'அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக்' என்ற பெயரில் புதிய கட்சியை அவர் ஆரம்பிக்கவிருக்கிறார். இதற்கான முயற்சி களை அவர் மேற்கொண்டார். இந்த கட்சியின் தொடக்க விழா அடுத்த மாதம் செப்டம்பரில் நடக்க இருக்கிறது. இந்த விழா வுக்கு அவர் வருவார் என்று எதிர்பார்க் கப்பட்டது. ஆனால் இப்போது அவர் பாகிஸ் தான் வரமாட்டார் என்று அவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் எழுந்துள்ள சில சவால்கள் காரணமாகவும், அவர் எடுத்த சில இரகசிய நடவடிக்கைகள் வெளிப்படுத்தப்படும் அபாயம் இருப்பதாலும் அவர் வராததற் கான காரணங்களாகக் கூறப்படுகின்றன.

முஷாரப்பின் சில ஆதரவாளர்கள் குறிப்பிடுகையில், ''கட்சியை வழிநடத்து வதற்காக முஷாரப் இந்த ஆண்டு இறுதி யில் பாகிஸ்தான் வருவார்'' என்று தெரி வித்தனர்.

# உணவுப்பொருள்கள் விநியோகப் பணியில் பாக். வெள்ள அனர்த்தப் பகுதியில் கழுதைகள்!

இஸ்லாமாபாத், ஓக. 18

பாகிஸ்தானில் சிந்து நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு கரைகளை உடைத்துக் கொண்டு பல்வேறு கிராமங்களிலும் புகுந்துள்ளதால், மீட்புப் பணிகள் மந்த கதியில் நடந்து வருகின்றன.

அத்தியாவசிய உணவுப்பொருள்க ளைக் கொண்டுசெல்லும் பணியில் கழுதைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பாகிஸ்தானில் கடந்த சில வாரங்களாக பெய்த பலத்த மழையால் சிந்து நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

சிந்து மற்றும் பஞ்சாப் மாகாணங்கள் இந்த வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ளன. ஏராளமான மலைக் கிரா மங்களும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட் டுள்ளன.

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நடந்த போது, மீட்புப்பணியில் இராணுவத்தினர் முழு வீச்சில் இறக்கப்பட்டனர். தற்போது ஜனநாயக ஆட்சி நடப்பதால், தலிபான் களை ஒடுக்கும் பணியில் மட்டும் இராணு வத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, மீட்புப்பணியில் தொய்வு ஏற் பட்டுள்ளது. சிந்து நதியில் உடைப்பெடுத்து ஏராளமான கிராமங்களில் வெள்ளம் புகுந் துள்ளது. இதனால், ஒரு கோடியே 70 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 20 இலட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

பாகிஸ்தான் வரலாற்றில் இதுபோன்ற வெள்ளத்தை பார்த்ததில்லை என இங் குள்ள மக்கள் கூறுகின்றனர். பல வாரங்க ளாகத் தொடர்ந்து வெள்ளம் கிராமங்களைச் சூழ்ந்துள்ளதால், போதிய சுகாதாரமில்லா மல் வாந்திபேதி போன்ற தொற்றுநோய் கள் பரவி வருகின்றன.

வெள்ளப் பகுதிகளை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார். கணிசமான நிதி உதவி தேவைப்படுகிறது என அவர் குறிப்பிட் டார்.

வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்க போதிய அளவுக்கு ஹெலிக்கொப் டர்கள் இல்லை. எனவே, மழையால் பாதிக்கப்பட்ட மலைக் கிராமங்களுக்கு கழுதைகள் மூலம் உணவுப்பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

மீட்புப்பணிகளுக்கு ஹெலிக்கொப் டர்களை அளித்து உதவும்படி, சர்வதேச நாடுகளை பிரதமர் யூசுப் ரஸா கிலானி கேட்டிருக்கிறார்.

ஸ்வாட் பள்ளத்தாக்கில் குறுகலான மலைப்பகுதிகளில் உணவுப்பொருட் களைக் கொண்டுச்செல்லும் 30 கழுதை களில் இரண்டு கழுதைகள் மலைச்சரி வில் உருண்டு விழுந்து காயமடைந்துள் ளன. இவ்வளவு மோசமான நிலை இருந்ததால், பாகிஸ்தானில் சுதந்திர நாள் அனுசரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர் சங்கங்களுடன் பேச இலங்கை மீனவர் குழு திருச்சி வருகை

திருச்சி, ஓக. 18

நடுக்கடலில் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், மீன்பிடித் தொழிலை மேம்படுத்தும் நோக்கத்திற்காகவும் இலங்கையில் இருந்து மீனவர் குழுவினர் நேற்றுமுன்தினம் திருச்சி வந்தனர். அவர்கள் தமிழக மீனவர் சங்க அமைப்புகளுடன் பேச்சு நடத்துவோம் என்று கூறினார்கள்.

இந்த குழுவில் 20 பேர் இடம் பெற்று உள்ளனர். இந்தக் குழுவினர் கொழும்பில் இருந்து விமானம் மூலம் நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் திருச்சிக்கு வந்து சேர்ந்தனர்.

விமான நிலையத்தில் அந்தக் குழுவினரை நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பின் தமிழகப் பிரதிநிதிகள் வரவேற்று அழைத்து வந்தனர்.

இந்தக் குழுவின் சார்பில் இலங்கையை சேர்ந்த சூரியகுமரன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு-

நாங்கள் இலங்கையின் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களை சேர்ந்த சமாஜ சம்மேளன மீனவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள். நான் அதன் பொதுச் செயலாளராக இருக்கிறேன். எங்கள் அமைப்பின் தலைவரான தவரத்னம் இன்று வரவில்லை. அவர் தாமதமாக வருவார்.

தமிழகத்தைச் சேர்ந்த இந்திய மீனவ சகோதரர்கள் நல்ல முறையில் மீன்பிடித் தொழிலைச் செய்வதற்காகவும், அவர்கள் கடற்பகுதியில் தாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு அவர்களது கருத்துகளை கேட்டு கலந்தாய்வு செய்வதற்காகவும் நாங்கள் இந்தியாவுக்கு வந்து இருக்கிறோம்.

நாங்கள் தமிழகத்தில் இராமேஸ்வரம், புதுக்கோட்டை ஜெகதாப்பட்டினம், மல்லிப்பட்டினம், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி ஆகிய பகுதிகளுக்கு சென்று அங்குள்ள மீனவர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள இருக்கிறோம். ஏற்கனவே 2004 ஆம் ஆண்டு தமிழக மீனவர் குழு ஒன்று இலங்கைக்கு வந்து இதுபோல் கருத்துகள் கேட்டது.

இப்போது தமிழக மீனவர் அமைப்புகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நாங்கள் தமிழகத்திற்கு வந்து இருக்கிறோம். நாங்கள் தொழில் ரீதியான பிரச்சினைகளை தீர்க்க தான் வந்திருக்கிறோமே தவிர அரசியல் பேச வரவில்லை.

எல்லை தாண்டி மீன்பிடிப்பதால் எங்கள் மக்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் மனஸ்தாபம் ஏற்படுகிறது. இதைத் தீர்ப்பதற்காக நாங்கள் அனைத்து மீனவர் அமைப்புகளுடனும் பேச்சு நடத்தி அந்த அறிக்கையை தமிழக அரசிடமும், மத்திய அரசிடமும், இலங்கை அரசிடமும் கொடுப்போம்.

இறுதியாக வரும் 20, 21 ஆகிய திகதிகளில் சென்னையில் கலந்து பேசி இறுதி முடிவை அறிவிப்போம். எல்லை தாண்டி மீன் பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும் என்று நம்புகிறோம்.

- இப்படி அவர் கூறினார்.

நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பு தமிழக பிரதிநிதி அருளானந்தம் கூறியவை வருமாறு -

இரு நாடுகளுக்கும் இடையே மீன்பிடித் தொழிலில் சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் குழு வந்துள்ளது. பாக்ஜலசந்தி பகுதியில் தான் விலை மதிப்புள்ள மீன்கள் இருப்பதால் அந்தப் பகுதியில் அடிக்கடி எல்லை தாண்டும் சம்பவங்கள் நடக்கும்போது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இது சம்பந்தமாக நாங்கள் இலங்கை மீன்பிடித் துறை அமைச்சரிடமும், தமிழக மீன்துறை அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்திருக்கிறோம். இந்தப் பிரச்சினைகள் பற்றியும் குழுவினர் பேச்சு நடத்துவார்கள்.

- இப்படி அவர் கூறினார்.

அதன் பின்னர் இலங்கை மீனவர் குழுவினர் தனி பஸ் மூலம் இராமேஸ்வரத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

## இந்தியச் செய்திகள்

# விடுவிக்கப்பட்ட மீனவர்கள் 26 பேர் இன்று இலங்கையிடம் ஒப்படைப்பு

மண்டபம், ஓக. 18

இந்தியக் கடற்பகுதியில் நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதாகி உள்ளூர் பொலிஸாரின் கண்காணிப்பிலிருந்த இலங்கை மீனவர்கள் 26 பேர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர். அவர்களை இந்தியக் கடலோரக் காவல்படையின் உதவியுடன் இன்று இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்க உள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 5 மீனவர்கள், கடந்த ஜூன் 7 ஆம் திகதி ஒரு படகிலிலும், ஜூன் 17 இல் 21 மீனவர்களும் இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து, நாகப்பட்டினம் கடற்பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்த போது பிடிபட்டனர். அவர்களை இந்தியக் கடலோர காவல் படையினர், மண்டபம் கொண்டுவந்தனர். உள்ளூர் பொலிஸாரின் கண்காணிப்பிலிருந்த இந்த மீனவர்கள், 60 நாள்களுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களை இந்தியக் கடலோரக் காவல் படையின் உதவியுடன், சர்வதேச கடல் எல்லைக்குக் கொண்டுசெல்லப் பட்டு, இலங்கைக் கடற்படையிடம் இன்று ஒப்படைக்க உள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# லாலு பிரசாத், பஸ்வான் இருவரும் பீஹார் தேர்தலுக்குக் கூட்டணி உடன்பாடு

டில்லி, ஓக. 18

பீகாரில் லாலு பிரசாத் யாதவின் ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சிக்கும், ராம்விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தி கட்சிக்கும் இடையே தொகுதி பங்கீடு உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

லோக் ஜனசக்தி கட்சிக்கும், ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சிக்கும் இடையே கூட்டணி அமைப்பதில் இழுபறி நிலவி வந்தது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் திடீர் திருப்பம் ஏற்பட்டது. ராஷ்டிரிய ஜனதா தளம் - லோக் ஜனசக்தி கட்சிகளுக்கு இடையே தொகுதி பங்கீட்டில் உடன்பாடு எட்டப்பட்டது.

இதுகுறித்து லோக் ஜனசக்தி தலைவர் ராம் விலாஸ் பஸ்வான் கூறியவை வருமாறு -

இரு கட்சிகளுக்கும் இடையே தொகுதி பங்கீடு விவகாரத்தில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. ராஷ்டிரிய ஜனதா தளம் 168 தொகுதிகளிலும், லோக் ஜனசக்தி கட்சி 75 தொகுதிகளிலும் போட்டியிடும். எங்கள் கூட்டணி வெற்றி பெற்றால், லாலு பிரசாத் யாதவ் முதல்வராக பதவியேற்பார்.

எங்கள் கட்சியின் பீஹார் மாநிலத் தலைவர் பசுபதி குமார் பராஸ் (பஸ்வானின் இளைய சகோதரர்) துணை முதல்வராக பதவியேற்பார். கண்டிப்பாக இந்தக் கூட்டணி, தேர்தலில் மகத்தான வெற்றி பெறும் - என்றார்.

லாலு பிரசாத் யாதவ் கூறுகையில், எங்கள் கட்சியின் ஆட்சி நடந்தபோது, கட்சியில் இருந்த சிலரால் கெட்ட பெயர் ஏற்பட்டது. இனிமேல், அதுபோன்ற நபர்களை கட்சிக்குள் சேர்க்க மாட்டோம் - என்று கூறினார்.

# நாடாளுமன்ற உரிமையை மீறியுள்ளார் மன்மோகன்

## பா.ஜ.க. குற்றச்சாட்டு

பிரதமர் மன்மோகன் சிங் நாடாளு மன்ற உரிமையை மீறியுள்ளார் என பா.ஜ.க. குற்றம்சாட்டியுள்ளது.

காமன்வெல்த் போட்டி ஏற்பாடு ஊழல் குறித்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பிரச்சினை எழுப்பியபோது மௌனமாக இருந்த பிரதமர், அவைக்கு வெளியே இது தொடர்பாக கருத்துத் தெரிவிப்பது நாடாளுமன்ற உரிமை மீறல் என்று பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் ராஜீவ் பிரதாப் ரூடி டில்லியில் திங்கள்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு -

கொமன்வெல்த் போட்டி ஏற்பாடுகளில் பல கோடி ரூபா ஊழல் நடைபெற்றுள்ளது. இதுகுறித்து எதிர்க்கட்சிகளும், காங்கிரஸ் எம்.பிக்களும் கூட கடந்த 15 நாள்களாக நாடாளுமன்றத்தில் பிரச்சினை எழுப்பி வருகின்றனர். அப்போதெல்லாம் பிரதமர் மன்மோகன் சிங் இது தொடர்பாக ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மௌனமாக இருந்தார்.

ஆனால் சனிக்கிழமை நடைபெற்ற கொமன்வெல்த் போட்டி ஏற்பாடுகள் தொடர்பான கூட்டத்துக்கு பிரதமர் தலைமை வகித்துள்ளார். குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான கொமன் வெல்த் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சுரேஷ் கல்மாதிக்கு உள்ள அதிகாரங்களை குறைந்துள்ளார். அத்துடன் அமைச்சரவைச் செயலர் தலைமையிலான குழுவுக்கு கொமன்வெல்த் போட்டியை நடத்துவதில் அதிக அதிகாரம் அளிக் கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து கேள்வி எழுப்பும்போது பதிலளிக்காமல், கொமன் வெல்த் போட்டி தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு அதில் கருத்துத் தெரிவித்திருப்பதும் அறிக்கை விடுவதும் நாடாளுமன்ற உரிமை மீறலாகும். நாடாளுமன்றத்துக்கு உள்ளே இந்த விடயம் குறித்து பிரதமர் ஏன் பேசவில்லை என்பதே எங்கள் கேள்வி. இதுகுறித்து மன்மோகன் சிங் கண்டிப்பாக விளக்கமளிக்க வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.




கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் மையநோக்கப் பாடலுக்கு ஒஸ்கார் நாயகன் ரஹ்மான் இசையமைத்து வருகிறார். இதன் அறிவிப்பு நிகழ்ச்சி டில்லியில் நடந்தது. இதில், கொமன்வெல்த் மஸ்கட் 'ஷேரா'வுடன் கைகுலுக்குகிறார் ரஹ்மான். அருகில் கொமன்வெல்த் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சுரேஷ் கல்மாடி.

# எல்லை தாண்டித் தாக்குவது இலங்கைக் கடற்படைதான்

## நல்லகண்ணு தெரிவிப்பு

சென்னை, ஓக. 18



தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதில்லை. இலங்கைக் கடற்படையினர்தான் எல்லை தாண்டுகிறார்கள் - என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு தெரிவித்தார்.

இதுகுறித்து தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டத்தில் அவர் கூறியவை வருமாறு -

எல்லை தாண்டிச் செல்லும் தமிழக மீனவர்களைக் காக்க முடியாது என மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கூறியுள்ளமை கண்டிக்கத் தக்கது.

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதில்லை. மாறாக இலங்கைக் கடற்படைதான் நாகை, கோடியக்கரை உள்ளிட்ட இடங்களில் நமது நாட்டு கடற்பகுதிக்குள் வந்து நமது மீனவர்களைத் தாக்குகிறது. இலங்கை மீனவர்கள் மீதுதான் தவறு உள்ளது - என்றார்.

# இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மிக அதிகமான ஓலைச்சுவடிகள்

## தொல்லியல் துறை ஆணையர் தகவல்

சென்னை, ஓக. 18

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக அளவில் ஓலைச்சுவடிகள் உள்ளன - என்று தமிழக தொல்லியல்துறை ஆணையர் டி.எஸ்.ஸ்ரீதர் கூறினார்.

சென்னை புனித ஜோர்ஜ் கோட்டை வளாகத்தில் உள்ள இந்திய தொல்லியல் துறை அலுவலகத்தில் 'சென்னையில் பாடல் பெற்ற திருத்தலங்கள்' என்ற தலைப்பில் ஓகஸ்ட் 15 முதல் 22 ஆம் திகதிவரை புகைப்படக் கண்காட்சி நடைபெற்று வருகின்றது.

சைவத் தலங்களைப் பற்றி திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற பல நாயன்மார்களும், வைணவ தலங்களைப் பற்றி ஆழ்வார்களும் பாடியுள்ளார்கள். அவர்கள் பாடிய பாடல்களையும், பாசுரங்களையும் கண்காட்சியில் பொதுமக்கள் காணலாம். இந்தக் கண்காட்சியை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இலவசமாகப் பார்க்கலாம்.

இந்தக் கண்காட்சியை நேற்றுமுன்தினம் தொடக்கி வைத்து தொல்லியல் துறை ஆணையர் மேலும் கூறியவை வரு மாறு-

தமிழகத்தில் முன்பு ஜைன மதமும், புத்த மதமும்தான் செழித்தோங்கியிருந்தன. அப்போது, நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றி மேற்கொண்ட இறை பணி காரணமாகவும், தமிழ் தழைத்து வளர்ந்தது. அவர்கள் பாடிய பாடல்கள் பல நமக்கு கிடைத்திருப்பதால், தமிழ் மொழி செம்மொழியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் தமிழுக்குப் பெருமையை சேர்த்து வைத்து போயிருக்கிறார்கள். தமிழ் இன்றளவும் தழைத்தோங்குவதற்கான பெருமை அவர்களையே சாரும்.

அவர்களது படைப்புகளை நாங்கள் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறோம். தமிழகத்தில்தான் இந்தியாவிலேயே மிக அதிகமாக 25 ஆயிரம் ஓலைச்சுவடிகள் (தமிழ்) உள்ளன. இதுதவிர பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட 5 ஆயிரம் சமஸ்கிருத ஓலைச்சுவடிகளையும் பாதுகாத்து வைத்திருக்கிறோம். இது தமிழ் மொழியின் தரத்தை உயர்த்துவதாக உள்ளது. இதுதவிர, தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட 85 நினைவுச்சின்னங்கள் உள்ளன.

- இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ.எஸ்.பி. சலுகை பயனைவிட யுத்த வெற்றியே அதிக பயன்

## அற்ப சலுகைகளுக்காக சுயாதிபத்தியத்தை இழக்க முடியாது என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஓக. 18

'ஜி.எஸ்.பி. - பிளஸ்' வரிச்சலுகையால் இலங்கை அடைந்த பயனைவிட யுத்த வெற்றியினால் பெரும் பயனை அடைந்துள்ளது. 'ஜி.எஸ்.பி. - பிளஸ் வரிச்சலுகை ரத்தானதால் பாதிக்கப்படும் இளைஞர், யுவதிகளை அரசு ஒருபோதும் வீதிகளில் அநாதரவாக விட்டுவிடாது.

- இப்படி இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும உறுதிபடத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று மாலை கொழும்பு டார்லி வீதியிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.

அமைச்சர் டலஸ் அழகப்பெரும தொடர்ந்து கூறியவை வருமாறு:-

'ஜி.எஸ்.பி. - பிளஸ் வரிச்சலுகையை வழங்கிய நாம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு நன்றி தெரிவிக்கவேண்டும். இந்த வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்கவும் ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

'ஜி.எஸ்.பி. - பிளஸ் வரிச்சலுகை ரத்துச் செய்யப்பட்டமை நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றதா என்பது குறித்தும் பார்க்கவேண்டும். ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரே ஜீ.எஸ்.பி. - பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு வழங்கப்பட்டது.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் முறையான நிர்வாகம் இல்லை என ஐ.தே. கட்சியினர் குரல் எழுப்பினர். அத்துடன், வெள்ளைக்கொடியுடன் வந்த புலிகளின் தலைவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட விவகாரத்தை சரத் பொன்சேகா எழுப்பினார்.

இதன்பின்னரே ஐரோப்பிய ஒன்றியம் 15 நிபந்தனைகளை முன்வைத்து அதை ஏற்றுக்கொண்டு கைச்சாத்திடும்படி கோரியது. நாட்டின் சுயாதிபத்தியத்தைக் கருத்தில்கொண்டு அரசு இதனை நிராகரித்துவிட்டது. அற்ப சலுகைகளுக்காக நாட்டின் சுயாதிபத்தியத்தை இழக்க முடியாது.

வெளிநாடுகளில் வாழும் புலி ஆதரவாளர்களும், இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் குரல் எழுப்பினர். இதுவும் ஒரு காரணமாகும்.

**வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இப்போது குவிகின்றனர்**

ஜீ.எஸ்.பி. - பிளஸ் வரிச்சலுகையால் இந்த நாடு பெற்ற பயனை விட யுத்த வெற்றியினால் பெற்ற பயன் அதிகமாகும். இன்று வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டில் குவிகின்றனர். இலங்கைக்கான விமான சீட்டுகளுக்கு அறவிடப்பட்டு வந்த அபாய கட்டணம் ரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் ஆடைத் தொழிற்சாலைகளுக்கு அமெரிக்க ஜீ.எஸ்.பி. கோட்டா கிடைத்தது. அதனால் நாட்டின் பல பாகங்களில் ஆடைத் தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன. இருந்தும் குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் அமெரிக்க கோட்டா ரத்துச் செய்யப்பட்டது. இருந்தும் அதற்கு மாற்று வழிகளை நாம் தேடிக்கொண்டோம்.

2005இல் இரண்டு சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி இப்போது ஏழு சதவீதமாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (அ-சி)

# கடற்றொழில் தேசிய மகா சம்மேளனம் ஜனாதிபதியால் விரைவில் அங்குரார்ப்பணம்

## கொழும்பில் அமைச்சர் தலைமையில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக.18

கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் நேற்றுக் கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் நோக்கம் மாவட்ட மட்டத்தில் கடற்றொழில் சம்மேளனம் உருவாக்கப்பட்டு பின்னர் நாடளாவிய ரீதியில் தேசிய மகா சம்மேளனம் உருவாக்குவதே ஆகும். இது தொடர்பான ஆரம்ப முயற்சிகள் தொடர்பாகவே நேற்று ஆராயப்பட்டன. கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் கடற்றொழிலாளரின் சேமநலன்கள் போன்றவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடனேயே தேசிய மகா சம்மேளனம் உருவாக்கப்படவுள்ளது.

இது தொடர்பான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு மகா சம்மேளனம் ஜனாதிபதியால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இக் கலந்துரையாடலில் இலங்கையின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், கடற்றொழில் பரிசோதகர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-319)

# முகாமைத்துவ உதவியாளர் 98 பேரின் கதி என்ன?

யாழ்ப்பாணம், ஓக.18

'வடக்கின் வசந்தம்' வேலைத்திட்டத்தின் கீழ் முகாமைத்துவ உதவியாளர்களாக பணிக்கு அமர்த்தப்பட்ட 98 பேரும் வேலை இழக்கும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் தற்காலிகமான இணைப்பிலேயே வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

முகாமைத்துவ உதவியாளர்கள் வேலை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளார்கள். இவர்களின் வேலையைத் தொடர்ந்து நீடிப்பது சம்பந்தமாக அதிகாரிகளுடன் தாம் தொடர்புகொண்டு பேசி வருவதாகவும் இருப்பினும் இது தொடர்பான இறுதி முடிவு அமைச்சரவையே எடுக்கும் என்றும் குறிப்பிட்டார். (ஒ-319)

# முகாமைத்துவ கற்கைகள் முதலாம் அரையாண்டுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக.18

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் முதலாம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருடங்களுக்குரிய பழைய பாடத்திட்ட முதலாம் அரையாண்டு பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பீடாதிபதி அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா அறிவித்துள்ளார். (ஒ-323)

# ரயில் தண்டவாளப் பகுதிகளில் வசிப்போரை வெளியேற அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.18

யாழ்.மாவட்டத்தில் ரயில் தண்டவாளப் பகுதிகளில் இருப்பிடங்கள் அமைத்து வசிப்பவர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறி ஒத்துழைப்பு நல்குமாறு அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

ரயில் பாதைகளைப் புனரமைக்கும் பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தப் பணிகளை நேர்த்தியாக - இலகுவாகச் செய்து முடிப்பதற்கு ரயில் பாதைகள் மற்றும் அவற்றுக்கு அண்டிய பகுதிகளில் வசித்து வருபவர்கள் அவ் விடங்களை விட்டு வெளியேறுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-319)

# வலி.வடக்கில் நாளை பதிவாளர் பிரிவின் நடமாடும் சேவை

தெல்லிப்பழை, ஓக. 18

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமசேவகர் பிரிவு பகுதிகளில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு, திருமணம் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளும் நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

கிராம சேவகர் பிரிவுகளான மல்லாகம் தெற்கு (ஜே/212), மல்லாகம் மத்தி (ஜே/213), மல்லாகம் வடக்கு (ஜே/214), தெல்லிப்பழை (ஜே/227), தெல்லிப்பழை (ஜே/228), துர்க்காபுரம் (ஜே/229), வசாவிளான் கிழக்கு (ஜே/244) மற்றும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் கிராம சேவகர் பிரிவுகளும் உள்ளடங்கும் என தெல்லிப்பழை பிரதேச செயலக நிர்வாக அதிகாரி பி.இராஜகோபாலன் அறிவித்துள்ளார்.

(ஐ-323)

# கல்விமாணி மாணவருக்கு நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.18

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி மூன்றாம் வருட மாணவர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இறுதிப் பரீட்சை தொடர்பான முக்கிய விடயங்கள் இக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவிருப்பதால் மாணவர்கள் அனைவரையும் செயல்நிலை ஆய்வு தொடர்பான செயற்பாட்டு விவரங்களுடன் சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை கேட்டுள்ளார். (ஒ-10)

# பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஓக.18

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கான 'திட்டமிடல் செயலமர்வு' என்னும் தலைப்பிலான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை நாளை தொடக்கம் மூன்று நாள்கள் யாழ். வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு பங்குபற்றுபவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என யாழ்.பிராந்திய ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# அரசமைப்புக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும, பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணசேகர ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தொடர்ந்து கூறியவை வருமாறு:-

புதிய அரசமைப்புத் திருத்தங்கள் சகல தரப்புகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவேண்டும். அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய பின்னர் உயர் நீதிமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும். இத்திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குகளால் நிறைவேற்றப்பட்டால் போதுமா அல்லது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமா என உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும். இந்தத் தீர்மானத்தின் பின்னரே இத்திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல் முறை மாற்றம், தேர்தல் முறை போன்றவை குறித்த திருத்தங்கள் குறித்து அமைச்சர்கள் தினேஷ் குணவர்தன, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதிகளுடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகின்றனர்.

இத்திருத்தங்கள் தொடர்பாக ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட சகல கட்சிகளுடனும் விரிவாக பேச்சு நடத்தப்படும்.

ஜனாதிபதியின் தலைமையில் கடந்த வாரம் அரச தரப்பு அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு நாள் செயலமர்வொன்று நடைபெற்றது. இந்த செயலமர்வு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இந்த செயலமர்வின் இரண்டு நாள்களும் ஜனாதிபதி தங்கியிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டார்.

நாட்டின் எதிர்காலத் திட்டங்கள், பொருளாதாரத்தை மேம்படுத்தல் ஆகியவை தொடர்பாக காத்திரமான விடயங்கள் முன்வைக்கப்பட்டன. இங்கு மனம்திறந்து அனைவரும் கருத்தாடல்களில் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இது போன்ற செயலமர்வுகளை இனி அவ்வப்போது நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-சி)

# தேசிய பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் இந்த நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் ஒருங்கமைப்பதற்காக 14 குழுக்கள் அமைக் கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு வகையான பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் பொலிஸ், இராணுவ, கடற்படை, விமானப்படை ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களின் ''பான்ட்'' அணிவகுப்பும் இடம்பெறும்.

மேலும் தேசிய பாதுகாப்பு தினம் சம்பந்தமாக பாடசாலை மாணவர்களுக்குக் கட்டுரைப்போட்டி, சித்திரப்போட்டி ஆகியன நடத்தப்படவுள்ளன.

''தடுப்போம் அனர்த்தத்தை; பாதுகாப்போம் இலங்கையை'', ''அனர்த்தமில்லாத சூழலும் சிறந்த வாழ்க்கையும்'' என்னும் தொனிப்பொருள்களில் இந்தப் போட்டிகள் இடம்பெறும். தரம் 7, 8, 9ஆம் பிரிவு மாணவர்கள் 750 சொற்களுக்குக் குறையாமலும், தரம் 10, 11ஆம் பிரிவு மாணவர்கள் 1,200 சொற்களுக்குக் குறையாமலும், மேற்பிரிவு மாணவர்கள் 1,500 சொற்களுக்குக் குறையாமலும் கட்டுரை எழுதுதல் வேண்டும். இதுதொடர்பான சகல விவரங்களும் வலயக் கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கான பூரண ஒத்துழைப்பை நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றிடம் இருந்து எதிர்பார்ப்பதாக அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். இதுதொடர்பான அடுத்த கூட்டம் அடுத்த மாதம் 13ஆம் திகதி இடம்பெற உள்ளது.

இந்த நிகழ்வில் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், திணைக்களத் தலைவர்கள், படை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-319)

# 'சைவப் புலவன்' நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.18

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் 'சைவப் புலவன்' இதழ் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தின் தலைவர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் நல்லைக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் அருளாசி, யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகத்தின் வெளியீட்டுரை, யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதனின் மதிப்பீட்டுரை ஆகியன இடம்பெறும்.

பேரம்பலம் சக நிறுவனத்தின் உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் முதல் பிரதியைப் பெறுவார்.

இதழாசிரியர் உரையை சங்கத்தின் செயலாளர் சைவப் புலவர் செ.கந்த சத்திய தாசன் நிகழ்த்துவார். (ஒ-ஐ)

# அரச தாதியர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக. 18

ஏழு கோரிக்கைகளை முன்வைத்து அரச தாதி உத்தியோகத்தர்கள் இன்று நண்பகல் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர்.

அரச தாதி உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் தொடர்பாக சுகாதார அமைச்சு, சுகாதார செயலாளர் மற்றும் சுகாதார உயர் அதிகாரிகள் ஆகியோருடனும் நடத்தப்பட்ட பேச்சுகளுக்கு இதுவரை எதுவித தீர்வும் கிட்டவில்லை என்று இவர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராவந்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.

## வடக்கு மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர். இதே எண்ணிக்கையில் புலிகளும் கொல்லப்பட்டிருக்கலாம் என நான் நம்புகின்றேன்.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் சில குழுக்கள் தங்களைப் புலிகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக ஆயுதங்களை வைத்திருந்தனர். அவர்கள் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளை ஆதரித்தனர்.

ஆனால் போர் முடிந்த பின்னர் அத்தகைய ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு விட்டன.

தங்களைப் பாதுகாப்பதற்காக போர்க் காலத்தில் கருணா, பிள்ளையான் அணிகளும் ஈ.பி.டி.பி.யினரும், புளொட்டும் ஆயுதங்களை வைத்திருந்தன.

இதேவேளை இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் புலிகளின் இழப்பையும், பொதுமக்களின் இழப்பையும் ஒன்றாக்கிக் குழப்பிக்கொள்கின்றனர். பொதுமக்களின் உயிரிழப்பைக் குறைப்பதற்கு இராணுவம் முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் விடுதலைப் புலிகள் தான் தமது கட்டுப்பாட்டில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரமுயன்ற அப்பாவிப் பொதுமக்களை சுட்டுக்கொன்றனர்.

வடக்கு மக்களின் மனதில் புலிகள் தொடர்பில் இன்னமும் அனுதாபம் உள்ளது. முன்னாள் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் 12,000 பேர் சரணடைந்துள்ளனர். அவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர். ஆனால் மக்கள் மத்தியில் சரணடையாத புலிகள் எத்தனை பேர் உள்ளனர் என்றோ, அடையாளம் காணப்படாதவர்கள் எத்தனைபேர் உள்ளனர் என்றோ, எமக்குத் தெரியாது. அவர்களில் பலர் பல ஆண்டுகளாக புலிகளின் கொள்கைக்கு ஆதரவாக மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள். அவர்கள்தான் மிக மோசமான வகையினர். அவர்கள் தொடர்ந்தும் புலிகளை ஆதரவளிப்பவர்கள்.

அவர்களில் சிலர் அரச உத்தியோகத்தர்களாகவும் இருக்கலாம்; அது மிகவும் ஆபத்தானது. அத்தகையவர்கள் அரசுடன் முழுமையாக இணைந்து செயற்படமாட்டார்கள். பல்வேறு திட்டங்களுக்கு அரசு அளிக்கும் நிதியை அவர்கள் சரியாகக் கையாளாமல் போகலாம். இப்படி அரசிடம் சரணடையாதவர்களே தான் தொடர்ந்தும் நாட்டுக்கு ஆபத்தானவர்கள்.

### வடக்கில் இராணுவத்தினரை நிலைகொள்ளச் செய்வது மிக அவசியம்

விடுதலைப் புலிகள் மீண்டும் வடக்கில் தலையெடுத்து அணி சேருவதற்கு இடம் கொடுக்காமல் இருப்பதன் பொருட்டு, கணிசமான எண்ணிக்கையான இராணுவத் தினரை வடக்கில் கடமையில் ஈடுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடந்தும் கட்டுக்குலையாமல் செயற்படுகிறது. அதனாலும் வடக்கில் இராணுவத்தினரை நிலைகொள்ள வைக்கும் தேவை உருவாகியுள்ளது.

இதேவேளை வன்னியில் கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினருக்கு தங்குமிட வசதிகளே செய்துகொடுக்கப்படுகின்றன. அது சிங்களக் குடியேற்றங்களோ, இராணுவக் குடியேற்றங்களோ அல்ல - என்றார் கோத்தபாய ராஜபக்ஷ.

போர் நடைபெற்ற வேளையில் விடுதலைப் புலிகள் பல சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அணியும் உடைகளை அணிந்து கொண்டே களத்தில் போராடினார்கள் அதனால் விடுதலைப் புலிகளையும் பொதுமக்களையும் வித்தியாசப்படுத்திக் காணமுடியாத நிலை பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டது. (அ-சி)

## பொன்சேகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியியல் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றி விட்டு அமர்ந்தபோது ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. அநுர குமார திஸாநாயக்க ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

அவர் தனது ஒழுங்குப் பிரச்சினையில் இராணுவ நீதிமன்றம் பொன்சேகாவுக்கு வழங்கிய தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து உரையாற்றினார்.

அப்போது சபைக்குத் தலைமை வகித்துக் கொண்டிருந்த குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமார் இது ஓர் ஒழுங்குப் பிரச்சினையல்ல என்று கூறினார். அவ்வாறு கூறியதும் அநுரகுமார திஸா நாயக்கவின் ஒலிவாங்கியும் முடக்கப் பட்டது.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தவிர்ந்த அனைத்து எதிர்க்கட்சி எம்.பிக்களும் எழுந்து இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். கோஷங்களை எழுப்பினர்.

இந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாது அமைச்சர் ஜி.எல்.பீரிஸை உரையாற்றுமாறு குழுக்களின் பிரதித் தலைவர் கூறினார். ஆனால், கூச்சல் குழப்பத்திற்கு மத்தியில் உரையாற்ற முடியாமல் பீரிஸ் தடுமாறினார்.

### சபாபீடத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

அப்போது திடீரென எதிர்க்கட்சி எம். பிக்கள் அனைவரும் சபாபீடத்தை நோக்கி வந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். ஜனநாய கத் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. அஜித்குமார புத்தகங்களைக் கிழித்து வீசி கூச்சலிட்டார்.

இதனால் சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. சபை நடவடிக்கைகளை 5 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாகக் கூறிவிட்டு குழுக்களின் பிரதித் தலைவர் சபாபீடத்திலிருந்து எழுந்து சென்றார்.

5 நிமிடங்கள் கழித்து சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் சபை மீண்டும் கூடியது. அப்போது குழுக்களின் பிரதித் தலைவர் சபையை ஒத்திவைக்காது எழுந்து சென்று விட்டார் என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டின.

தான் சபையை 5 நிமிடங்களுக்கு ஒத்திவைத்துவிட்டுத்தான் எழுந்து சென்றதாகக் குழுக்களின் பிரதித் தலைவர் கூறி னார். எதிர்க் கட்சிகள் அதை ஏற்க மறுத் தன. இருப்பினும், குழுக்களின் பிரதித் தலைவர் கூறுவதைத் தாம் ஏற்றுக்கொள்கிறார் என்று சபாநாயகர் கூறினார்.

அநுரகுமார திஸாநாயக்க மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப சபாநாயகர் அப்போது சந்தர்ப்பம் வழங்கினார்.

இங்கு எம்மால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் வெளியில் நிறைவேற்றப் படுவதில்லை. பொன்சேகாவுக்கு வழங் கப்பட்ட இராணுவ நீதிமன்றத் தீர்ப்பின் அறிக்கைகள் இந்தச் சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அநுரகுமார கூறினார். நீண்ட இழுபறிக்குப் பின்னர் ஒருவாறு போராட்டமும், சர்ச்சையும் அடங்கின. (அ-சி)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பித்தது.

பொலிஸ் அனுமதி பெறாமல் வீதியில் பேரணியாகச் சென்றார்கள் எனவும், பேரணியைக் கலைப்பதற்கு நீதிமன்ற உத்தரவைப் பெற நேரம் போதவில்லை எனவும் காத்தான்குடி பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்திருந்தனர்.

பேரணியில் கலந்துகொண்டவர்களைக் கைதுசெய்தால் மக்கள் மத்தியில் பிரச்சினை ஏற்படும் என்ற காரணத்தினால் அவர்களைக் கைது செய்யவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டப் பேரணியானது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொன் செல்வராசா, எஸ். யோகேஸ்வரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரட்ணம், கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங் கத் தலைவர் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டது என அறிய முடிந் துள்ளதாகவும் இதுதொடர்பாக விளக்கமளிக்க மேற்குறிப்பட்டவர்களை எதிர்வரும் 7ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கட்டளை பிறப்பிக்குமாறும் பொலிஸார் கோரி உள்ளனர்.

அதனை ஏற் றுக்கொண்ட மட்டக்களப்பு நீதிவான் வி.இராமக்கமலன் இந்த அழைப்பாணையைப் பிறப்பித்துள்ளார். (அ-சி)

## நாங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது கருத்துகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் கனேடிய அரசு, கனேடிய மக்கள், பத்திரிகையாளர்கள், தமிழர் பேரவையினர் ஆகியோருக்கும் மற்றும் ஏனையோருக்கும் நாம் கூறுவது என்னவெனில் முதலில் கனேடிய அரசையும் கனேடிய மக்களையும் நாம் இருகரம் கூப்பி வணங்கி நன்றி கூறுகின்றோம். அதாவது பசுபிக் சமுத் திரத்தில் நாம் நின்று கொண்டு 'நாம் இலங்கை அகதிகள் எங்களைக் காப்பாற்றுங்கள்' என்றதும் உடனடியாக விரைந்து வந்து எங்களைக் காப் பாற்றி உணவு, தண்ணீர், பழங்கள், இனிப்பு கள், பிஸ்கட் தந்தனர். உயிருக்கு உத்தரவாதம் வழங்கினர்.

இலங்கை அரசு இலங்கையில் இனப் பிரச்சினை தீர்ந்து விட்டது என்கிறது. ஆனால் அங்கு அவசரகாலச் சட்டங்களோ, பயங்கரவாதச் சட்டங்களோ அகற்றப்பட வில்லை. தடுப்புக் காவலில் உள்ள அப்பாவி அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வில்லை. இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக மீளக் குடியமர்த்தப் பட வில்லை. இதற்கு மாறாக, ஆள்கடத்தல்களும், படுகொலைகளும் தொலைபேசி மிரட்டல்களும் இடம்பெறுகின்றன. மேலும், இலங்கை அரசு தனது தனிப்பட்ட நலனுக்காக உலக ரீதியில் பொய்ப் பிரசாரம் செய்கிறது.

நாங்கள் போரினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் என்பதை கனேடிய அரசும் அதன் மக்களும் நம்பவேண்டும். மேலும் கனேடிய சட்டத்துக்கு அமைய கீழ்ப்படி வாக வாழ்வோம் என்பதையும் கூறுகின்றோம். நாங்கள் தீவிரவாதிகள் அல்லர் எனக் கூறுகிறோம்.

மிக மிக அவலப்பட்டு, உணவு, தண் ணீர், கழிப்பட வசதி, மருத் துவ வசதி, படுக்கை வசதி போன்ற அத்தியாவசிய அடிப்படை வசதிகள் ஏதுமற்றவர் களாக நான்கு மாதங்களை அண்மித்த கடுமையான, கொடுமையான துன்ப நிலையில் பயணித்து வந்துள்ளோம். ஏனெனில் நாம் பிறந்த மண்ணில் இதுவரை நடந்து கொண்டிருக்கும் கொலை, ஆள் கடத்தல், வன்முறைப் பிரயோகம் போன்ற கொடுமைகளிலிருந்து எம்மைப் பாதுகாத்து எமதும் எம்மைச் சார்ந்தோரினதும் உயிரை உத்தர வாதப் படுத்துவதற்காகவே கனடா வந்துள்ளோம்.

குடியேறியவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தவர்களை அரவணைத்துக் கொண்ட தாங்கள் இந்த ஏதிலிகளையும் ஏற்றுக் கொள்வீர்கள் என்ற முழுமையான நம்பிக்கை எமக்கு உண்டு. இந்த நாட்டுக்காக முழுமையான அர்ப் பணிப்புடன் நடப்போம் என்றும் சட்டம், ஒழுங்கு விதிகளின் படி நடப்போம் என்றும் உறுதியளிக்கிறோம்.- இப்படி அக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.

## கே.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த ஆண்டு மலேசியாவில் கைது செய்யப்பட்ட கே.பியை வன்முறைக் கொள்கைகளைக் கைவிடுமாறு அரசு வலியுறுத்திவருகிறது.

அதேவேளை, கே.பியின் மனதை மாற்றியதில் இராணுவம் பெரு வெற்றிய டைந்துள்ளது. சிலருக்கு அதில் பல்வேறு கருத்துக்கள் உள் ளன. ஆனால் நான் பேசிய பல்வேறு விமர்சகர்கள் நாம் செய்திருக்கும் விடயம் பெரும் சாதனை என்றே தெரிவித்தனர்.

அரசுடன் இணைந்து ஒரே நாட்டை உருவாக்க வேண்டும் என்ற உணர்வை அவருக்கு ஏற்படுத்தியதை பலரும் வர வேற்கின்றனர். இது மிகவும் முக்கியமான விடயம். - என்றார் கோத்தபாய ராஜபக்ஷ.

## மேர்வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி அமைச்சர் பதவியில் இருந்தும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரி மையில் இருந்தும் ஜனாதிபதியால் நீக்கப்பட்டமை தெரிந்ததே.

அவர் பிரதி அமைச்சராக இருந்தபோது நாடாளுமன்றில் அவருக்கு மூன்றாவது வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது பிரதி அமைச்சர் பதவியில் இருந்து அவர் நீக்கப் பட்டுள்ளமையால் பின் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட் டுள்ளது.

நேற்று நாடாளுமன்றத்துக்கு வந்த மேர்வின் சில்வா தனது ஆசனத்தைத் தேடினார். தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் ஆசனத்தை அமைச்சர்கள் அவருக்குக் காண்பித்தனர். (அ-சி)


## ஆண், பெண் பணியாளர்கள் தேவை

மிகப் பிரபல்யமான உணவுடன் கூடிய உல்லாசப் பயணிகள் விடுதிக்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.

I. சுத்திகரிப்பாளர் (Cleaner)
II. சமையல்காரர் (Cook)
III. சமையல் உதவியாளர் (Kitchen helper)
IV. அறை பராமரிப்பாளர் (Room boy)

இன்று (18.08.2010) புதன்கிழமை காலை 9 மணிக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

Note: ★ இராமநாதன் வீதியில் (F) பூட்ஸ் சிற்றிக்கான சகல தளபாடங்களுடன் கடை வாடகைக்குண்டு.

T.P: 021 222 5876, 0776016310, 021 4590052

மிலேனியம் றெஸ்ரோரன்ட்,
76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்காட்சியும் விற்பனையும்

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

இலங்கை, இந்தியப் புத்தகங்கள், மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள், சிங்கப்பூர் மலேசியாவில் இருந்து சிறுவர்களுக்கெனப் பிரத்தியேகமாக இறக்கப்பட்ட சிறுவர் இலகு முறை கற்றல் புத்தகங்கள், பயில் வகைகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் சகலவிதமான உங்களுடைய கற்றல் தேவைகளையும் ஒரே இடத்தில் விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளவும்.

விசாலமான இடவசதியுடன் (1200 சதுர அடி) கூடிய நிலப்பரப்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

அன்னை புத்தகசாலை
சிறப்பு விற்பனை நிலையம்
(நல்லூர் பின்வீதி, றியோ கிறீம் கவுஸ் அருகில்)

## பொதுச் சாதாரணப் பரீட்சை கருத்தரங்கும் வழிகாட்டி நூலும்

க.பொ.த. உயர்தர சகலதுறை மாணவர்களுக்கும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள பரீட்சைக்கானது.

★ ஆசிரியர் - த.தவசேகர் ★ இடம் - DMI யாழ்ப்பாணம்.
★ நேரம் - 24.08.2010 செவ்வாய் பிற்பகல் 1 - 4

இந்த வழிகாட்டி நூல் பிரபல புத்தகநிலையங்களிலும் DMI இலும் ரூபா 150க்கு விற்பனையாகின்றது. வழிகாட்டி நூலுடன் கருத்தரங்கிற்கு அனுமதி இலவசம்.

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை (ஆண்கள்)

பத்திரிகை நிறுவனத்தில் இரவு, பகல் கடமையில் ஈடுபடக்கூடிய தேக ஆரோக்கியம் உடையவர்கள் தேவை. ஆர்வம் உடையவர்கள் இன்று (18.08.2010) நேரில் வரவும்.

பொதுமுகாமையாளர்,
உதயன் பணிமனை,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(இ/570011)


## மரண அறிவித்தல்

### பூபாலசிங்கம் பாக்கியம்



மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் சங்கானையைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூபாலசிங்கம் பாக்கியம் 16.08.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் அருமை மருமகளும், பூபாலசிங்கத்தின் (முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பசுபதி, ஆறுமுகம், கணபதிப்பிள்ளை மற்றும் உருக்குமணி, காலஞ்சென்றவர்களான குணபாலசிங்கம், ஜெயபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கார்க் கார மயில்வாகனத்தின் அன்பு மைத்துனியும் தனலட்சுமி, அன்பழகன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நித்தியா னந்தன் (பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்), கலைச்செல்வி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மாலதி (ஆங்கில ஆசிரியை, யா/வட்டு.மேற்கு அ.மி.த.க. பாடசாலை), நிரஞ்சன் (சுவிஸ்), கஜானிகா (ஜேர்மனி), அஜுன் (ஜேர்மனி), கபிஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2010) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் சங்கானை வதிவிட இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கரைச்சி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மறையா தாரர் கந்தோர் ஒழுங்கை,
சங்கானை.

(102178)

தகவல்:
குடும்பத்தினர்.


## யாழ் மண்ணில் 3 வது அகவையில் யாழில் கொழும்பு பிறின்டேர்ஸ்

666, கே.கே.எஸ் வீதி, யாழ்.

(திருமண,பூப்புனித, பிறந்தநாள், 31 ஆம் நாள்,புதுமனைபுகுவிழா,முதல்நன்மை) அழைப்பிதழ்கள், இம்பிரசன் சார்ஜ் (அடி கூலி)

வாழ்த்துப்பாக்கள், நினைவுமலர்கள், பில், லேபல்கள், வெளியீட்டுமலர்கள், பரீட்சைப் பேப்பர்வெளியீடுகள்,

கண்ணீர் அஞ்சலிகள், பெரிய அளவிலான போஸ்டர்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பினையும்

நியாய விலையில் உயர் தொழில்நுட்பத்தில் பதிப்பு செய்திடலாம். எண்ணத்தில் தோன்றும் வண்ணத்தை எண்ணம் போல் வண்ணம்

யாழ்ப்பாணத்தில் வேறு எந்த நிறுவனமும் வழங்காத வழங்க முடியாத நியாய விலை அமைத்திட யாழ் மண்ணில் நாம்...


கொழும்பு விலையில் யாழில் அனைத்துவிதமான அச்சுப்பதிப்புக்களும். அகவை 3 ஆம் தவராது எமது நிறுவனம் வழங்கும் அதிரடி விலை

A4 - 40/= (100க்கு உட்பட)
A3 - 80/= (100க்கு உட்பட)
A4 - 30/= (100க்கு மேற்பட)
A3 - 60/= (100க்கு மேற்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உலக மகா ஓவியங்களில் இறுதி இராப்போசனமும் ஒன்று



"இறுதி இராப்போசனம் என்பது" கடைசியாக இயேசுநாதர் தமது 12 சீடர்களுடன் அமர்ந்து பங்கேற்றுக் கொண்ட இரவு உணவு விருந்தையே குறிப்பிட்டுக் காட்டுவதாக இருந்த போதிலும் ஓவிய உலகில் 15 ஆம் நூற்றாண்டில் லியானாடோ டாவின்சி என்னும் ஓவியரால் மிலான் நகரில் தீட்டப்பட்ட சுவர் ஓவியத்தையே இப்பொழுது சுட்டுவதாகக் கொள்ளப்படுகின்றது.

இம் மாபெரும் ஓவியர் தமது போஷர்களான மிலான் நகர பிரபுவான லூடோவிக்கோ சோர்ஸா மற்றும் அவரது சீமாட்டி பீட்றிஸ் டி எஸ் தே என்பவருக்காக இவ்வோவியத்தைத் தீட்டினார் என்று தெரிகிறது.

புனித அருளப்பரின் சுவிசேஷம் 13:12 இல் குறிப்பிடுவதற்கு அமைவாக இயேசுநாதரின் இறுதி இராப்போசன விருந்தினை விவரிப்பதாக இவ் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. அவ்விருந்தின் போதே தனது சீடர்களில் ஒருவர் தம்மைக் காட்டிக் கொடுப்பார் என்பதாக இயேசு அறிவிக்கிறார்.

இறுதி இராப்போசனம் என்ற இந்த ஓவியம் இத்தாலியிலுள்ள மிலான் நகரில் சாந்தா மரியா டெல்லே கிராஸி என்ற குருமார் விடுதியின் உணவருந்தும் மண்டபத்தின் பின் சுவரில் தீட்டப்பட்டுள்ளது. 450 ×870 சதுர சென்ரிமீற்றர் (15 × 29 சதுர அடி) அளவு கொண்டது இவ்வோவியம். இதனை டாவின்சி 1495 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 1498 ஆம் ஆண்டு பூர்த்தி செய்தார் என்று கூறப்படுகின்றது. இதில் தொடர்ச்சியாக அவர் ஈடுபட்டிருக்க வில்லையாம்.

உங்களில் ஒருவர் என்னைக் காட்டி கொடுப்பார் என்று இயேசு கூறியதையடுத்து அப்போஸ்தலர்கள் மத்தியில் காணப்பட்ட உணர்ச்சியின் எதிர் விளைவுகளை காட்டுவதாகவே ஓவியம் அமைந்துள்ளது.

இடமிருந்து வலமாக:

முதல் மூவர் பார்த்த லோமேயு, அல்பேயுவின் மகன் யாகப்பர் மற்றும் அந்திரேஸ் மூவரும் அதிர்ச்சியுற்றுக் காணப்படுகின்றனர். இரண்டாவது மூவர் அடங்கிய குழு: யூதாஸ், பேதுரு மற்றும் அருளப்பர். யூதாஸ் பச்சை சிவப்பு ஆடையில் காணப்படுகிறார். அவரது திட்டம் வெளிப்பட்டு விட்டதனால் அதிர்ச்சியடைந்து போயுள்ளார். அப்போஸ்தலர்களில் இவர் ஒருவரே முழங்கையை மேசை மீது வைத்துக் கொண்டுள்ளார். அந்தக் கையில் சிறு பை காணப்படுகின்றது. ஒருவேளை பரிசாகக் கிடைத்த வெள்ளிக்காசுகள் அதில் இருக்கலாம். அல்லது 12 பேரில் பொருளாளராக இருந்தமையைக் காட்டும் அடையாளமாக இருக்கலாம்.

பேதுரு கோபமுற்றுள்ளதுடன் ஒரு கத்தியைக் கையில் வைத்திருக்கிறார். அதன் முனை இயேசுவுக்கு அப்பால் திருப்பப்பட்டுள்ளது. கெத்சமெனி தோட்டத்தில் இயேசு கைதுசெய்யப்பட்ட போது அவர் சற்று முரட்டுத்தனமாகச் செயற்பட்டமையை முன்கூட்டியே எதிர்வு கூறுவதாகவும் இது இருக்கலாம். எல்லோரிலும் இளையவரான அருளப்பர் மூர்ச்சையானவர் போல் காணப்படுகிறார். அடுத்து இயேசு காணப்படுகிறார். அவருக்கு இடது பக்கமாக முதல் மூவரில் தோமையார், பெரிய யாகப்பர், பிலிப்பு ஆகியவர்கள் காணப்படுகின்றனர். தோமையார் குழப்பமடைந்துள்ளார். பெரிய யாகப்பர் அதிர்ச்சியடைந்து கைகளைப் பக்கவாட்டில் உயர்த்தியுள்ளார். அதேவேளை பிலிப்பு ஏதோ விளக்கம் கோருவதாகத் தெரிகின்றது.

அடுத்த மூவர், மத்தேயு, யூதாததேயு மற்றும் இராயப்பர் ஆகியோராவர். முதல் இருவரும் மூன்றாமவரிடம் ஏதோ விளக்கம் கேட்பதாகத் தெரிகின்றது. (ப)




TOSHIBA
Leading Innovation
e-STUDIO

வேகத்திலும் செயற்றிறனிலும் முதன்மை வகிக்கும் டொஷீபா இயந்திரங்கள் இப்பொழுது உங்கள் செலவைக் குறைப்பதற்கும் வழிகாட்டுகின்றன

அதிவேகமாக அச்சிடக்கூடிய e-studio 255/305/355/455 இயந்திரங்கள், இந்த வகையைச் சேர்ந்த அதிசிறந்த பிரிண்டர்கள், கொப்பியர்கள் மற்றும் ஸ்கேனர்களாக முன்னணி வகிக்கின்றன. எளிதான பாவனை, சிக்கனம் என்பவற்றின் மூலம் அவை உங்கள் அலுவலகத்தின் வினைத்திறனை அதிகரிக்கும். இலகுவில் மாற்றக்கூடிய பாகங்களைக் கொண்டுள்ளதால், பராமரிப்பு நேரத்தையும் செலவையும் குறைத்து சிறந்த செயற்பாட்டை மேற்கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. 3ஆம் தலைமுறை e-BRIDGE தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதால், user interface மற்றும் முன்னேற்றகரமான சிஸ்டம் Software மூலம் இயந்திரத்தின் செயற்றிறன் உச்ச நிலைக்கு அதிகரிக்கப்படுகின்றது. குறைந்த காகிதப் பாவனை, சிக்கனமான மின்சக்தி நுகர்வு போன்ற ஏனைய சிறப்பு அம்சங்களையும் கொண்ட டொஷீபா e-studio உங்கள் அலுவலகத்தின் வினைத்திறனை அதிகரிக்கவும் செலவுகளைக் குறைக்கவும் அருந்துணையாகும்.



பிரதி ஒன்றிற்கான செலவு
e-studio 54 சதம்

e-STUDIO255
e-STUDIO305
நிமிடத்திற்கு 25 மற்றும் 30 பக்கங்கள்

e-STUDIO355
e-STUDIO455
நிமிடத்திற்கு 35 மற்றும் 45 பக்கங்கள்

Print Copy Scan Fax



- ஸ்ராண்டட் 1GB RAM + 60GB HDD
- 25 – 400% பிரதியெடுப்பு விகிதம்
- Ethernet (10/100BASE-T), USB 2.0 இணைப்பு
- TCP/IP, IPX/SPX, NetBIOS, AppleTalk, EtherTalk
- Win 2000/XP/Vista/Server 2003/2008/7-32/64 bit
- UNIX, Linux and Mac x 10.2.4/10.3/10.4/10.5 Os support
- 550 x 2 தாள் காகித உள்வாங்கு திறன்
- Stack Feed Bypass (100 sheets)
- 2400 x 600 dpi பிரிண்ட் ரிசொலூஷன்
- ஸ்ராண்டட் ட்ரே அற்ற தன்னியக்க டுப்ளெக்ஸ் பகுதி
- 1 public ox, 200 private user boxes

விருப்பத்தேர்வு
- PCL6 emulation & PS3, XPS
- ஈ-மெயில் வசதியுடனான கலர் ஸ்கேனிங்

உங்கள் பழைய பிரதியெடுக்கும் இயந்திரத்தைக் கையளித்து ரூ.60,000 வரை தள்ளுபடி பெறுங்கள்.*

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்:
அஷோக் - 0777 725241/ அலீம் - 0777 278472/ சஞ்ஜீவ - 0777 386909

அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்:
ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
320/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 2313000, 011 2431576, 011 4702611 / பெக்ஸ்: 011 2431745
இணையத்தளம்: www.jkoa.com

தரமான மெற்றிரியல்களைக் கொண்டு
உங்களுக்குத் தேவையான விளம்பரப் பதாகைகளையும்
உங்கள் நிகழ்வுகளுக்கான பனர்களையும்
சிறந்த முறையில் உங்களுக்கு பிடித்தவாறு வடிவமைத்து
நீங்கள் விரும்பும் அளவுகளில் டியிற்றல் பிறிண்ட்டாகவும்
விளம்பரப் பதாகைகளாகவும் பெற்றுக்கொள்ள முடியும்




இல.173/5, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 7538770, 0772394422

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் இந்து ஆலயங்களை அழிப்பது தமிழ் இனத்துக்கு எதிரான துரோகச் செயல்

மட்டக்களப்பு, ஓக. 18

''வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலே இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு பௌத்த விகாரைகளை நிறுவும் பேரினவாத செயலை அரசு முன்னெடுத்து வருகின்றது. இது தமிழ் இனத்திற்கு எதிரான துரோகச் செயலாகும்''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் கூறினார்.

ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்தில் சனிக்கிழமை நடைபெற்ற துறை நீலாவணை இந்து இளைஞர் மன்ற ஆண்டு விழாவில் தாம் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்து இளைஞர் மன்றத் தலைவர் எஸ். அரியானந்தம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய பிரதம குரு மா. கு.கணேசதுரைக் குருக்கள் ஆன்மிக அதிதியாகக் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

''கடந்த மூன்று தசாப்த காலமாக சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த தமிழ் மக்கள் யுத்தம் முடிந்த பின்னர் நிம்மதிப் பெருமூச்சுவிடலாம் என எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இன்று கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் கபளீகரம் செய்யப்படுகின்றன. அத்துடன் தமது சொந்த மண்ணிலேயே இவர்கள் சிறுபான்மையினராக ஆக்கப்படும் வகையில் திட்டமிட்ட குடியேற்றங்களும் இடம் பெற்று வருகின்றன.

இவை போதாதென்று எமது தாயக மண்ணிலுள்ள இந்து ஆலயங்களில் பௌத்த விகாரைகளை நிர்மாணிக்கும் கைங்கரியங்களும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.




குறிப்பாக கிழக்கில் திருகோணமலை, மாவட்டத்தின் மூதூர் கங்குவேலி அகத்தியர் ஸ்தாபன சிவன் கோயிலின் சிவலிங்கம் உடைக்கப்பட்டுள்ளதோடு வெருகல் பிரதே சத்தின் பாலமுருகன் ஆலயம், கல்லடிக் கிராமத்தின் நீலியம்மன் ஆலயம் முதலான ஆலயங்களும் அழிக்கப்பட்டு பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் தமிழ் மண்ணைக் கூட பௌத்த மண்ணாக மாற்றும் பேரினவாத சதி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் வாய்மூடி மௌனிகளாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

எனவே, நம் மத்தியில் உள்ள ஆலய நிர்வாகிகள், இந்து அமைப்புகள், இந்து மாமன்றங்கள் இந்த நடவடிக்கைக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும்.

இலங்கையில் குறிப்பாக எமது பிரதேசங்களில் இந்து மத வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்காக உழைத்துவரும் மதகுருமார்களுக்கு உரிய வசதிகள் செய்யப்பட்டு அவர்களின் நலன்களும் பேணப்பட வேண்டும்.

இதேவேளை, நான் இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று எமது பிரதேசங்களில் இந்து மத வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் பயன்படத்தக்க உதவிகளைப் பெற முயலுவேன்.

கடந்த மூன்று தசாப்த காலத்தில் சேதமுற்ற ஆலயங்களின் புனர் நிர்மாணத்திற்கு தலா பத்துலட்சம் ரூபா வழங்கப்பட வேண் டும் என நான் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்துள்ளேன். பெரும்பாலும் இந்தக் கோரிக்கை வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு'' - என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய குரு.மா.கு.கணேசதுரை, ஆலயத் தொண்டர் எஸ்.இராசசிங்கம் ஆகியோர் இந்து இளைஞர் மாமன்றத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (ளி)

# வேலைவாய்ப்பற்ற இளைஞர் - யுவதிகளுக்கு மட்டக்களப்பில் உயர்தர தொழிற்பயிற்சி

மட்டக்களப்பு, ஓக. 18

''மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர் - யுவதிகளுக்கு உயர் தரத்திலான தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.''

- இவ்வாறு சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:

''உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நிறைவான சம்பளத்துடன் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தொழிற்பயிற்சி சான்றிதழ்களை வழங்கும் வகையில் நவீன ரகத்திலான தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கு வசதியாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பிராந்திய பயிற்சி நிலையமொன்று காத்தான்குடியில் நிறுவப்படவுள்ளது.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக பயிற்றுநர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31ஆம் திகதிவரை சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் காத்தான்குடி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ திருத்துதல், ஆடை வடிவமைப்பு, கணினி பழுதுபார்த்தல், படம் வரைதல் உட்பட 7 பயிற்சி நெறிகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது - இப்படி பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ளி)

# பல்லின சமூகங்களை இணைத்து இலச்சினையை உருவாக்கத் திட்டம்

மட்டக்களப்பு, ஓக. 18

பல்லின சமூகங்களை ஒன்றிணைக்கும் இலச்சினையை உருவாக்கும் திட்டமொன்றை சம்மாந்துறை வலயப் பாடசாலை மாணவர்களிடையே 'மேசிகோப்' என்ற தன்னார்வத் தொண்டர் நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

சம்மாந்துறை வலயத்திற்குட்பட்ட ஏழு கிராமங்களைச் சேர்ந்த 14 பாடசாலைகளிலுள்ள தெரிவு செய்யப்பட்ட சித்திரம் வரைவதில் திறமையுள்ள 140 மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றனர்.

10 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ள இத்திட்டத்தில் தெரிவு செய்யப்படும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மடி கணினி, டிஜிட்டல் கமெரா, மௌண்டன் சைக்கிள் ஆகியன வழங்கப்படவுள்ளன. அத்துடன், பங்குபற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மேசிகோப்பின் பாடசாலைப் பைகளும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் முதலாவது கோட்டமட்டப் போட்டி சம்மாந்துறை அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ளி)

# உலக வங்கியின் கல்வி அபிவிருத்தித் திட்டத்தில் ஊவா தமிழ்ப் பாடசாலைகள் உள்வாங்கப்படும்

## மாகாண அமைச்சரிடம் முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.18

உலக வங்கியின் கல்வி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ஊவா மாகாணத்திலுள்ள தமிழ்ப்பாடசாலைகள் உள்வாங்கப்படும் என மாகாண முதலமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ மாகாண அமைச்சர் செந்தில் தொண்ட மானிடம் உறுதியளித்துள்ளார் என அவரது செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண தமிழ்க்கல்வி அபிவிருத்தி தொடர்பாக அமைச்சர் செந்தில் தொண்டமான் முதலமைச்சருடன் நடத்திய கலந்துரையாடலின்போது விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பயனாகவே அவர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புகள் கொண்ட ஒரு பாடசாலையைத் தெரிவுசெய்து அதனைத் தரமுயர்த்தி தேவையான வளங்களைப் பெற்றுக்கொடுக்கவும், மாகாணத் தமிழ்ப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் முதலமைச்சர் முன்வந்துள்ளார்.

பெருந்தோட்ட அபிவிருத்திக்கு 2 கோடி 50 லட்சம் ரூபாவை வழங்கும் அதேவேளை, மூன்றுவருடங்களுக்குள் ஊவா பெருந்தோட்டப்பகுதிகள் அனைத்திற்கும் மின்சாரம் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடத்தி தீர்மானங்களை மேற்கொள்ளுமாறு தனது ஆலோசகர் சம்பத் கஜதீரவை முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார் - என அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# மலையகத்தில் இளைஞர் தின நிகழ்வுகள்

கொழும்பு, ஓக.18

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் பிரஜாசக்தி நிலையங்களில் கடந்த12 ஆம் திகதிமுதல் இளைஞர் தின நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

''எமது வருடமும் - எமது குரலும்'' என்ற தொனிப்பொருளின் கீழ் நிகழ்வுகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பிரஜாசக்தி முகாமையாளர் ப.நகுலேந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

சௌமியமுர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் பிரஜாசக்தி நிலையங்களில் ஒவ்வொரு வருடமும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இளைஞர் தின நிகழ்வுகள் கொண்டாடப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் இவ்வருடத்தின் தொனிப்பொருளான 'எமது வருடமும் - எமது குரலும்' என்பதற்கு அமைவாக இளை ஞர் தின நிகழ்வுகள் நாடெங்கிலும் உள்ள 44 பிரஜாசக்தி நிலையங்களில் நடை பெற்றுவருகின்றன.

தற்கால இளைஞர் - யுவதிகள் மற்றும் சமூகத்தினர் எதிர்கொள்ளும் சவால்களுக்கு ஊடகத்துறையினரின் பங்களிப்பு- இளைஞர்களுக்கும் பெற்றோருக்குமிடையில் புரிந்துணர்வை விருத்தி செய்தல் தொடர்பான வட்ட மேசை கலந்துரையாடல்-

இளைஞர்களுக்கிடையிலான விவாதப் போட்டிகள்போன்ற பல்வேறு செயற்றிட்டங்கள் இடம்பெறவுள்ளன. மேற்குறிப்பட்டுள்ள தொனிப்பொருளுக்கமைவாக சித்திரப் போட்டிகளும், கண்காட்சிகளும் நடைபெறும் - இப்படி நகுலேந்திரன் தெரிவித்தார். (ளி)

# மாற்றத்தை விரும்புபவர்கள் இ-தொ-காவில் இணையலாம்

## அதன் ஊடகப் பேச்சாளர் ஜெகதீஸ்வரன் அழைப்பு

கொழும்பு, ஓக. 18

70 வருடகால வரலாற்றைக் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று மலையகத்தில் ஒரு மாபெரும் தொழிற்சங்கமாகும். மறைந்த தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் தனது அணுகுமுறைகளாலும், சாணக்கியத்தினாலும், இதனை வளர்த்து எடுத்தெடுத்துள்ளார் - என இ.தொ.காவின் தேசிய அமைப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான எஸ். ஜெகதீஸ்வரன் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை காங்கிரஸ் தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கை ஐக்கிய தொழிலாளர் முன்னணியைச் சேர்ந்த கணபதி கனகராஜ், அதே கட்சியைச் சேர்ந்த சிவசுந்தரம் ஆகியோர் தமது ஆதரவாளர்கள் சகிதம் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் முன்னிலையில் இ.தொ.காவில் இணைந்து கொண்டனர்.

கனகராஜின் இந்த இணைவு குறித்து ஜெகதீஸ்வரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இ.தொ.காவுக்கு மலையகத்தில் அசைக்க முடியாத வரலாறு உண்டு. இதனுடன் இணைந்து பயணம் செய்வதற்கு பலர் முன்வந்துள்ளனர். விவேகமும், அனுபவ முதிர்ச்சியும் உடையவர்களுக்கே இ.தொ.கா. அன்று தொடக்கம் இன்று வரை முக்கியத்துவம் வழங்கி வந்திருக்கின்றது. புத்திஜீவிகளுக்கு பதவி வழங்குவதில் முன்னுரிமை கொடுத்தும் வந்திருக்கின்றது.

இந்த வகையில் எம்மையும் இ.தொ. காவையும் விட்டுச் சென்றவர்கள் எம்மோடு மீண்டும் இணைந்துகொள்ளும் சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது. அறிவும், விவேகமும், சுயசிந்தனையும் கொண்டவர்களால் தான் தொழிற்சங்கத்தை நேரிய பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

சாணக்கியம் இருந்தால் மட்டுமே அரசியலில் பிரகாசிக்க முடியும் என்பதையும், விவேகமற்றவர்களால் எதையும் சாதிக்க முடியாது என்பதையும் உணர்ந்துள்ள கனகராஜ் இ.தொ.காவில் பிரவேசித் திருக்கிறார். இது தொழிற்சங்கத் துறையிலும், அரசியல் வாழ்விலும் அவரது நல்லெண் ணத்தை வெளிப்படுத்தியுள்ளது.




எனவே, மலையக சமூக மேம்பாடு கருதி உழைப்பதற்கு எவர் முன்வருகின்றாரோ அவர்களை இ.தொ.கா. அரவணைக்கும். இதை சமூக மாற்றத்தை விரும்பும் அனைவரும் உணர்ந்து கொள்வார்கள் - இப்படி ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org